Annamal Ponnampalam

த.ம.
4272

சு 16 116

# விஷவைத்திய சிந்தாமணி

சிறுமணவூர், முனிசாமி முதலியார்
அவர்கள் இயற்றியது

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
இல. 7-57 ஆம் ஒழுங்கை,
கொழும்பு 6

C. MUNISWAMY MUDALIAR & SONS.

THE
SOUTH INDIAN BOOK DEPOT,
2/17, CORAL MERCHANT ST., MADRAS.

Copyright] 1931 [Price As. 12

உயிரெழுத்து

## மூலிகை மர்மம் 4 பாகங்கள் ரூபா 3

1. மூலிகை மர்மம் முதலாம் பாகத்தில் பிரம சிருஷ்டியால் உலகத்திலுண்டா யிருக்கும் 600-வித மூலிகைகளின் தலையெழுத்துக்களை அ-ஆ-இ-ஈ-உ-ஊ-எ-ஏ-ஐ-ஒ-ஓ ஆகிய உயிரெழுத்துகளின் வரிசைக் கிரமம்போல் பிரித்து ஒவ்வொரு மூலிகையால் நிவர்த்தியாகக் கூடிய வியாதிகளையும் வியாதிகளுக்கு இன்னின்ன விதமாய் உபயோகிக்க வேண்டுமென்ற செய்முறைகளையும் ஆயுர்வேத விதிப்படி அச்சிட்டிருக்கின்றது.

2. இரண்டாம் பாகத்தில் அளவிறந்த ரோக பாகங்களை அங்கன்னியாச விதிப்படிச் சிரரோகம், நேத்திரரோகம், தந்தரோகம், நாசிரோகம், செவிரோகம், கண்டமாலை, அறையாப்பு, பிரமியம், மூலம், பவுத்திரம், நீரடைப்பு, நீர்க்கட்டு, தாருட்டிய விருத்தி முதலான, ரோக பாகங்களைப் பாதாதிகேசம் வரையில் அங்கம் பிரித்து கைபாகம் செய்பாகத்தோடு அச்சிட்டிருக்கின்றது.

3. மூன்றாவது பாகத்தில் அஷ்டகர்ம மென்னும் வசிய மூலிகை, மோகன மூலிகை, தம்பன மூலிகை, உச்சாடன மூலிகை, (எட்டெட்டு) 64-மூலிகைகளும் இன்னின்ன பாகத்திற் குபயோகமாகு மென்பதையும் அவைகளை யெடுப்பதற்கு அதர்வண வேதப்படிக் காலம் வாரம் ஹோரபூசை மந்திரம் இவற்றுடன் அநேக ரோக சாந்தி மூலிகையும் செய்பாகமும் அச்சிட்டிருக்கின்றது.

4. நான்காம் பாகத்தில் பெண்பாலுக்குரிய வியாதிக் கூட்டங்களை அங்கத்தில் பிரித்து, பிள்ளையில்லாதவர்க்கு, பாலில்லாதவர்க்கு, பால் அதிகப்பட்டவர்களுக்கு, ருதுவில்லாதவர்க்கு, மாத முழுக்கில்லாதவர்க்கு, சூதகக்கட்டுக்கு, பெரும்பாட்டுக்கு, ஜன்னிகளுக்கு இன்னும் அநேக வியாதிகளுக்கு, இம்மாதிரி ரோகபாகங்களைப் பிரித்து, இன்னும் அநேக அரிய பெரிய மூலிகைகளின் உபயோகங்களைக் கைபாகம் செய்பாகத்துடன் அச்சிட்டிருக்கின்றது. தபாற் கூலி அணா 8

---

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# விஷவைத்திய சிந்தாமணி

நடராஜப்பத்து முதலிய தோத்திர நூல்களையும், மூலிகை மர்மம், கனக சாஸ்திரம், விஷ வைத்திய சிந்தாமணி, சுகந்த பரிமள சாஸ்திரம் முதலிய வைத்திய நூல்களையும், நவகண்டஆருடம், கஷ்டஜாதக கணிதம் முதலிய சோதிட நூல்களையும், நவக்கிரக மகாமந்திரம், மலையாள மாந்திரீகபோதினி முதலிய மந்திர நூல்களையும், நாரதர் கலகம், பிரபஞ்ச உற்பத்தி முதலிய சரித்திர நூல்களையும் இயற்றிய ஆசிரியரும்

ஆயுர்வேத வைத்தியருமான


## சிறுமணவூர் முனிசாமி முதலியார்


இயற்றியது


சி. முனிசாமி முதலியார் அண்டு ஸன்ஸ்.

தென்னிந்திய புஸ்தக சாலை,

2-17, பவழக்காரத் தெரு, சென்னை.

காபிரைட்] 1931 [விலை அணா 12

THE PROGRESSIVE PRINTERS,
2/17, CORAL MERCHANT ST.,
MADRAS.



சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# விஷவைத்திய சிந்தாமணி

## காப்பு

சீரார் விஷவைத்ய சிந்தா மணிநூலைப்
பாரா ரறியவுரை பன்னுதற்கு—நீராரும்
பிஞ்சுமதி குஞ்சிசடைப் பெம்மானா ரன்றளித்த
கஞ்சமத வாரணன்றாள் காப்பு.

பூவுலகிலுள்ள விஷப் பிராணிகளின் பூர்வோத்தரங்களை நன்குணர்த்துவோமாக. அதாவது காசிபன் மனைவியாகிய கத்துரு வென்பவளின் வயிற்றிலுதித்த விஷப் பிராணிகள் அளவிறந்தனவாயினும் இந்த அண்டகோடிகளுக்குள்ளே சர்ப்பங்களில் தலைமையாயும் உத்தம ஜாதியாயுமுள்ள சர்ப்ப பேதங்களையும் மற்றுமுள்ள சில விஷ பேதங்களையும் கிரமமாகச் சொல்லுவோம்.

## உத்தம ஜாதி சர்ப்பங்களின் பெயர்கள்

1. வாசுகி
2. அநந்தன்
3. தக்கன்
4. சங்கபாலன்
5. குளிகன்
6. பதுமன்
7. மகாபதுமன்
8. கார்க்கோடகன்

## ஜாதி பேதம்

| | |
|---|---|
| வாசுகி யென்னும் சர்ப்பமானது | க்ஷத்திரிய ஜாதி |
| அநந்தனென்னும் சர்ப்பமானது | பிரம ஜாதி |
| தக்கனென்னும் சர்ப்பமானது | வைசிய ஜாதி |
| சங்கபாலனென்னும் சர்ப்பமானது | க்ஷத்திரிய ஜாதி |
| குளிகனென்னும் சர்ப்பமானது | பிரம ஜாதி |

| | |
|---|---|
| பதுமனென்னும் சர்ப்பமானது | சூத்திர ஜாதி |
| மகாபதுமனென்னும் சர்ப்பமானது | வைசிய ஜாதி |
| கார்க்கோடகனென்னும் சர்ப்பமானது | சூத்திர ஜாதி |

## உத்தம ஜாதி சர்ப்பங்களிருக்கும் இடங்களும், அவைகளினுடைய மணமும், ஆடேந் திசையும், படத்தின் குறியும், நிறமும், வயதும்:

### வாசுகி

வாசுகியென்னும் சர்ப்பமானது கிழக்குத் திக்கில் விருக்ஷத்தடியி லிருக்கும். அது இருக்கு மிடத்தில் தாழம்பூ வாசனை வீசும். மனிதரைப் பார்த்தபடி எதிர் நோக்கி ஆடும். அதன் படத்தில் சக்கரம் போல் குறியும் கருங்குவளைப் பூப்போல் புள்ளிகளுமிருக்கும். அறுகங் கிழங்கு, வண்டு இவைகளைப் புசிக்கும். அதன் தேகம் பொன்னிறமா யிருக்கும். அதற்கு வயது 800.

### அநந்தன்

அநந்தனென்னும் சர்ப்பமானது தென்கிழக்குத் திக்கில் தெய்வ ஸ்தலத்தில் வாசமாயிருக்கும். அது இருக்கு மிடத்தில் நாவிப்பூ மணம் வீசும். அண்ணாந்து பார்த்து ஆடும். படத்தில் சங்குபோல் குறியும், வெண்டாமரைப் பூப்போல் புள்ளிகளுமிருக்கும். அது பசி வேளையில் காற்றைப் பிடித்து உணவுகொள்ளும். அதன் தேகம் சிவந்த நிறமாயிருக்கும். அதற்கு வயது 1008.

### தக்கன்

தக்கனென்னும் சர்ப்பமானது தெற்குத் திக்கில் பாழ்மனையில் வாசமாயிருக்கும். அது இருக்குமிடத்தில் பாதிரி வாசனை வீசும். நான்கு திசைகளும் நோக்கியாடும். அதன் படத்தில் வில்லைப்போல் குறியும், துவாதசத்தின் வடிவான புள்ளிகளு மிருக்கும். அதன் தேகம் கம்மிய வெண்மை நிறமாகும். ஓணான், எலி இவைகளை உணவாகக் கொள்ளும். அதற்கு வயது 500.



### சங்கபாலன்

சங்கபாலனென்னும் சர்ப்பமானது தென்மேற்குத் திக்கில் மரத்தடியில் வாசமாயிருக்கும். அது இருக்குமிடத்தில் தாழம்பூ வாசனை வீசும். எதிர்நோக்கி யாடும். அதன் படத்தில் திரிசூலம் போலாவது அல்லது பிறை போலாவது குறியிருக்கும். கிழங்கு தினுசுகளைப் புசிக்கும். அதன் தேகம் பொன்னிறமா யிருக்கும். அதற்கு வயது 800.

### குளிகன்

குளிகனென்னும் சர்ப்பமானது மேற்குத் திக்கில் பாழடைந்த தேவாலயங்களில் வாசமா யிருக்கும். அது இருக்குமிடத்தில் மலர்மணம் வீசும். அண்ணாந்து பார்த்தாடும். வாயுவைப் பிடித்து ஆகாரமாய்க் கொள்ளும். அதன் தேகம் சிவந்த நிறமா யிருக்கும். அதற்கு வயது 1008.

### பதுமன்

பதுமனென்னும் சர்ப்பமானது வடமேற்குத் திக்கில் புற்றுகளி லிருக்கும். அது இருக்கு மிடத்தில் இலுப்பைப்பூ வாசனை வீசும். பூமியைப் பார்த்தபடி ஆடும். அதன் படத்தில் புள்ளடி போல் குறியும் பஞ்சகோணப் புள்ளிகளு மிருக்கும். அதன் தேகம் கருமை நிறமாயிருக்கும். மீன், தவளை இவைகளைப் புசிக்கும். வயது 300.

### மகா பதுமன்

மகா பதுமனென்னும் சர்ப்பமானது வடக்குத் திக்கில் பாழ்மனைகளில் வாசமாயிருக்கும். அது இருக்கு மிடத்தில் பாதிரிப்பூ வாசனை வீசும். பல திசைகளையும் நோக்கி யாடும். அதன் படத்தில் தனுசைப்போல் குறியும் ராஜவர்த்தனைக் கல்லைப்போல் பிரகாசமான புள்ளிகளுமிருக்கும். அதற்கு ஆகாரம் ஓந்தி, தவளை, எலி, நத்தை இவைகள். அதன் தேகம் வெண்மை நிறமாயிருக்கும். அதற்கு வயது 500.

## கார்க்கோடகன்

கார்க்கோடகனென்னும் சர்ப்பமானது வடகிழக்குத் திக்கில் புற்றுகளில் வாசமாயிருக்கும். அது இருக்குமிடத்தில் இலுப்பைமலர் வாசனை வீசும். பூமியைப் பார்த்த படியாடும். படத்தில் புள்ளடிபோல் குறியும் மூன்று கண்களைப்போல் புள்ளிகளு மிருக்கும். ஜலத்திலும் குளக்கரையிலுமுள்ள ஊர்வனவாகிய ஜீவன்களைப் புசிக்கும். தேகம் மிகவும் கறுத்த நிறமாயிருக்கும். இதன் வயது 300.

## உத்தம ஜாதி சர்ப்பங்க ளுற்பத்தி

இவைகள் ஆனி மாதத்தில் புணர்ந்து, ஆடி, ஆவணி மாதங்களில் வயிறுளைந்து, கார்த்திகை மாதத்தில் பொன், எருக்கம்பூ, வெண்மை ஆகிய இந்த நிறங்களாக 248-முட்டைகளிட்டு ஏழுநாள் அவயங் காக்குமென்றும் அம்முட்டைகளில் ஆண் முட்டைகள் மகிழ் விரியாத எருக்கம்பூ மொக்கைப் போலும் பெண் முட்டைகள் வாகைப்பூ அரும்பைப்போலும் இரண்டு பேதமாயிருக்குமென்றும் அதை யீன்ற தாயானது ஏழு நாட்களுள் 228-முட்டைகளைப் புசிக்குமென்றும் 4-முட்டைகள் அழியுமென்றும் 16-முட்டைகள் பொரிந்து குட்டிகளாகித் திரியுமென்றும் அக்குட்டிகளுக்கு மயிர்போல் 24-கால்களிருக்குமென்றும் அவைகள் பிறந்த 28-வது நாளில் சூரியனை நோக்கிப் படம் விரித்து ஆடி விஷம் பெற்றுக் கொண்டு தனித் தனியே பிரியுமென்றும், 60-வது நாளில் தோலுரிக்கு மென்றும் 6-வது மாதத்தில் பல்லும் நஞ்சும் வாலும் பிரகாசமாய்த் தோன்று மென்றும், இவைகள் ஒருவனைக் கடிக்கும்போது கடியுண்டவனுக்கு இறப்புண்டோ இல்லையோ வென்று சந்தேகிக்குமென்றும், இவைகளுக்குக் கண்களே காதாக விருக்கு மென்றும், (ஆகையால் இவைகளுக்குக் கட்செவி யெனப் பெயர்) இவைகளின் வாயில் கீழ்வரிசையில் காளி, காளாத்திரியென இரண்டு பற்கள் உண்டென்றும், இவ்விஷங்கள் மணிமந்திர அவுஷதாதிகளுக்கு அஞ்சுமென்றும் சித்தர் ஆரூட விருத்தப்பா கூறும்.



## பல ஜாதி சர்ப்பங்க ளுற்பத்தி

உத்தம ஜாதி சர்ப்பங்கள் சித்திரை மாதம் புணர்ச்சியில் இச்சையுண்டாகி ஆனி மாதத்தில் ஆணும் பெண்ணும் இடை விடாது திரிந்து ஆடி மாதத்தில் கூடி இழைந்து சூலுண்டாகிக் கார்த்திகை மாதத்தில் 100, 200, 400, முட்டைகளிடும். இவற்றுள் சில முட்டைகள் பெருங் காற்றினாலும் அதிக தீட்சண்யத்தினாலும் கெடுதியை அடையும். மற்ற முட்டைகள் தமக்குத்தாமே விரிந்துடைய அவைகளில் நின்றும் சிறு சிறு குட்டிகள் வெளிப்பட்டுலவும். இக்குட்டிகளுக்குக் கீழ்வாய் வரிசையில் காட்டு வாகைப்பூ, கேசரப் பிரமாணங்களை யொத்த மஞ்சள் நிறமான ஏழு கோறைப்பற்கள் முளையும். இவற்றுள் பகலில் விஷமிருப்பன 4. இரவில் விஷமிருப்பன 3. இவ்விஷம் 2, 3-என்னும் துளிக் கணக்காக விழும். இக்கோறைப்பற்கள் வருஷத்திற் கொருதரம் விழுந்து முளைக்கும். இவ்வித விஷசர்ப்ப ஜாதிகள் 40 விதங்களும், விஷமில்லாத சர்ப்ப ஜாதிகள் 44 விதங்களுமாம். இவற்றுள் பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர ரென்னும் 4 ஜாதி சர்ப்பங்களும், ஆண் பெண் அலியென்னும் 3 குறிப்புகளையுடைய சர்ப்பங்களும், மலடென்னும் நோய்க்குறி பெற்ற சர்ப்பமும், பால்யம் யௌவனம் விருத்தாப்பிய மென்னும் முப்பருவங்களையுடைய சர்ப்பங்களுமுண்டு. இவைகளுக்கு ஆயுள் 1000, 800, 500, 300, 200, 100, 26-என்னும் வருஷங்களாம். சில ஜாதிகளுக்கு ஆயுள் 5, 20, 55-என்னும் வருஷங்களாம். இச்சர்ப்ப ஜாதிகளுக்குள் பிறக்காமல் பசுவின் நாசியில் ஜனித்து வருகின்ற சர்ப்பம் ஒருவித முண்டென்றறிக. சூரிய வெப்பம் மிகுந்த தேசத்திலிருக்கின்ற சர்ப்பங்களுக்கெல்லாம் விஷம் அதிகமாம்.

## பிரம சர்ப்பம்

இது மேற்புறத்தில் வெளுப்பு, கறுப்பு, சிவப்பு, கபில நிறமென்னும் நிறங்களையும், படத்திற் சங்கத்தின் வடிவான புள்ளிகளையும், அதிக சீறலுடன் கோபத்தையும், தாமரைப்பூ குறுவேர் வெட்டிவேர் காட்டு வாகைப்பூ குங்கிலியம் நாபியாகிய இவைகளின் மணங்களையும் பெற்று ஆலயங்களில் சஞ்சரிக்கும். இது படம் விரித்து ஆகாயத்தைப் பார்த்து நின்றாடும். காற்றையும் பூமணத்தையும் புசிப்பாகக் கொள்ளும். இதற்கு வயது 1008 என்றறிக. அன்றியும் இது இரத்த நிறத்தைப் பெற்றுச் சனிவாரத்தினிரவிலும் ஆதிவாரத்திலும் இரையெடுக்குமென்றும், உதய முதல் பத்து நாழிகை வரையில் வெளியில் திரியுமென்றும், கடிக்கும் போது முன் பக்கத்திலும் வலப்பக்கத்திலும் கடிக்குமென்றும் சித்தர் ஆரூட மென்னும் சாஸ்திரம் சொல்லுகிறது.

## க்ஷத்திரிய சர்ப்பம்

இது மேற்புறத்தில் பொன், பேரீச்சம் பழம், திராட்சைப்பழம், நாவற்பழமென்னும் நிறங்களையும், படத்தில் சந்திரன் சங்கு சக்கரம் கலப்பை ஆகிய இவைகளையொத்த புள்ளிகளையும், மிகுந்த பகையுடன் கோபத்தையும், சிவந்த நேத்திரத்தையும், காசிப்பூ, செண்பகப்பூ, தாழம்பூ, புன்னைப்பூ, அறுகங்கட்டை யென்னு மிவைகளின் மணத்தையும் பெற்று விருக்ஷப் பொந்துகளில் வாசஞ்செய்யும். இது படம் விரித்து ஆடும்போது சமப்பார்வையுடன் ஆடும். அறுகங் கிழங்கையும் வண்டையும் உணவாகக் கொள்ளும். இதற்கு வயது 800 என்றறிக. அன்றியும் இது சனிவாரப் பகலிலும் சோமவாரத்திலும் எலியை இரையாகக் கொள்ளுமென்றும், பகலில் உதயம் பத்து நாழிகை முதல் இருபது நாழிகை வரைக்கும் வெளியில் திரியுமென்றும், இடப்பக்கத்திலும் வலப்பக்கத்திலும் கடிக்குமென்றும், அக்கடியினால் பித்தமே அதிகரிக்குமென்றும் சில நூற்கள் கூறுகின்றன.



## வைசிய சர்ப்பம்

இது மேற் புறத்தில் வச்சிரம் கோமேதகம் புரு இவைகளின் சாயலையும், உடம்பு முற்றிலும் சிவப்பு வெளுப்பு மஞ்சள் புகை இவைகளின் நிறஞ் சேர்ந்த விருத்தாகாரத்தையும், வில்லுருவமொத்த புள்ளிகளையும், பாதிரிப்பூ பால் நெய் வெள்ளாடு செம்மறியாடு இவைகளின் மணத்தையும் பெற்று மனைகளில் வாசஞ் செய்யும். இது படம் விரித்து நாலு திசையும் பார்த்து நின்றாடும். ஓந்தியையும் எலியையும் உணவாகக் கொள்ளும். இதற்கு வயது 500 என்றறிக. அன்றியும் இது சுக்கிர வாரத்திலும், மங்கள வாரத்திலும் தவளையை இரையாகக் கொள்ளுமென்றும், உதயாதி இருபது நாழிகை முதல் முப்பது நாழிகை வரைக்கும் வெளியில் திரியுமென்றும், இடப்புறத்திலும் பின்புறத்திலும் கடிக்குமென்றும், அக்கடியினால் கபமே அதிகரிக்குமென்றும் விஷநூல் கூறும்.

## சூத்திர சர்ப்பம்

கரி கோதுமை நிறங்களையும், உடலெல்லாம் புள்ளடிபோன்று சிறுத்த நீண்ட புள்ளிகளையும், யானை, காட்டெருமை, அழுகிய சேறு, ரத்தம், இலுப்பைப்பூ இவைகளின் மணத்தையும் பெற்றுப் புற்றுக்களில் வாசஞ்செய்யும். இது படம் விரித்துப் பூமியைப் பார்த்துக் கவிழ்ந்து நின்றாடும். தவளை மீன் இவைகளை உணவாகக் கொள்ளும். இதற்கு வயது 200 என்றறிக. அன்றியும் இது மங்கள வாரத்திலும் குருவாரத்திலும் எலி முதலிய யாவற்றையும் இரையாகக்கொள்ளுமென்றும், வைசிய சர்ப்பத்தைப் போலவே கடிக்குமென்றும், அந்தக் கடியினால் தொந்த கபம் அதிகரிக்குமென்றும் சில நூல்களில் சொல்லப்படுகின்றது. இந்நான்கு ஜாதி சர்ப்பங்கள் தவிர மற்ற சங்கர ஜாதி சர்ப்பங்கள் கடிப்பதற்குப் பக்கபேதமும் ஸ்தானபேதமுமில்லை யென்றறிக.

## உத்தம ஜாதி சர்ப்பங்களுடைய பற்களின் பெயர்

முதற் பல்லின் பெயர்—காளி.
இரண்டாம் பல்லின் பெயர்—காளாத்திரி.
மூன்றும் பல்லின் பெயர்—இயமன்.
நான்காம் பல்லின் பெயர்—இயமதூதன்.

இந்தப் பற்கள் நான்கில் காளி, காளாத்திரி யென்னும் இரண்டு பற்கள் மேல் வரிசையிலும், எமன் எமதூதனென்னும் இரண்டு பற்கள் கீழ் வரிசையிலுமிருக்கும். இவைகட்குத் தொட்டியைப் போன்ற சிறு தொளைகளுள்ளனவாம். சர்ப்பம் கடிக்கும்போது அந்தத் தொளையின் வழியாய் விஷம் கழன்று கடிவாயிலிறங்கும். இறங்கினவுடன் 96-மாத்திரை சென்று ஒவ்வொரு பல்லுக்கும் உரிய பாகம் போல் அதி விரைவில் இரத்த தாதுவிற் பாய்ந்து மேலுக்கேறித் தத்தமது ஜாதி பேதப்படி மணிதருக்கு இடுக்கணுண்டாக்கும்.

## விஷநீர் அடையாளம்

காளியென்ற பல்பட்டால் பனிஜலம்போல் நீர்கசியும்
காளாத்திரியென்ற பல்பட்டால் மஞ்சள்நிற நீர்கசியும்
எமனென்ற பல்பட்டால் செந்நீர் கசியும்
எமதூதனென்ற பல்பட்டால் கழுநீர்போல் கசியும்

## பல்லின் அடையாளம்

காளியென்றபல் பட்டவிடம் புள்ளடிபோலிருக்கும்
காளாத்திரியென்றபல் பட்டவிடம் முக்கோணம்போ லிருக்கும்
எமனென்றபல்பட்டவிடம் முள்தைத்தகீற்றுப்போல் காயமிருக்கும்
எமதூதனென்றபல் பட்டவிடம் வில்லைப்போலிருக்கும்.

## கடி கணக்கு

ஒரு பல் பட்டால் கால்கடி யென்றறியவும்.
இரண்டு பல் பட்டால் அரைக்கடி யென்றறியவும்.
மூன்று பல் பட்டால் முக்கால்கடி யென்றறியவும்.
நான்கு பல் பட்டால் முழுக்கடி யென்றறியவும்.



## விஷக் கணக்கு

ஒருபல் பட்டால் விஷமானது தோலைப்பற்றியேறும்.
இரண்டுபல் பட்டால் விஷம் மாமிசத்தைப்பற்றியேறும்.
மூன்றுபல் பட்டால் விஷமானது எலும்பைப்பற்றியேறும்.
நான்குபல் பட்டால் விஷமானது மூளையைப்பற்றியேறும்.

## விஷப் பல்லின் சாத்தியாசாத்தியம்

ஒருபல்லழுந்தினால் அந்தவிஷம் மூலிகை சிகிச்சையால் தீரும்.
இரண்டுபல்லழுந்தினால் அவ்விஷம் மணிமந்திர ஔடதத்தால் தீரும்.
மூன்றுபல்லழுந்தினால் அவ்விஷம் ஓர்விதத்தால் தீரும்.
நான்குபல்லழுந்தினால் அவ்விஷம் நீங்குவதே அசாத்தியமாகும்.

## மீளாக் கடி

ஒரே பல் அழுந்தினபோதிலும் அந்தப்பல் அழுந்தின விடத்திலிருந்து இரத்தம் வடிந்தாலும் அல்லது பல்லழுந்தின விடத்தில் திருகியதுபோல் சக்கராகாரமாகத் தோற்றினாலும், அந்த இடம் ஆமையோட்டைப்போல் மேலெழும்பித் தடித்து வீங்கினாலும் அசாத்தியமாகும். ஆகிலும் மணிமந்திர ஔஷத வலியும் தெய்வ வலியும், விதிவலியும் திடமாயிருக்குமாகில் கஷ்டத்தின் பேரில் உயிர் மீண்டுவரும்.

## தாடைப் பல்லின் லக்ஷணம்

சில சர்ப்பங்களுக்குத் தாடைக்குள் முள்ளைப்போல் ஒவ்வொரு கோரைப்பல் முளைத்திருக்கும். அந்தக் கோரைப்பல் பட்டு விஷமேறுமானால் உடனே அபாயம். அவ்விஷம் மீளாது.

## கடியின் அசாத்திய நிறம்

சர்ப்பம் கடித்த இடத்தில் கறுப்பு நிறமாகவும், கனிந்த நாவற்பழ நிறமாகவு மிருந்தால் அவ்விஷம் மிகவுங் கொடியதென் றறிக.

## கடி மணத்தின் நிதானம்

சர்ப்பம் கடித்த இடத்தில் முகர்ந்து பார்த்தால் தாழைமலர் வாசனை வீசினால் நல்லபாம்பென் றறியவும்.

புளியம்பூ வாசனை வீசினால் மண்டலப்பாம்பென் றறியவும். சுக்கு மிளகு இவைகளின் வாசனை வீசினால் சிறிய பாம்பென்று நிதானிக்கவும். மணம் யாதொன்றும் வீசாமலிருந்தால் சில்லரை விஷங்களென் றறியவும்.

## மரண ஸ்தானம்

மனிதருடைய தலை, நெற்றி, புருவமையம், தாடை, உதடு, நெஞ்சு, உள்ளங்கை, மார்பு, ஸ்தனம், அக்குள், தொப்புள், ஆண்குறி அல்லது பெண்குறி, குதம், உள்ளங்கால் இந்த இடங்களில் சர்ப்பம் தீண்டுமாகில் தப்பாமல் மரணமேயாம்.

## திதிபேத மரண நிதானம்

பருவம், அமாவாசை, பஞ்சமி, பிரதமை, அஷ்டமி, நவமி இந்த ஆறு திதிகளில் சர்ப்பம் கடித்தாலும், மயானத்தில் சர்ப்பம் கடித்தாலும், பலபேர் கூடும்போது மரத்தடியில் கடித்தாலும், சூரிய உதயத்திலாவது மாலை மயங்குங் காலத்திலாவது அயர்ந்து நித்திரை செய்கிற காலத்திலாவது பாதி ராத்திரியிலாவது சர்ப்பம் கடித்தாலும் மரணமாகும்.

## நக்ஷத்திர பேத நிதானம்

பரணி, கார்த்திகை, ஆயிலியம், விசாகம், பூரம், பூரட்டாதி, பூராடம், சதையம், மகம், திருவோணம், மூலம். சித்திரை. சோதி இந்த நக்ஷத்திரங்களும், இந்த நக்ஷத்திரத்துடன் பூரண பருவம் அமாவாசை கூடின தினமானாலும் தன்னுடைய ஜென்ம நாளானாலும் அப்போது சர்ப்பம் கடிக்குமாகில் அசாத்தியமாமென்று சில நூற்கள் சொல்லுகின்றன.

## சர்ப்பங்கள் தீண்டப்படா அசாத்ய இடங்களாவன :

| | |
|---|---|
| பிடாரிகோயில் | மூங்கிற்புதர் |
| துர்க்கைகோயில் | நந்தவனம் |
| பாழுங்கோயில் | பிரப்பம்புதர் |
| ஐயனார்கோயில் | மயானம் |



| | |
|---|---|
| யாகசாலை | நாணற்புதர் |
| பாழும்வீடு | ஏரிக்கரை |
| பாழூர் | நதிக்கரை |
| ஆலமரத்தடி | சுனைக்கரை |
| அரசமரத்தடி | நீரில்லாத்தாமரைக்குளம் |
| புன்னைமரத்தடி | முகத்துவாரம் |
| புளியமரத்தடி | புதுமனை |
| முருங்கைமரத்தடி | தேரடி |
| சந்தனமரத்தடி | புற்று |
| வீட்டுக்கூறை | நாற்சந்துநடு |

மேற்கூறிய இடங்களிலிருந்து உத்தம ஜாதி சர்ப்பமாவது சங்கரஜாதி சர்ப்பமாவது எந்தச் சர்ப்பம் கடித்தாலும் அந்த விஷம் அசாத்தியமேயன்றி லகுவில் இறங்காது; பிழைப்பானென்ற நிச்சயங் கிடையாது.

## கடித்த சர்ப்பத்தின் கடின குறி

மனிதரைக் கடித்த சர்ப்பமானது கடித்தவுடனே படத்தை விரித்து ஆடினாலும், தரையில் புரண்டாலும் கடித்த இடத்தில் ஆடிப் பின்பு அசைவற்றிருந்தாலும் கடியுண்டவனுக்கு விஷம் மீளாதென்றறிக.

## அற்ப விஷங்கள்

பசி, தாகம், வியாதி, கீரியைக் கண்டு வெருண்டோடல், அக்கினி கண்டு மீண்டோடல், தோலுரித்தல், விஷங் கக்குதல் இவைகளால் மெலிந்த சர்ப்பங்களும், தர்ப்பைப் புதர், முள், எறும்புப்புற்று இவ்விடத்திலுள்ள சர்ப்பங்களும், மந்திரவாதிகள் இருக்கிற ஊரிலுள்ள சர்ப்பங்களும் அதாவது கீழ்ஜாதிப் பாம்புகளும் கடிக்குமாகில் அது அற்ப விஷமென் றறிக. இவ்விஷங்கள் எளிதில் நீங்கும்.

## கடியாக்கடி

கடிவாயினிடத்தில் அணுவேனும் விஷம்பட்ட மாத்திரத்தில் எரிச்சல், அக்கினிபட்ட குணம், கடிவாயில்

தினவு, நோவு, வீக்கம், கண்சோர்வு, சீற்றல் இக்குணங்கள் உண்டாக்கும். இந்தக் குறி இல்லாவிட்டால் அந்த மனிதன் சர்ப்பத்தின் வாய்க்கு சம்பந்தப்பட்டு விதிவலியால் மாண்டானேயன்றி விதியும் விஷமும் சம்பந்தப்படவில்லை யென்றறிக. (அதாவது பாம்பைப் பார்த்து பயந்து மருண்டு ஓடி மயங்கிப் பிதற்றுகிறானென்றறிக.) இந்த மயக்கம் தந்திரத்தால் நிவர்த்தியாகும்.

## விஷப் பரீக்ஷை

சர்ப்பங்கள் கடித்தவுடன் கசப்பு வஸ்துக்களைத் தின்றால் அந்தச் சுவை யாறுபட்டு இனிப்பு, துவர்ப்பு, புளிப்பு முதலியவை தோற்றினாலும், தலைமயிரைப் பற்றி இழுத்தால் நோய் தெரியாதிருந்தாலும், காதை மூடினால் உள்ளிரைச்சல் இல்லாதிருந்தாலும், சூரியன், சந்திரன், அக்கினி அல்லது விளக்கு இவைகள் கண்ணுக்குத் தோற்றாதிருந்தாலும், தன் விரல் நகங்களைக் கிள்ளினாலும் விஷம் தலைக்கேறினதென்று நிதானித்து உடனே சகல சிகிச்சையும் செய்யவேண்டும்.

## உயிர் நிலை

விஷத்தினால் உயிர் அடங்கி யிருக்குங் காலத்தில் கண்கள் மேல் நோக்கி யிருக்குமாகில் உயிரானது ஊர்த்துவாகாரமான மேற்புறம் நோக்கி லலாடத்திலிருக்கிறதென்றறியவும். கண்களானவை கீழ் நோக்கி யிருக்குமாகில் உயிர் கீழடங்கி யிருக்கிறதென்றறியவும். கண்களானவை விழித்தபடியே எதிர் நோக்கிச் சமப்பார்வையாய் இமைசிமிட்டாதிருந்தால் உடலை விட்டு உயிர் நீங்கிப்போய்விட்டதென்றறியவும்.

## உயிர் பரீக்ஷை

விஷத்தால் இறந்தவனது தேகத்தில் பிரம்புகொண்டடிக்கில் துடித்தாலும், அல்லது வெதுப்பலோடு சிவந்தாலும், அச்சவத்தைக் குளத்தில் போட்டு அழுத்தினால் அல்லது சுத்த ஜலத்தை மேலே கொட்டினால் உடம்பு



குளிர்ச்சி கண்டு ரோமஞ் சிலிர்த்தாலும், கைவிரல் கால் விரல்களைக் குலுக்கி யிழுத்தொடிக்கையில் நெட்டை ஒடிந்தாலும், தலைமயிரைப்பற்றி இழுத்தால் சொற்ப வலியுடன் அருவருப்பு கண்டாலும் தாதுக்களில் ஒன்றாவது சொற்ப நடையாகக் கண்டாலும் உயிர் அடங்கியிருக்கிறதென்று நிதானித்து உடனே பலவித சிகிச்சைகளையும் செய்தால் பிழைப்பான். ஆதலால் விஷத்தினால் உயிர் அடங்கிய சவத்தை 90 நாழிகை வரையிலும் தகனம் செய்யக்கூடாதென்று சத்தியாரூடம் சித்தாரூடம் நாகாரூடம் முதலிய சில சாஸ்திரங்கள் கூறுகின்றன.

## சர்ப்பம் கடிப்பதற்குக் காரணம்

தன் பசிக்காகவும், பயந்த காலத்திலும், கோபத்தினாலும், சுபாவ குரூரத்தினாலும், தன்னை மிதித்தாலும், வைராக்கியத்தாலும், சாபத்தினாலும், ஏவலினாலும், தெய்வ கதியினாலும், காலகதியினாலும், கோரைப்பல்விஷம் அதிகரித்தாலும் சர்ப்பம் கடிக்க நேரிடுகிறதென்றறியவும்.

## சர்ப்பங்களின் சத்துரு வகைகள்

சர்ப்பங்களுக்கு இருதலை மணியன், செந்நாய், மயில், அன்னம், எருதின் குளம்பு, மின்னல், இடி, கீரி, கரடி, பன்றி, செம்போத்து, கருடன், முதலை, ஆந்தை, காக்கை, கூகை, புது வெள்ளம், புகை மூடிய அனல் முதலியவைகளும் மனிதரும் சத்துருக்களாம்.

# சங்கர ஜாதி (பல ஜாதி) சர்ப்ப பேதம்

## பௌம சர்ப்ப ஜாதி பேதம்

பௌம சர்ப்பமென்பது கருவீகரம், மண்டலி, ராஜமந்தம், நிர்விஷம், வைகரஞ்சம் என ஐவகை ஜாதியை உடைத்தாய் முறையே 26, 36, 13, 4, 3 என்னும் 82-பேதங்களைப் பெற்றிருக்கின்றது. ஆயினும் தருவீகரம், மண்டலி, ராஜமந்தம் எனக் கூறிய மூவகைச் சர்ப்பங்களுக்குள் பிறக்கிற சங்கர சர்ப்ப ஜாதி பேதங்களுக்குக்

கணக்கில்லை யென்றறிக. இங்ஙனங் கூறிய ஐவகை சர்ப்ப சாதிகளுக்கும் பௌம சர்ப்பங்களெனப் பெயராம். பூமி சம்பந்தம் பௌமம்.

## தருவீகர சர்ப்பம்

இது மிருந்த வேக நடை பொருந்தியதாய் படத்திலும் சர்வாங்கத்திலும் வண்டுக்கண், கலப்பை, குடை, துவசம், அங்குசம் என்னும் உருவங்களை யொத்த புள்ளிகளைப் பெற்றிருக்கும். இதன் விஷமானது கொஞ்சம் உஷ்ணத்துடன் புளிக்கும். இது தலைக்கேறினால் முகம், கண், நகம், சருமம், மூத்திரமாகிய இவைகள் கருத்தல், சிரசில் பாரிப்புடன் நோதல், தலைசுழலல், தேககனதி, வயிற்றிற் சூலை, எரிச்சல், பொருமல், முதுகில் குத்தல், எலும்பு, நரம்பு, இடுப்பு இவ்விடங்களில் வேதனை, தாளிறுகல், இருமல், இரைப்பு, கொட்டாவி, நித்திரை பங்கம், அரோசகம், மலமூத்திரக்கட்டு, நெஞ்சிற் களகள வென்னும் ஒரு சத்தம், விக்கல், பேசக்கூடாமையான ஈனத்தொனி, ஏப்பம், வாயில் நொப்பும் நுரையும் விழுதல், அறிவு நீங்குதல் என்னும் இக்குணங்களுடன் வாத சுபாவக் குறிக ளெல்லாம் உண்டாகும். இதற்கு ஏழு வேகம் உண்டு. அவையாவன:—

1-வது வாயில் ரத்தங் கக்கி முகம் நேத்திராதி இந்திரியங்களுங் கறுத்துச் சரீரத்தில் பூச்சி யூருதல் போலிருத்தல்.

2-வது சர்வாங்கமும் வீங்குதல்.

3-வது சிரசு கனத்துக் கண்சிவந்து பற்களில் நோயுண்டாகுதல்.

4-வது நுரை நுரையான வாந்தியும், எலும்பின் சந்துகளில் நோயும் பிறத்தல்.

5-வது சகல கீல்களிலும் உபத்திரவம் உண்டாகி விக்கலும் தாகமும் அதிகரித்தல்.

6-வது மார்படைப்புடன் தேகம் பருத்து மூர்ச்சை கண்டு பேதியாகுதல்.



7-வது முதுகு, தோள், இடுப்பு ஆகிய இடங்களில் வேதனை யுண்டாகி அவயவங்களில் கொதிப்பேறிச் சுக்கில நாசம் அடைதல் என்பனவாம்.

இந்த ஏழு வேகத்தில் ஐந்து வரைக்கும் சிகிச்சை செய்யலாம். அதற்குமேல் அவுஷதம் நாசமாம். இது கரண்டியைப் போல் படமுள்ளதாகையால் தருவீகர சர்ப்பம் எனப் பேர் பெற்றது. நொச்சில், கருந்துளசி, தும்பை, கஞ்சாங்கோரை, பருத்தி, சிறுதேக்கு, கொட்டாங்கரந்தை என்னும் ஏழு சரக்குகளையும் சிறுநீரில் ஊற வைத்து நசியமிட இதன் விஷம் தீரும்.

அல்லது குப்பைமேனி, சுக்கு, மிளகு, வேளை, வெள்ளுள்ளி என்னும் ஐந்து சரக்கையும் சிறுநீர் விட்டு நறுக்கிப் பிழிந்து நசியஞ் செய்ய விஷமிறங்கும். சீந்தில் கிழங்கையாவது சீவி ஒரு ஆழாக்கு ரசம் உள்ளில் தங்கும் படிக்குத் தின்னச்சொல்ல விஷம் மீளும்.

## மண்டலி சர்ப்பம்

இது மந்த நடையை உடைத்தாய் சிரசில் அநேக பேதவன்னமாய் மண்டலாகார உருவங்களை யொத்த புள்ளிகளைப் பெற்றிருக்கும். இதன் விஷமானது மஞ்சள் நிறத்துடன் காரமாக உறைக்கும். இது தலைக்கேறினால் கடிவாயில் சுடுகையாயிருக்கும். வேதனையுடன் குத்துதல், எரிதல், நோதல், முகம் மினுமினுத்து மஞ்சளைப் போ லிருத்தல், அவ்வாறே சகலவஸ்துக்களும் காணப்படுதல், தலைநோய், வயிறு கருத்தல், வாயுவால் சுரம், தாகம், நரம்பு சுளுக்குதல், நாசியிலும் வாயிலும் அக்கினிசுவாலை போல் சுவாசம் வருதல், பாதாதிகேசம் வரைக்கும் புகை சூழ்ந்ததுபோ லிருத்தல், மூர்ச்சை, சீதளத்தில் விருப்பமென்னும் இக்குணங்களுடன் பித்த சுவாசக் குறியெல்லாம் உண்டாகும். இதற்கு ஏழுவேகமுண்டு. அவையாவன:—

1-வது குளிர்ச்சியான ரத்தம் வடிந்து வாயுங் கண்ணுங் கருத்துத் தேகத்தில் பூச்சியூருதல்போ லிருத்தல்.
2-வது தாகமும் வீக்கமுங் காணுதல்.
3-வது பற்கள் கருத்தல்.
4-வது சர்வாங்கத்திலும் எரிச்ச லெழும்புதல்.
5-வது சப்ததாதுக்களுக்கும்துர்ப்பலம்உண்டாக்கல்.
6-வது வாழைத்தண்டைப்போல் தேகஞ் சில்லிடுதல்.
7-வது தன்னை மறத்தல் என்பனவாம்.

சுருட்டை, பனையன், விரியன் முதலிய பாம்புகளுக்கு மண்டலி சர்ப்பமெனப் பெயராம். இவ்விஷங்களுக்கெல்லாம் புங்கம்வேர், விளாம்வேர், கிருஷ்ணசூரிகைவேர் இம்மூன்றையும் சமமாக நிறுத்து முருங்கைப்பட்டை ரசத்தில் அரைத்துக் கடிவாயில் நன்றாக லேபனம் பண்ணி உள்ளுக்குப் பாகலிலை ரசங் கொடுக்க இறங்கும். வாகைப் பூவைப் பாலில் பிசைந்து வடிகட்டிக் குடிக்கில் திரண மண்டலி விஷந்தீரும். திரணமண்டலி என்பது புல்விரியன்.

## ராஜமந்த சர்ப்பம்

இது அதிக மந்த நடையை உடைத்தாய்ச் சிரசிலும் உடலின் மேலுங் கீழும் பக்கங்களிலும் மினுமினுத்துச் சித்திரவன்னங்களையொத்த புள்ளிகளைப் பெற்றிருக்கும். இதன் விஷமானது குளிர்ச்சியுடன் தித்திக்கும். இது தலைக்கேறினால் கடிவாயில் குளிர்ச்சியோடு வீங்குதல், முகமும் நகமும் வெளுத்தல், சரீர நமைச்சல், பாரிப்பு, மறத்தல், கேசாதி பாதம் வரைக்கு மினுமினுத்துச் சில்லிடுதல், சிரசுங் கண்ணும் நாசியும் குளிர்ச்சியாதல், சிரோபாரம், சுரம், வாயினிப்பு, அரோசகம், வாந்தி, இருமல், மேற்சுவாசம், தாகம்,பொறுத்துப்பொறுத்துப் பெருமூச்சு வருதல், நெஞ்சிற் களகளவென்னும் ஒரு சத்தத்துடன் தினவு, அடிக்கடி அலரல், ரோமச் சிலிர்ப்பு, வாயில் நொப்பும் நுரையுந் தள்ளுதல், மார்பு துடித்தல், மனச்சங்கடம், மயங்கிய நித்திரை யென்னும் இக்குணங்களுடன் சிலேஷ்ம சுபாவக் குறியெல்லாம் உண்டாகும். இதற்கு ஏழு வேகமுண்டு. அவையாவன:—



1-வது ரத்தமானது வெண்மையாய் முறிந்து தேகமுங் கண்ணும் வெளுத்தல்.
2-வது சர்வாங்கமும் வீங்குதல்.
3-வது கண்ணிலும் மூக்கிலும் வாயிலும் ஜலம் வடிதல்.
4-வது சிரோபாரமும் தாள் பிடிப்பும் உண்டாகுதல்.
5-வது பேசக்கூடாதவருத்தமும்குளிர்ச்சுரமும்காணல்.
6-வது தேகங்கனத்துச் சில்லிடுதல்.
7-வது அவயவங்களெல்லாம் கொதித்து மூர்ச்சை யுண்டாகித் தன்னை மறத்தல் என்பனவாம்.

மலைப்பாம்பு, தாசரிப்பாம்பு, கட்டு விரியன் முதலியவைகளுக்கு ராஜமந்தம் எனப் பெயராம்.

இவைகட்குக் காட்டுக்கருணை, பழுபாகல், சீந்தில், கோவை யென்னுங் கிழங்கு வகை 4, சுண்டை, கிளிமூக்கு, வெட்டிவேர், செங்கொட்டி, நீலி, மருக்காரை, வெற்றிலை பேய்ப்பீர்க்கு, பாலை, ஊமத்தை, செப்புநெருஞ்சில், வெண்ணரணையென்னும் வேர்வகை 12-ம் ஆகிய இப்பதினாறு வகையையும் தனித்தனியே வஸ்திரகாயப் பொடி சமமாக நிறுத்துக் கலந்து வைத்துக் கொண்டு இதில் அரைப்படியும் அரிசி அரைப்படியுஞ் சேர்த்துப் பொங்கி உண்ணக் கொடுத்தால் விஷமேறாது, ஏறிய விஷ மிறங்கும்.

## கௌதேர சர்ப்ப பேதம்

கௌதேர சர்ப்பமானது 92-விதப்படும். இவைகளின் விஷங்கள் தருவீகர சர்ப்ப விஷங்களைப் போலவே இருக்கும். ஆனால் இவைகளினின்றும் பிறக்கின்ற சங்கரசாதிகள் அநந்த மென்றறிக. இதனைச் சாரைப்பாம்பென்பர்.

## நிர்விஷ சர்ப்ப பேதம்

நிர்விஷ சர்ப்பமானது திவ்யகம், சாலகம், பாதகம், விருட்சாயி, கலதி, புட்காம், க்ஷீரிவாகினி, சரிவாகி, வரு

ஷாப்திகம், சோதிரதம், சுட்கம், கோத்திரம், பலாசுகம், கசபட்சம், பிலவோற்பேதசம் என 16-விதப்படும்.

## விஷநீர் லக்ஷணம்

விஷமில்லாத சர்ப்பங்கள் கடித்தால் அக்கடிவாயில் ஆமை முதுகைப்போல் தடித்து அச்சருமங் கருத்து அற்ப சோம்பலுண்டாக்கும்.

## வைகரஞ்ச சர்ப்பம்

இது மூவிதபேதங்களை உடையதா யிருந்தாலும் இவற்றின் விஷம் அதிகமான வேகத்தைப் பெற்றிருக்கும். இதற்குத் தருவீகர சிகிச்சை உதவும்.

## ஆண் சர்ப்பம்

இது அகலமுள்ள படத்தையும் அதிக திடத்தையும் மிகுந்த சீறலையும் பெற்றிருக்கும். இவ்விஷம் தலைக்கேறி ல் மேல் நோக்கிய பார்வையும், வலதுகால் பூமியில் பா வாதிருத்தலும் ஊர்த்துவ காயத்தில் மிகுந்த பலவீன மென்னும் குணங்களுமுண்டாம்.

## பெண் சர்ப்பம்

இது குறுகிய படத்தையும் அற்பச் சீறலையும் பெற்றிருக்கும். இவ்விஷத்தினால் கீழ்ப்பார்வையும், இதனுடைய கால் பூமியில் பாவாதிருத்தலும் அதே காலத்தில் பலவீனமு முண்டாகும்.

## அலி சர்ப்பம்

இது மிருதுவுடன் நீண்ட உருவத்தையும் வெளுத்த படத்தையும் மந்த நடையையும் குறைந்த தொனியையும் அற்ப கோபத்தையும் உடையதாயிருக்கும். இவ்விஷத்தினால் ஈனத் தொனி, பேதி, நடுக்கல், பயம், சுரம், புணர்ச்சியி லிச்சை, சரீரம் காற்றில் பறப்பதுபோ லிருத்தல் என்னும் இக்குணங்க ளுண்டாகும். இச் சர்ப்பம் பிறந்த 3 தினங்களில் விருத்தி யடைவதும் திவ்விய சர்ப்பத்தால் அடிபடுவதுமா யிருக்கும்.



## மலட்டுச் சர்ப்ப விஷம்

இது சீக்கிரத்தில் அநந்தம் வேதனையைப் பிறப்பித்தாலும் முக்கியமாக வியர்வையை அதிகமாக ஒழுகச் செய்யும்.

## பாலிய ஆண் சர்ப்ப விஷம்

இது இடதுகண்ணைக் கோவைப் பழம்போல் சிவக்கச்செய்யும். பெண்சர்ப்பக் குட்டி விஷத்திற்கு இக் குணம் கொஞ்சம் பேதிக்கும்.

## யௌவன ஆண் சர்ப்ப விஷம்

இது வலப்பக்கத்தில் கடிக்கும். இவ்விஷத்தினால் அப்பக்கத்துக்கண் இரத்தம்போற் சிவக்கும். பெண்சர்ப்பம் இடப்பக்கத்தில் கடிக்கும். இவ்விஷத்தினால் தடிப்பாகச் சில ரோகங்கள் பிறக்கும்.

## விருத்த சர்ப்ப விஷம்

இது கடித்தவாயில் வீக்கம், அற்பநோய், பிதற்றல் இவைகளைத் தரும்.

## கர்ப்ப சர்ப்ப விஷம்

இது சிரசு, உதடு, வயிறு, தொடை ஆகிய இடங்களில் நோதல், நாவு கருத்தல், உண்ணாக்கு வளருதலென்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

## சூசிகா சர்ப்ப விஷம்

இது வயிறு உளைதல், வாயில் ரத்தங் கக்குதல், மார்படைப்பு, கண்ணில் நோயுடன் சிவத்தல், சர்வாங்கமும் ஊசியாற் குத்துவது போல் மிகுந்த குத்தலென்னும் இக்குணங்களை யுண்டாக்கும். முட்டையிட்ட சர்ப்பத்துக்குச் சூசிகாசர்ப்பமெனப் பெயராம்.

## கோனச சர்ப்பம்

இது அதிக வெயிலினாலும் அலைச்சலினாலும் அடிபட்ட பசுக்களின் நாசிக்குள் சனித்து ஊர்த்துவ பார்வை

யுடன் அற்ப உருவமும், நீண்ட நாவும், சிரசினுல் கத்துந் தொனியுமுடையதாய் வெளிப்பட்டுத் திரியும். பசுவின் நாசியில் பிறப்பதால் கோனச சர்ப்ப மெனப் பெயர் பெற்றது.

## வழிச் சர்ப்பம்

இது எப்போதுங் கடிப்பதற்கே வழி கட்டிக்கொண் டிருக்கும். இப் பாம்பு கடித்தால் மரணக் குறிகளெல்லாம் சீக்கிரத்தி லுண்டாகும். இந்த விஷம் மணிமந்திர ஔஷ தத்தினுல் நீங்குமென் றறிக.

## விஷ விருத்தி லக்ஷணம்

சர்ப்பக் கடியினுல் அற்ப விஷம் ஏறியிருந்தாலும் அது பசி, தாகம், துக்கம், பயம், கோபம், மிகுந்த நகைப்பு, அக்கினித் தொழிலிலிருத்தல், சுடுகையான நிலத்தில் படுத்தல், கீழ்க்காற்றில் திரிதல், இரட்டை அலரிப்பூவை முகருதல், சரீரசுட்கம், பேதி, அசீரணம், துர்ப்பலம், பித்தவாயு முதலிய ரோகங்களால் மெலிதல், யானை மேகம் எலி முதலிய தொனிகளை உற்றுக் கேட்டல் என்னும் இவைகளினுல் மகாவிஷம் மாறுமென் றறிக.

# சர்ப்ப விஷ பேதம்

சகலமான சர்ப்ப விஷத்திற்கும் வாயுவேகம், தேயு வேகம், வருணவேகமென மூன்றுவித வேகமும், இவற் றுள் உட்பிரிவு முண்டு.

## வாயு விஷவேக நிதானம்

வாயுவைப்பற்றி விஷமேறும்போது எட்டுவித வேக முண்டாகும். அவையாவன: 1-வது மூர்ச்சையும் மிகுந்த வியர்வையு முண்டாதல், 2-வது சரீரம் வெதுப்புதல், 3-வது கண் செருகுதல், 4-வது செவியை அடைத்தல், 5-வது நெஞ்சில் கபங் கட்டுதல், 6-வது அறிவு மாறுதல், 7-வது மேல் மூச்சு வாங்குதல், 8-வது உயிர் நீங்குத



லென்பனவாம். ஆனுல் இவ்வேகம் பிறக்குமுன் விஷ மானது கடிவாயில் 50 மாத்திரை காலம் நின்று பின்பு தேகமெங்கும் பரவிச் சிரசிலேறும்.

## தேயு விஷவேக நிதானம்

தேயுவென்னும் பித்தத்தைப்பற்றி விஷமேறும் போது 10-வித வேகமுண்டாகும். அவையாவன:— 1-வது முகங் கருத்துக் கண்கள் சிவத்தல், 2-வது ரோமங் களின் முனை பிளந்து சிறுநீர் கருத்திறங்கி முகம் வெளுத் தல், 3-வது வேதனையுடன் சரீரம் நீண்டு சிந்தை மயங்கி வாய் குளருதல், 4-வது கோபம் பிறந்து குடலில் எரிச்சல் கண்டு தேஜஸ் மாறி நாசியால் ஜலம் வடிதல், 5-வது தேக முங் கண்ணும் விடவிடத்து ஆடுதல், 6-வது அங்கம் பதைத்து இளைத்து நாசியில் ஜலம் பெருகி மொழி மாறி பல்லைக் கடித்தல், 7-வதும் 8-வதும் கபங்கட்டிச் சுவாச மெழும்பி ஊர்த்துவ திருஷ்டியாகப் பார்த்தல், 9-வது உயிர் அடங்கி யிருத்தல், 10-வது உடலை விட்டு ஆவி நீங் குதல் என்பனவாம். இவ்வேகம் பிறக்குமுன் விஷமானது கடிவாயில் 150 மாத்திரை நின்று பின்பு ஏறும்.

## வருண விஷவேக நிதானம்

வருணனென்னும் சிலேஷ்மத்தைப்பற்றி விஷமேறும் போது பத்துவித வேகம் உண்டாகும். அவையாவன:— 1-வது தேகஞ் சிவந்து ரோமஞ் சிலிர்த்தல், 2-வது வாயு லர்ந்து தேகங் கருத்து வெதும்புதல், 3-வது தேகத்திற் குட்புறத் திளைத்தல், 4-வது கபம் அதிகரித்து மனங் கலங்கி தத்தளித்தல், 5-வது தலை நடுக்கலும் அறிவழி தலும் பிறத்தல், 6-வது கண் மலர விழித்து மேல் நோக்குதல், 7-வது அவயவம் முறைக்குதல், 8-வது சரீர வியாபார மடங்குதல், 9-வது சுக்கிலம் நசித்தல், 10-வது உயிர் நீங்குதல் என்பனவாம். இவ்வேகம் பிறப்பதற்கு முன் விஷமானது கடிவாயில் 150-மாத்திரை நின்று பின்பு ஏறும்.

### கருநாகம்

இது ஔஷதாதிகளா லிறங்கினாலும் இரண்டு காதுகளையும் பாதிரிய வாதத்தைப்போல் செவிடாக்கும். நிலைப்பனைக் கிழங்கும் உப்பிலாங்கொடி வேரும் அரைத்துச் சிறு எலுமிச்சங்காய்ப் பிரமாணம் முகூர்த்தத்திற் கொருதரமாக 8 தரம் விழுங்கில் இந்த விஷம் முறியும்.

### சிறு நாகம்

இது தருப்பை அகலமுள்ள படத்தையும் பருத்த சர்க்கை யொத்த உடலையும் பெற்றுத் தாழை மலர்க்குள் வாசமாயிருக்கும். இவ்விஷத்திற்கு மகாவிஷ சிகிச்சை வேண்டும். இதனைப் பூநாகம், புல்நாக மென்பர்.

## விரியன் பேதம்

விரியனென்பது பெரு விரியன், செவ்விரியன், நீர் விரியன், பொறி விரியன், புல் விரிய னென ஆறு வகைப்படும். இவைகள் பத்திரகாளியினுடைய ஆடையிலிருந்து பிறந்ததாகச் சொல்லுகிறார்கள்.

### பெரு விரியன் விஷம்

இது மயக்கம், தாபம், உறக்கம், வெப்பம் என்னும் இவைகளை யுண்டாக்கும். ஆனால் கடிவாயில் ரத்தமும் வீக்கமும் எரிச்சலும் பிறக்கும்.

### ரத்த விரியன் விஷம்

இது வயிற்றில் வியாபித்து அவ்வயிற்றில் வலியை யுண்டாக்கிக் கொல்லும். அப்போது கடித்த வாயில் உதிரமும் மேலில் தடிப்பும் பிறக்கும். இது தவிர மற்ற நான்குவித விரியன் விஷத்தினால் நித்திரை மயக்க முண்டாகுமென் றறிக. மகிழம் பருப்பு, வசம்பு, உள்ளி, மிளகு, சுக்கு, கள்ளிப்பால், வேப்பெண்ணெய், இலுப்பைப் பிண்ணாக்கு, ரசம், வெங்காரம், மருக்காரைப்பழம், பூவம்பழம் இப்பன்னிரண்டும் வகைக்கு வராகனெடை 1-ம், வெற்றிலை 14-ம் ஒன்று யரைத்துச் சீலையில் நனைத்து நாசியிற் பிழிய சகல விரியன் விஷங்களுந் தீரும்.



### வழலைச் சர்ப்பவிஷம்

இது கடித்தவிடத்தில் ரத்தமும் வாயில் அனலும் உண்டாக்கும். இதற்குச் சிகிச்சை: ஏலம் மிளகு வக்கணத்தி வேர் இம்மூன்றும் சமனாகக் கூட்டிக் கற்பூர வள்ளிச்சாறு விட்டரைத்து உலர்த்தி அம்மாத்திரையைத் தண்ணீரி லுரைத்துக் கடியுண்டவன் கண்ணில் கலிக்கமிட விஷந் தீரும்.

### கருவழலைச் சர்ப்ப விஷம்

இது சரீரத்திற் காங்கையோடு அதிக வியர்வையும் உள்ளங்கால் உள்ளங்கையில் சிவப்பும் கோழையால் மார்பில் அடைப்பும் பிறக்கும்படி செய்யும். இதனால் அநந்தம் வேதனையு முண்டாகும். இது நீலஞ்சோதியும் கடுகுரோகணியும் கோழிமுட்டை வெண்கருவும் சமமாகக்கூட்டி யரைத்துப் பசுப்பாலிற் கலந்து உள்ளுக்குக் கொடுக்கத் தீரும்.

### மூர்க்கன்

இது கடித்தவிடத்திலும் முதுகிலும் வேதனை பிறப்பிப்பதுந் தவிர, அவ்விஷத்தினால் வாயுங் கழுத்தும் முறுக்கிக் கொள்ளுதல், குரல் நெரிதல், தேகம் பதறல், தலை சுழலல் என்னும் இக்குணங்க ளுண்டாகும். காடியைத் தெளித்து வன்னியிலையை யிடித்து அரையாழாக்குச் சாறு பிழிந்து உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் அதைத் துவாலையிட இவ்விஷம் தீரும். இதற்குக் கொம்பேறி மூர்க்கன், சாரை மூர்க்கன், பனையேறி மூர்க்கன் எனப் பெயராம். இது தன்னால் கடியுண்டவன் சுடுகாட்டில் தகிக்கப்படுகின்றானென்று உயர்ந்த மரக்கொம்பிலேறிப் பார்க்குமென்றும், அவ்வளவு தெரிந்தவர்கள் உடனே வைக்கோல் சுமை முதலியவைகளை அச்சுடுகாட்டி லிட்டுப் புகைக்கக் கண்டு அவன் இறந்தானென் றிரங்கிவிடு மென்றும் சொல்லுவது உலக வழக்கம்.

## மயக்குஞ் சர்ப்பம்

இது கண்ணில் விஷத்தையுடையது. இப்பார்வை சற்றுநேரம் படினும் உடனே மயக்கமும் கண்களில் சுழற்சியும் உண்டாகும்.

## முறுக்குஞ் சர்ப்பம்

இது சரீரமெல்லாம் திருகும் கள்ளியைப்போல் முறுக்கிக் கொள்ளுதலையும் முறத்தால் தெள்ளுவதுபோல் பதறலையும் உண்டாக்கும்.

## சாரைப் பாம்பு

இது நீண்ட உடலையும் வேக நடையையும் பெற்று மனிதரை வாலாலடிப்பதுடன் பாதமுதல் மார்பு வரைக்கும் சுற்றி இடுப்பையு மொடிக்கும். இதில் வெண்சாரை, கருஞ்சாரை, செஞ்சாரை, மஞ்சட் சாரையென நான்கு பேதமுண்டு. அவைகளும் இவ்வாறே செய்யும். இவைகளைப் பார்த்த எருமை மாடுகளுக்கு மாலைக்கண் உண்டாகுமென்பர்.

## புடையன்

இது நீண்ட உருவத்தையும் அழுக்கு நிறத்தையும் பெற்று வாலின் முனையால் குத்தித் தேகத்தில் படைகளை விஸ்தாரமா யுண்டாக்கும்.

## மண்ணுளிப் பாம்பு

இது தம்பாக்கு, வெள்ளி, ரத்தம் ஆகிய இவைகளின் நிறத்தைப் பெற்று நீண்ட பயிற்றங்காய்ப் பிரமாணமுள்ளதாயிருக்கும். செவியில் நுழையில் அபாயமாம். இவ்விஷத்தினால் தேகமுழுவதும் சிறுசிறு தடிப்பும் நமைச்சலு முண்டாகும். இதனைச் சிறுபாம்பு கடி யென்பர். எண்ணெய் விட்டுக் கலந்த கூழை ஏழு நாள் சாப்பிட இத்தடிப்பு தீரும்.



## காலியாங்குட்டி

இது ஒரு சாண் இரண்டு சாண் நீளத்துடன் தேஜசு குறைந்திருக்கும்.. ஆனால் கடிக்க அறியாது. கடிக்கில் பெருஞ்சிகிச்சை செய்யவேண்டும்.

## கண்குத்திப் பாம்பு

இது பசிய நிறத்துடன் நீண்ட உருவத்தையும் பெற்று விருக்ஷங்களில் வாசம் பண்ணுவதும், நேரிட்டவர் கண்களைக் குத்துவதுமாயிருக்கும். இதுவே பச்சைப் பாம்பாம்.

## வெண்ணாந்தைப் பாம்பு

இது பருத்த செக்கு, பனைமரம், தூண் முதலிய பிரமாணங்களையும் உடம்பெல்லாம் வழுவழுப்புமுள்ளதாய் வாலுந் தலையும் ஒரே மொத்தமாய் மேலில் வெளுத்த வரிகளைப் பெற்றுக் கோழி, ஆடு, மாடு முதலியவைகளை விழுங்குவதாயிருக்கும். சிலர் யானையை விழுங்குமென்று சொல்லுகிறார்கள். இது மலைப் பாம்பு, தாசரிப் பாம்பெனச் சொல்லப்படும்.

# சில்லரை விஷங்களும் அவற்றிற்குச் சிகிச்சையும்

## ஓணான்

இது கடிக்கில் அங்குப் பிறையைப்போல் காய முண்டாகும். அப்போது வீக்கம், நமைச்சல், குத்தல், நோய், சோருதல், மலத்தில் பலநிறம் என்னும் இக்குணங்க ளுண்டாகும். மூங்கில் குருத்து ரசம் காலாழாக்கில் மிளகுச் சூரணம் பலம் கால் சேர்த்து 5-நாள் 2-வேளையுஞ் சாப்பிட இவ்விஷம் தீரும். இம்முறையை பச்சை ஓணானுக்கும் தவளைக்கும் உபயோகிக்கலாம்.

## தவளை

இது கடிக்கில் அதிக சோம்பலான நித்திரையும் மூர்ச்சையும் கறுத்துப் பரவுகின்ற சொறியுமுண்டாகும்.

ஒட்டறை லவணம் உத்தாமணிவேர் இம்முன்றையும் சமமாக நிறுத்துச் சிறுநீரால் அரைத்துக் குழம்பாக வைத்துக்கொண்டு கடிவாயிலும் தேகமுற்றும் 8 நாட்கள் லேபனம் பண்ண இவ்விஷம் தீரும். லேபன மென்பது பூசித் தேய்த்தல்.

### அட்விஈ

இது கடிக்கில் அதிக நித்திரையும் மிகுந்த முர்ச்சையும் உண்டாகும்.

### வீட்டுப் பல்லி

இது கடிக்கில் நோய், வியர்வை, வீக்கம், எரிச்சல், மார்பு வேதனை, பொடிச் சிரங்கு எழும்புதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். குதிரைச்செவிமரத்தின் வேர், பெருங்கரந்தை வேர் இவ்விரண்டும் வகைப்குப் பலம் 2-ஆகச் சேர்த்து அதைப் பாகலிலைச்சாறும் பசுப்பாலும் சமமாகக் கலந்துவிட்டரைத்துத் தடிப்பாக வைத்துக் கொண்டு கடிவாயில் லேபனம் பண்ணி உடம்பெங்கும் துவாலையிட இவ்விஷம் தீரும். இவ்விஷம் கொடியதென்றும் அதிவிரைவில் மகா விஷ சிகிச்சைகளைச் செய்யவேண்டுமென்றும் இல்லாவிடில் ஒரு வருஷத்திற்குள் மரணமுண்டாக்குமென்றும் சில நூற்கள் சொல்லுகின்றன.

### காட்டு மசகம்

இது கடிக்கில் அவ்விடத்தில் நமைச்சலும் அற்ப வீக்கமும் வேதனையுமுண்டாகும். இது அசாத்தியமாயினும் நீலியிலை கலிக்கத்தாலும் அவ்வேரின் கஷாயத்தாலும் போம். மசகம் என்பது கொசு.

### மக்ஷிகா

இது கடித்தாலும் கொட்டினாலும் அவ்விடத்தில் வீக்கம், நமைச்சல், எரிச்சல் முதலிய குணங்கள் உடனேயுண்டாகி அடங்கிப் பின்பு தடித்து உபத்திரவ முண்டாவதுந் தவிர அத்தடிப்பில் மாறாமல் சிலைத்தண்ணீரும் வடியும். மக்ஷிகா என்பது குளவி முதலாகிய வண்டுகளாம்.



### மலைப் பிபீலிகா

இது கடிக்கில் அவ்விடத்தில் நீர்த் துளியைப்போல் தடித்தல், அதிக நோய், நெருப்பால் சுட்டதுபோல் எரிச்சல், நமைச்சல், தேகத்தில் அழலையென்னும் இக்குணங்கள் உண்டாகும். பிபீலிகா என்பது எறும்பு.

## சிலந்திப் பூச்சிகளின் பேதம்

சிலந்திப்பூச்சி 28-பேதப்படும். அதன் விவரம்:— வாதத்தில் 7, பித்தத்தில் 7, சிலேஷ்மத்தில் 7, சங்கிரணத்தில் 7 ஆக 28-ஆம். அன்றியும் பிரத்தியேகச் சிலந்தியென்பது மொன்றுண்டு.

### வாதச் சிலந்திகளின் பொதுக் குணம்

இவைகள் வெளுப்பு, சிவப்பு நிறத்தையும் ஆசனத்தில் சித்திரங்களான மெல்லிய நூலையும் உள்ளவைகளாயிருக்கும். இவ்விஷங்களால் இருமல் முதலிய வாதரோகக் குணங்களெல்லா முண்டாகும்.

### பீதச் சிலந்தி

இது தலைநோயும், அரோசகமும் சுரமு முண்டாக்கும்.

### குமுதச் சிலந்தி

இது பட்டவிடத்தில் கொப்புளங்களெழும்பி அதில் நின்றும் மாறாது சீழ்வடிவதும் எரிச்சல் பிறப்பதுமாக இருக்கும். இதனால் இரைப்பும் நெஞ்சடைப்பு முண்டாகும்.

### மூலச் சிலந்தி

இது அதிக கொப்புளங்களையும் அக்கினிக் குணத்தையும் உண்டாக்கும்.

### ரத்தச் சிலந்தி

இது பட்டவிடத்தில் சிவந்து தடித்து அதைச் சுற்றிலும் சிறிய கொப்புளங்க ளெழும்பி அதில் நின்றும் ஓயாது ரத்தமும் சீழும் வடிந்துகொண்டே இருக்கும், இதனால் இரைப்பும் பேதியு முண்டாகும்.

### சித்திரச் சிலந்தி

இது பட்டவிடத்தில் சிவந்த கொப்புளங்க ளெழும்பி அவைகள் பழுத்து உடைந்த பின்பு அங்குக் கருத்த ரணமாகி அதில் நின்றும் நுரைபோல் சீழ் வடிதலாயிருக்கும். இதனால் தலையிலும் கீல்களிலும் நோய், சுரம், இரைப்பு வீக்கமென்னும் இத்தியாதி குணங்கள் உண்டாகும்.

### சந்தானிகச் சிலந்தி

இது பட்டவிடத்தில் சகிக்கக்கூடாத குத்தலும் விரணமும் உண்டாகும்.

### மேகச் சிலந்தி

இது நீலநிற முள்ளது. இவ்விஷத்தினால் அந்நிறக் கொப்புளங்க ளெழும்பும்.

## பித்தச் சிலந்திப் பூச்சிகள் பொதுக் குணம்

இவைகள் கருமை பொன்மை கலந்த நிறத்துடன் முகத்தில் அனலையும் ஆசனத்தில் தாமரை நூலையு முள்ளவைகளாயிருக்கும். இவ்விஷங்களால் முக்கியமாகப் பித்த ரோகக் குணங்கள் உண்டாகும்.

### கபிலச் சிலந்தி

இது கண்களினால் பார்க்கில் தேகமுற்றும் சிவந்த தடிப்பும் வாய்நீர் ஊரலும், மயிர்க்கால்களில் எரிச்சலும், தலைப்பாரமும் உண்டாகும்.

### அக்கினி முகச் சிலந்தி

இது அதிக நோயையும் நெருப்பாற் சுட்ட கொப்புளங்கள்போல் கொப்புளங்களையும் பிறப்பிக்கும். இதனால் தாகம், எரிச்சல், நடுக்கல், மூர்ச்சை, ரத்தம் வடிதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

### பீதச் சிலந்தி

இதுபட்ட விடத்தில் கட்டை நெருப்பாற் சுட்டது போலிருத்தல், மூர்ச்சை, வாந்தி, சிரோவேதனை, சுரம், அரோசகம், சூலை, மலமும் மூத்திரமும் மஞ்சளித்தில் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.



### பதுமைச் சிலந்தி

இது பட்ட விடத்சில் தாமரைப் பூவைப்போல் வட்ட வடிவமான கொப்புளம் உண்டாவதும், பின்பு எழும்புவதும் அதில் மாறாது ஜலம் வடிவதும் நோயுண்டாவதுமாயிருக்கும்.

### மூத்திரச் சிலந்தி

இது பட்ட விடத்தில் கருப்பு சிவப்பு நிறமான கொப்புள மெழும்பித் துர்க்கந்த விரணம் பிறக்கும். இதனால் இருமல், இரைப்பு, சுரம், வாந்தி, தாகம், மூர்ச்சை, பிரமை யென்னும் இக்குணங்கள் உண்டாகும்.

### சுவேதச் சிலந்தி

இது பட்ட விடத்தில் விசர்ப்பிரோகக் கொப்புளம் போல் கொப்புளம் எழும்புவதன்றியும் அதில் மாறாது ஜலம் வடிதல், தாகம், மூர்ச்சை, சுரம், நோய் என்னு மிக் குணங்களுண்டாகும்.

### கருப்புச் சிலந்தி

இது பட்ட விடத்தில் கருத்த வீக்கமுண்டாகி ரணம் பிறக்கும். அதில் துர்க்கந்தத்துடன் நிறபேதமான ரத்தமும் சீழும் மாறாது வடிந்துகொண்டே யிருக்கும்.

## சிலேஷ்மச் சிலந்திப் பூச்சிகள் பொதுக்குணம்

இவைகள் வெண்மை நிறத்தையும் குடலில் நீல நிறத்தையும் ஆசனத்தில் சிவந்த நூலையு முள்ளவைகளாயிருக்கும். இவ்விஷங்களால் சிலேத்தும ரோக குணங்களெல்லாமுண்டாகும்.

### ரத்த பாண்டு சிலந்தி

இது பட்ட விடத்தில் வெளுத்துத் தடித்து விரணமாகி ரத்தம் வடியும்.

### பாண்டு சிலந்தி

இது பட்டவிடத்தில் வீக்கத்துடன் கனத்த ரணம் பிறக்கும். இதனால் சுரமும் ரோமச்சிலிர்ப்பும் சிரோபாரமு முண்டாகும்.

### வண்டு சிலந்தி

இது பட்டவிடத்தில் வண்டைப்போல் கருத்துக் கொப்புளம் உண்டாகி அதைச் சுற்றிலும் எரிச்சலைத் தருகின்ற சிறுசிறு கொப்புளம் பிறக்கும். அன்றியும் தேகமெல்லாம் கருத்த மச்சங்களும் எழும்பும்.

### பிங்கச் சிலந்தி

இது பட்டவிடத்தில் கொப்புளமெழும்பி அதில் என்றும் ரத்தமொழுகும். இதனால் சுரம், நோய், வீக்கம், அதிக எரிச்சல், தாகம் என்னும் இக்குணங்களுண்டாகும். பிங்கம் என்பது மஞ்சள் நிறம்.

### திரிமண்டலச் சிலந்தி

இது பட்டவிடத்தில் கருத்த விரணம் உண்டாகி அதில் நின்றும் ரத்தம் வடியும். இதனால் அரோசகம், கண்ணெரிச்சல், உடம்பிலும் முகத்திலும் மச்சங்களெழும்புதல் என்னும் இக்குணங்களுண்டாகும்.

### துர்க்கந்தச் சிலந்தி

இது பட்டவிடத்தில் பேய்ச்சுரைப் பிஞ்சைப்போல் கட்டி யெழும்பி அதைச் சுற்றிலும் நெருங்கிய சிறுசிறு கொப்புளம் எழும்பும். இதனால் விசர்ப்பி குணமும் வியர்வையும் துர்க்கந்தமும் எரிச்சலும் பிறக்கும்.

### சித்திர மண்டலச் சிலந்தி

சித்திர மண்டலிபட்ட விடத்தில் விசர்ப்பிபோல் விரணம் உண்டாகி அதைச் சுற்றிக் கொப்புளங்கள் எழும்பும்.



## சங்கீரணச் சிலந்திப்பூச்சிகள் பொதுக்குணம்

இவைகள் ஆசனத்தில் பலநிற நூலையுடையவை. நெருப்பாற் சுட்டதுபோல் எரிச்சலும் திரிதோஷ குணங்களையும் உள்ளவைகளா யிருக்கும். இவ்விஷங்கள் சாத்தியமும், கஷ்ட சாத்தியமும், அசாத்தியமும் ஆகும்.

### காகச்சிலந்தி

காகச் சிலந்தி விஷம் பட்டவிடத்தில் வெளுத்தும் சிவந்தும், பூனைப்புடுக்கன் காயினது விரையைப்போல் கொம்புளங்கள் எழும்பும். அதனால் அதிக வேதனை, விக்கல், இரைப்பு, மிகுந்த தாகம், மூர்ச்சை, நித்திரை பங்கம், சதா மார்புநோய் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

### அக்கினிபாதச் சிலந்தி

மேற்படிச் சிலந்தி கால்கள் தோறும் விஷம் உள்ளது. அக்கால்கள் தேகத்தில் படில் பட்டவிடமெல்லாம் கொப்புளங்கள் உண்டாகும்.

### லர்ஜவர்னச் சிலந்தி

மேற்படிச் சிலந்தி பட்டவிடத்தில் துர்க்கந்த விரணம் பிறந்து அதில் சுப்பலால் குத்துவதுபோல் குத்தலும், இரத்தமும் பெருகும். இதனால் சீதளம், தாகம், மூர்ச்சை, பேதி என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

### வைதேகிச் சிலந்தி

மேற்படிச் சிலந்தி பட்டவிடத்தில் நெருப்பினால் சுட்டதுபோ லிருக்கும். இதனால் அதிக வேதனையும், சுரமும், மார்பு நோயும் உண்டாகும்.

### ஜாலமாலினிச் சிலந்தி

மேற்படிச் சிலந்தி பட்டவிடத்தில் விரணம் பிறந்து அதன் மேல் மச்சமும் வீக்கமும் எழும்பும். இதனால் நோய், தாகப்பிரமை, இரைப்பு, தேகம் மரத்தல், மோகம், பேதி என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

### மாலாகுணச் சிலந்தி

மேற்படிச் சிலந்தி விஷம் தேகமுழுவதும் மச்சங்களைப்போல் கருத்த தடிப்புகளை யெழுப்பும். இதனால் உள்ளே எரிச்சல், மேலே குளிர்ச்சி, வயிறுப்பல், மூத்திரக் கிரிச்சரம், மூர்ச்சை, பேதி, சுரம், தலைநோய், கண்ணோய், இரைப்பு, தாகம், வீக்கம் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

### சுவர்ச் சிலந்தி

மேற்படிச் சிலந்தி விஷம் வர்னபேதமா யிருக்கும். இவ்விஷத்தினால் பல நிறக் கொப்புளம் பிறக்கும்.

### பிரத்தியேகச் சிலந்தி

மேற்படிச் சிலந்தி புணருங்காலத்தில் அச்சுக்கிலத் துளிகள் எத்தனை தெரிக்கின்றனவோ அத்தனைக் கொப்புளங்கள் விரைவில் உண்டாகும்.

### சிலந்தி கடிக்கும் ஸ்தான நிதானம்

கபிலச் சிலந்தி மூக்கில், அக்கினிமுகச் சிலந்தி சந்தி ஸ்தான நரம்புகளில், பீதச் சிலந்தி தாடைகளில், பதுமச் சிலந்தி இடது கண்ணில், தூர்க்கச் சிலந்தி வலது கண்ணில், மூலவிஷச் சிலந்தி, சுவேதச் சிலந்தி, மூத்திரச் சிலந்தி, கறுப்புச் சிலந்தி ஆகிய நான்கும் வலது புஜத்தில், பாண்டு சிலந்தி காதில், ரத்தபாண்டு சிலந்தி இடது விலாவில், வண்டு சிலந்தி வலது விலாவில், பிங்கச் சிலந்தி வயிற்றில், திரிமண்டலச் சிலந்தி முதுகில், பீதச் சிலந்தி கையில், குமுதச் சிலந்தி நாபியில், சித்திர மண்டலச் சிலந்தி இடது தோளில் சிரசில், ரத்தச் சிலந்தி காதில், சித்திரச் சிலந்தி நெற்றியில், சந்தானிகச் சிலந்தி உதட்டில், மேஜகச் சிலந்தி சிரசில் உள்ளங்கையில், அக்கினி பாதச் சிலந்தி கண்டத்தில், காகச் சிலந்தி மார்பில், லாஜ வர்னச் சிலந்தி தனத்தில், வைதேகிச் சிலந்தி தோளில், சாலமாலினிச் சிலந்தி கடைக் கண்ணில், மாலாகுணச் சிலந்தி மார்பின் பள்ளத்தில், சுவர்ச் சிலந்தி காதுக்குப் பின்புறத்தில் கடிக்கும்.



## சிலந்தியின் கடி கால நிதானம்

சிலந்திப் பூச்சி சுக்கிலபட்ச திதிகளில் சாயங்கால வேளையில் கடிக்கும். இவ்விஷத்தினால் கடித்த வாயில் வெளுப்பு, கருப்பு, சிவப்பு, மஞ்சள் என்னும் நிறமாக இருப்பதன்றியும் அவ்விடத்தில் மிருதுவாக உயர்ந்து தடித்து அத்தடிப்பைச் சுற்றிலும் சிறு சிறு கொப்புள முண்டாகும். அக்கொப்புளச் சலம் பட்டவிடமெல்லாம் கொப்புளிக்கும். இதனால் விசர்ப்பை ரோகத்தினாலும், சோகை ரோகத்தினாலும் உண்டாகின்ற வருத்தமும் சுரமும் வியர்வையு முண்டாகும்.

### சிலந்தியின் சப்தவேக விஷ நிதானம்

மேற்கூறிய விஷமானது தேகத்தில் வியாபித்த

1—வது நாளில் அவ்விடத்தில் நிறம் தோற்றுமல் கொஞ்சம் தினவு உண்டாகும்.

2—வது நாளில் இயற்கை வர்ணத்துடன் தடித்துத் தினவோடுங் கூடிய சிறிய கட்டிகள் எழும்பும்.

3—வது நாளில் அகல் கவிழ்த்ததுபோல் தடித்துச் சிவந்து அவ்விடத்தில் உள்ள ரோமங்கள் சிலிர்ப்பதுமன்றி அந்த மயிர்க்கால்களில் ரத்தம் கம்மிச் சுரமுண்டாகும்.

4—வது நாளில் அங்கு வீக்கம் எரிச்சல் இரைப்பு பிரமை இவை உண்டாகும்.

5—வது நாளில் விஷதுர்க்குணங்களெல்லாம் அதிகரிக்கும்.

6—வது நாளில் விஷம் மர்மஸ்தானங்களில் வியாபிக்கும்.

7—வது நாளில் உயிர்க்கு அபாயம் வரும் என்றறிக.

ஆதலால் அவ்விஷங்களில் உத்தம, மத்திம, அதமாதமங்களின் பலாபலன்களை அறிந்து தகுந்தபடி மந்திர அவுஷதங்களினால் சிகிச்சை செய்யின் 21 நாளில் குணம் உண்

டாகும். ஒரு நாள் இரண்டு நாள் கடிவாயில் எரிவுண்டாகி அடங்கிப் பின்பு கொப்புளமும் எழும்பு மென்பர்.

## சர்வ சிலந்திகளின் சாமானிய விஷ லக்ஷணம்

சிலந்திப் பூச்சிகளின் விஷம் ஏறினால் அவ்விடத்தில் எழும்புகின்ற விரணங்களில் சில கொப்புளங்களாயும் சில மண்டலாகாரமாயும் சில சுவேத நிறமாயும் சில சிவந்த நிறமாயும் சில மஞ்சள் நிறமாயும் சில நீலநிறமாயும் சில மிருதுவாயும் சில கடினமாயும் இருக்கும். எட்டுக்கால் பூச்சியும் இச்சிலந்திப் பூச்சிகளின் பேதமேயாம்.

## சிலந்தியின் அஷ்டவித பேதம்

சிலந்திப் பூச்சிகளின் சுவாசம் பல் மலம் மூத்திரம் சுக்கிலம் வாய் வாய்நீர் ஸ்பரிசமென்னும் எண்டுஸ்தானங்களினின்றும் விஷங்கள் பிறக்கும். அவைகள் மனிதர்மீது படின் சகல துர்க்குணங்களும் உண்டாகும்.

## சிலந்தியின் சுவாசம்

இது சுரத்தையும் மிகுந்த தாகத்தையும் உண்டாக்கும்.

## சிலந்தியின் பல்

இது அழுந்திய இடத்தில் பிறக்கின்ற விரணம் நிறபேதமும் கடினமும் ஸ்திரமும் உள்ளதாயிருக்கும். இதனால் சரீரத்தில் வீக்கம் எரிச்சல் வேதனை வியர்வை தாகமென்னும் இக்குணங்கள் உண்டாகும்.

## சிலந்தியின் மலம்

இது பட்டவிடத்தில் இலுப்பைப்பழம் போல் வெளுத்த விரணம் பிறந்து அதில் துர்க்கந்தமும் எரிவும் பசபசவென்கிற தினவும் உண்டாகும்.

## சிலந்தியின் மூத்திரம்

இது பட்டவிடத்தில் நடுவில் கருத்தும் உயர்ந்தும் சுற்றிலும் வாடியும் புட்பம்போல் மலர்ந்தும் இருக்கின்ற



விரணம் பிறக்கும். அதில் துர்க்கந்தமும் எரிச்சலும் மாறாது உண்டாகும்.

## சிலந்தியின் சுக்கிலம்

இது பட்டவிடத்தில் கடினமான கொப்புளமும் நோயும் உண்டாகும்.

## சிலந்தியின் வாய்

இது பட்டவிடத்தில் முருக்கம்பூ நிறம் உள்ள விரணம் பிறந்து அதில் குத்தலும் ஊறலும் உண்டாகும்.

## சிலந்தியின் வாய்நீர்

இது பட்டவிடத்தில் புங்கம் பூவைப்போல் நிறமுள்ள விரணம் பிறக்கும். அவ்விரணத்தின் பக்கங்களில் பூச்சி யூருவது போல் பரபரத்தலும், ஊசியால் குத்துவது போல் குத்தலும், எரிச்சலும் உண்டாகும்.

## சிலந்தியின் ஸ்பரிசம்

இது தேகத்தில் பட்டாலும் இப்பரிசத்தைப் பெற்ற வஸ்திரம் பட்டாலும் முற்கூறிய குணங்களெல்லாம் விரைவில் உண்டாகும்.

## சகல சிலந்தி விஷத்திற்கும் அவுஷதம்

மேற்கூறிய சகல சிலந்தி விஷங்களுக்கும் சங்கம் வேர்ப் பட்டை மிளகு இவ்விரண்டையும் வகைக்குப் பலம் ½ வீதமாக நிறுத்து மெழுகுபோல அரைத்துப் பசுநெய்யில் குழைத்து 21 நாள் இரண்டு வேளையும் சாப்பிட்டு இச்சாபத்திய மிருக்கில் தீரும். அல்லது நரிப்பல்லைத் துளாக்கி அதில் கற்றாழை ரசத்தை விட்டு நன்றாக அரைத்துக் கடிவாயிலும் தேகமுற்றிலும 21 நாளைக்கு 3 வேளையும் லேபனம் பண்ணத் தீரும். அல்லது அவுரியினது சமூலமும் பலம்-1 ஆக நிறுத்து அதில் நல்லஜலம் அரைப்படி விட்டு ½ ஆழாக்குக் கியாழமாகக் காய்ச்சி 7 நாள்

இரண்டு வேளையும் சாப்பிடத் தீரும். இவ்வாறே மும்முறை கொடுக்கவேண்டும் அல்லது சிறுசின்னியிலை ரசம் ¼-ஆழாக்கு அளவாக இரண்டு வேளையும் 7-நாள் 3-முறை சாப்பிட்டு உப்பில்லாப் பத்திய மிருக்கில் விலகும்.

## மீன் விஷம்

சில மீன்கள் கடிக்கில் நோயும் எரிச்சலும் உண்டாகும். அன்றியும் நீர்வண்டு சுழல்வண்டு பாசிவண்டு பெரியவண்டு முதலிய சில விஷ ஜந்துக்கள் கடிக்கில் இவ்விடத்தில் வீக்கம் நமைச்சல் நோய் நுரைத்தபேதி சரீரத்தில் தடிப்பு என்னும் இக்குணங்கள் உண்டாகும். இவ்விஷம் பச்சை நன்னாரி வேரை மேல் தோலும் உள் நரம்பும் போக்கிக் கொட்டைப்பாக்குப் பிரமாணம் அரைத்து, கற்றாழைச் சோற்றில் கலந்து 40-நாள் அந்தி சந்தியி லருந்தத் தீரும். இதற்கு இச்சாபத்தியம்.

## நாட்டு மரவட்டை

இது கடிக்கில், வியர்வை நோய், சரீரம் தடித்தல், வீக்கம், கருப்பகத்திப்பூ நிறம்போல் பொடிச் சிரங்குகள் எழும்புதல், பிரமை யென்னும் இக்குணங்கள் உண்டாகும். இவ்விஷம் திரிகடுகு அல்லது காட்டுவாகைப் பஞ்சாங்கம் (என்பது வேர் பட்டை இலை பூ காய் ஆகிய இவ்வைந்தில் யாதேனும் ஒன்றை) வெந்நீரி லரைத்துப் பிழிந்து வடிகட்டி நசியமும் லேபனமும் செய்து உள்ளுக்குக் கொடுக்கில் முறியும். இது மற்றைய அட்டைகட்கும் உதவும் இதற்குச் சுதபதி யென்றும் பெயர்.

## விரிச்சிகோற்பத்தி

சர்ப்பங்கள் செத்தழிந்த இடத்திலும் சாணம் கோணிப்பட்டை முதலிய மக்கினவிடத்திலும் மயானத்தின் சாம்பலிலும் பிறக்கும். இவை முறையே வெளுத்தும் கருத்தும் சிவந்துமிருக்கும். இவற்றின் விஷமேறினால்



நாவு தடித்தல், தேகமரத்தல், அதிக நோய், நாசியால் ரத்தம் விழுதல், சர்வாங்கத்திலும் வியர்வை, மூர்ச்சை, வாயுலரல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இது மந்திர வலி அவுஷத வலி தெய்வ வலி இம்மூன்றும் ஒத்துக் கொள்ளில் இறங்கும். விருச்சிகம் என்பது தேள்.

## சாதாரண தேளின் பேதம்

தேளானது உச்சிலிங்கத்தேள், வாதத்தேள், பித்தத் தேள், சிலேத்துமத்தேள் என நான்கு விதப்படும். அன்றியும் நண்டுவாய்க்காலி ஒன்றுண்டு.

### உச்சிலிங்கத்தேள்

இது பகற்காலத்தில் கொட்டும். இவ்விஷத்தினால் அவ்விடத்தில் வீக்கம், நரம்புகளில் மிகுவேதனை, ரோம சிலிர்ப்பு, அதிக சீதளம் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இது மந்திரத்தால் வசப்படும்.

### வாதத்தேள்

இது மார்புநோய், மேல் சுவாசம், எலும்பு நரம்புகில் இவைகளில் நோய், தேகங் கருத்தல், கூச்சல், புரளல் முதலிய குணங்களை யுண்டாக்கும்.

### பித்தத்தேள்

இது அறிவு நீங்குதல் கடுமையான மேல்மூச்சு, வாயானது காரமாயிருத்தல், முகத்தில் எண்ணெய் தடவினது போல் பளபளப்பு, மாமிசங் கரைதல், சோஷை யென்னும் இக்குணங்களை யுண்டாக்கும். அன்றியும் அவ்விடத்தில் வியர்வை கவுட்டியில் நெறிகட்டுதல் எரிச்சல் கடுத்தல் மறுநாள் வரைக்கும் நோதல் என்னு மிக்குணங்கள் உண்டென்பாரு முளர்.

### சிலேத்துமத்தேள்

இது வாந்தி, அரோசகம், மார்பு அதிரல், வாயில் சலம் வருதல், பீனசம், சரீரமுற்றிலும் வாழைத்தண்டையொத்த

சீதளம், வாயினிப்புஎன்னும் இக்குணங்களை யுண்டாக்கும். இவ்விஷங்கள் கோழிமலம் உலர்ந்த நெருப்பிலிட்டுக் கடிவாயில் புகைபிடிக்க இறங்கும். அல்லது கருநாபியைத் தண்ணீரி லரைத்துக் கொட்டினவாயில் போடத் தீரும். அல்லது பூனைக்காஞ்சான் சொறிச்சாறும் முருக்கிலைச் சாறும் கொட்டுவாயில் வேது பிடிக்கத் தீரும். அல்லது வெண்குன்றி வேரை வெந்நீரிலரைத்துப் பிழிந்து வடிகட்டிப் பஞ்சில் ஊட்டிக்கொண்டு இடது பக்கங் கொட்டினால் வலது நாசியிலும் வலது பக்கங் கொட்டினால் இடது நாசியிலும் நசியம் பண்ணத் தீரும்.

## நண்டுவாய்க்காலி

இது கொட்டினால் வியர்வையும் நெறி கட்டுதலும் வீக்கமும் கடுப்பும் குடைச்சலும் எரிச்சலும் குமறலும் வாயில் நுரையும் உண்டாகும். இந்த விஷம் எட்டிவேர்ப் பட்டையைப் பெரும் நெல்லிக்காய்ப் பிரமாணம் அரைத்து அரையாழாக்கு வெந்நீரில் கரைத்து உள்ளுக்குக் கொடுப்பித்துக் கொட்டினவாயில் கத்திரிக்காயைச் சுட்டுக் கட்டினால் தீரும்.

# மூஷிக பேதம்

மூஷிகமென்பது 18 வகைப்படும். அவையாவன : லாலஜம், சபளம், புண்டரம், ஹரிதம், சிகுரம், அசிதம் காஷாயதந்தம், சூநகம், கோகிலம், கபிலம், கிருஷ்ணம், அருணம், சபலம், சுவேதம், சுகோதம், உந்துரு, பலினி, ரசாலம், என்பனவாம். அன்றியும் சுசுந்தரி யென்பது ஒன்றுண்டு. இதுவே மூஞ்சூறு. மூஷிக மென்பது எலி.

## லாலஜ எலி

மிகுந்த அலைச்சலை உடையதாயிருக்கும். இது கடிக்கில் வாந்தி, மூர்ச்சை, வாய்நீர் ஊறல் என்னும் இக்குணங்களுண்டாகும்.



## சபள எலி

திரிதோஷ குணத்துடன் பல நிறங்களைப் பெற்றிருக்கும். இது கடிக்கில் வாந்தி, மிகுந்த மூர்ச்சை, அதிக தாகம் என்னும் இக்குணங்களுண்டாகும். சபளம் என்பது பல நிறமாம்.

## புண்டர எலி

பேய்க்கரும்பின் நிறத்தைப் பெற்றிருக்கும். இது கடிக்கில் சரீரம் வெளிரலும் அக்கரும்பு வர்ணமுள்ள விரணமும் உண்டாகும்.

## ஹரித எலி

மஞ்சள் நிறத்தைப் பெற்றிருக்கும். இது கடிக்கில் அக்கினி மந்தமும் கொட்டாவியும் மயிர்க்கூச்செறிதலும் உண்டாகும்.

## சிகுர எலி

தேகமுற்றிலும் முறைத்த ரோமங்களைப் பெற்றிருக்கும். இது கடிக்கில் தலைநோய், வீக்கம், வாந்தி, பிரமை, தேகமுற்றிலும் மச்சம் என்னு மிக்குணங்கள் உண்டாகும். சிகுரமென்பது ரோமம்.

## அசித எலி

உதட்டில் கறிய நிறத்தைப் பெற்றிருக்கும். இது கடிக்கில் சரீரங் கருத்தலும் மூர்ச்சையும் வாந்தியும் மார்பு நோயு முண்டாகும்.

## காஷாயதந்த எலி

சிவந்த பற்களைப் பெற்றிருக்கும். இது கடிக்கில் சதா உறக்கமும் மார்பு வறளலும் மலபந்தமும் உண்டாகும். இதனைத் துங்களலி யென்பர்.

## சூநக எலி

மரக்கால் உடலைப் பெற்றிருக்கும். இது கடிக்கில் சிவந்த மச்சங்களுடன் நோயுண்டாகும். சூநகமென்பது மரக்கால்.

## கோகில எலி

குயில்போல் புள்ளிகளைப் பெற்றிருக்கும். இது கடிக்கில் கிரந்தியும், உக்கிரமான சுரமும், தாகமும் உண்டாகும். கோகிலம் என்பது குயில்.

## கபில எலி

கபில நிறமுள்ளது. இது கடிக்கில் கண்டுகண்டாக வெழும்பி விரணமாகும். இதனால் சுரம் பிரமை வாந்தி யென்னும் இக்குணங்கள் உண்டாகும்.

## கிருஷ்ண எலி

கரிய நிறத்தைப் பெற்றிருக்கும். இது கடிக்கில் தினந்தோறும் ரத்தவாந்தியும் மழைக்காலத்தில் அதிக ரத்தம் வீழ்தலும் உண்டாகும்.

## அருணம், சபலம், சுபேதம், சுகோதம், உந்துரு, பலினி என்னும் எலிகள்

இவ்வாறுவித எலிகளுங் கடிக்கில் திரிதோஷம் அதிகரித்துச் சந்நிபாத குணங்கள் அதிகரித்தலுடன் கடித்தவிடத்தில் ரத்தம் வடிதல், கிரந்திக ளெழும்புதல், காதின்கீழ்க் கட்டிகள் பிறத்தல் என்னு மிக்குணங்களுண்டாகும்.

## ரசால எலி

நாமக்கரும்பு நிறமாயிருக்கும். இது கடிக்கில் நெஞ்சு பறத்தலும், சொல்லக்கூடாத வேதனையு முண்டாகும். சகல எலி விஷங்களும் தேகத்தி லடங்கியிருந்து மழை மேகம் யெழும்புகிற காலத்தில் அதிகரிக்கும். பெருச்சாளிக்கும் இவ்விஷம் உண்டு. ரசாலம் என்பது நாமக்கரும்பு.

## சுகுந்தரி எலி

இது கடிக்கில் சரீர மிளைத்தலும், பேதியும், வாய் பேசக் கூடாமையும் உண்டாகும். இதற்கு (நீலி) குடி நீர் ஆகும்.



## எலிச் சுக்கில விஷம்

எலிகள் புணருங் காலத்தில் அச்சுக்கிலம் யார்மீதாவது சிதருமாகில் அந்தவிடத்தில் கிரந்தி, வீக்கம், மச்சங்களெழும்புதல், பிரமை, அரோசிகம், குளிர்க்காய்ச்சல், கீல்நோய், நடுக்கல், ரோமச்சிலிர்ப்பு, மூர்ச்சை, சிலேஷ்மாதிக்கம், வாந்தி, தாகம் முதலிய குணங்க ளுண்டாகும்.

## அசாத்திய எலி விஷம்

எந்த எலியினாலாவது மயக்கம், தேக வீக்கம், மாறுருவம், வியர்வை, காது மந்தம், சுரம், தலைநோய், வாய்நீர் ஊறல், ரத்தவாந்தி யென்னும் இக்குணங்களுடாகில் அசாத்தியமே.

## மேற்கூறிய எலி விஷங்கட்குச் சிகிச்சை

இருமல், இரைப்பு, கோழை, வாந்தி முதலிய துர்க்குணங்களைப் பிறப்பிக்கிற எலி விஷத்திற்கு அழிஞ்சிவேர்ப் பட்டையைப்புன்னைக்காய் வீதம் வெந்நீரி லரைத்து 8-நாள் இரண்டு வேளையுங் கொடுக்கில் தீரும். குறட்டை எலி இவைகளின் விஷம் இலந்தைக்கா யளவு பனைவெல்லத்தில் 8-துளி எருக்கம்பால் விட்டு மத்தித்து 7-நாள் சாப்பிடத் தீரும். வயிற்றில் ரத்தபாய்ச்சலையும் பற்களின் குடைச்சலையும் தருகின்ற எலி விஷத்திற்கு அவுரிவேரை நெல்லிக்காயளவு அரையாழாக்கு பாகம் பாலிலரைத்துக் கரைத்து 8-நாள் உள்ளுக்குக் கொடுத்து அந்த இலையை அரைத்துக் கடிவாயில் துவாலையிடத் தீரும். இன்னும் நீலக்காக்கணம் வேரைச் சிறிய கொட்டைப்பாக்குப் பிரமாணமாய் அரைத்துக் காலையில் மாத்திரம் 7-நாள் அல்லது 5-நாள் சாப்பிடத் தீரும். இவைகட்கு உப்பில்லாப் பத்தியம்.

## சகல எலி விஷத்திற்கும் சிகிச்சை

திருவடி விளக்கன், வாரபுத்திரன், உதிரமண்டலி, அருணன், குலத்தன், மந்திரி, முந்திரையன், உத்திரியன், விரிசெங்கன், விசையன், அலியன், உத்தமன் இவை 12-க்கும் அவற்றின் குணமும் ஔஷதமும் இதனடியிற் காண்க.

### திருவடி விளக்கன் எலி

இது கடிக்கில் கண் சிவந்து தேகம் சொறியாகும். கோரைக்கிழங்கு என்னும் முத்தக்காசும் இந்துப்பும் தேனில் கொடுக்கவும்.

### மார புத்திரன் எலி

இது கடித்தால் சரீரத்திற்குள் வெதும்பும்; எரிக்கும்; அழலை கண்டு வாய் நாற்றமாகும். இதற்கு வாழைப்பட்டையும் அதன் விரையும் தேனில் அரைத்துக் கொடுக்கவும்.

### உதிரமண்டலி எலி

இது கடித்தால் சிறுநீர் ரத்தம்போ லிறங்கும் கடிவாயில் வட்டம்போ லிருக்கும். இதத்கு மஞ்சளும் பற்பாடகமும் நெய்யில் அரைத்துக் கொடுக்கவும்.

### அருணன் எலி

இது கடிக்கில் உடம்பு கருக்கும். இருமல் காணும். தேக மிளைக்கும். அதற்கு முத்தக்காசும் பற்பாடகமும் தேனிலரைத்துக் கொடுக்கவும்.

### மந்திரி எலி

இது கடிக்கில் சொரியாகித் தினவாகும். பாவட்டம் இலை மாடப்புறா எச்சம் இவைகளை அரைத்து முகத்தில் பூசி, காக்கணவேர் கருவேலம்பட்டை வில்வவேர் சமன் தேனிலரைத்துக் கொடுக்கத் தீரும்.



### குலந்தன் எலி

இது கடிக்கில் உடம்பு குளிர்ந்து நடுக்கங் காணும். இதற்குச் செஞ்சந்தனம் தேனிலரைத்துக் கொடுக்கவும்.

### முத்திரையன் எலி

இது கடித்தால் உடம்பு வெண்குட்டமாகும். அதற்கு வாகை விரையைச் சூரணித்துத் தேனில் கொடுக்கவும்.

### உத்திரியன் எலி

இது கடித்தால் உடம்பில் கொப்புளங்க ளெழும்பும். அதற்குத் தகர விரையைக் காடியிலரைத்துப் பூசி உள்ளுக்கும் கொடுக்கத் தீரும்.

### விரிசங்கன் எலி

இது கடித்தால் வாய் நீருண்டாகும்; வீங்கும்; உடம் பெரியும். அதற்குக் கடுகுரோகணியும் கற்கண்டும் கொடுக்கத் தீரும்.

### விசையன் எலி

இது கடித்தால் வாய் நீருண்டாகும்; வீங்கும். உடம்பு முற்றும் சிலிசிலிர்க்கும். அதற்கு நாழி உளுந்தும் அரிசியும் விளங்காய்ச்சதையும் அரைத்து நெய்யில் குழைத்து உடம்பிலும் தலையிலும் பூச நீங்கும்.

### அலியன் எலி

இது கடித்தால் உடம்பு தத்துப்போல் கண்டும் வீங்கும். கண் கருக்கும். அதற்குச் சிறுகீரை வேரைத் தேனில் குழைத்துக் கொடுக்கத் தீரும்.

### உத்தமன் எலி

இது கடிக்கில் தேகமெங்கும் கொப்புளமாகும். அதற்குப் பாவட்டம் இலைச் சாறும் புறா எச்சமும் தேனில் மத்தித்துக் கொடுத்து உடம்பிலும் பூச நீங்கும்.

மேற்கண்ட நாமங்களுடைய எலிகள் கடித்தால் மேற்கண்ட விதமாக நோய்கள் காணுவதால் மேற்கண்டபடி

அவிழ்தங்களை 10-15 நாள் கொடுக்க நிவர்த்தியாகும். அப்படி வியாதிகளைக் கவனித்துப் பாராமல் மேக சம்பந்த வியாதிகளென்று மதித்துப் பலவாறான அவிழ்தங்களைக் கொடுப்பதில் வியாதிகள் நீங்காமற் போவதால் அவுஷதங் கள்புகன்ற முன்னோர்கள்பேரில் பிழைகூறுவது வீணாகும்.

## எலிகளின் கடிவிஷக் குறிகள், அவைகட்கு நிவர்த்தி

எலிக்கடியால் பல்லில் வலியும் ஊளையும் இரத்தமுங் கண்டால் அவுரி வேரை ஒரு கொட்டைப்பாக்குப் பிரமாணம் அரைத்து ஆவின்பாலில் ஏழு நாள் கொடுக்கத் தீரும்.

### தேகத்தில் கோப்புளங் கண்டால்

பெருமரப் பட்டை, இலை, வேர் இம்மூன்றையும் சமனாயிடித்துச் சூரணித்து ஆவின் வெண்ணெயில் மத்தித்துக் கால் மண்டலங் கொள்ளத் தீரும்.

### சுவாசகாசங் கண்டால்

சங்கு வெள்ளைக்காக்கட்டான் இவ்விருவகை வேர்களையும் அரைத்து ஆவின்பாலில் கொடுத்துவரத் தீரும்.

### இருமல் கண்டால்

கோரைக்கிழங்கைச் சூரணித்துத் திரிகடிப் பிரமாணம் தேனிற் சாப்பிடத் தீரும். இறங்கழிஞ்சி வேர்ப் பட்டையை ஒரு புன்னைக்காய்ப் பிரமாணம் அரைத்து வெந்நீரில் ஏழுநாள் காலையில் கொடுக்கத் தீரும்.

### இரைப்பு கண்டால்

நாயுருவிச மூலம் அரைத்து ஒரு கொட்டைப்பாக்குப் பிரமாணம் சாப்பிட்டுவரத் தீரும்.

### உடல் வெதும்பித் திகைத்தால்

மூக்கரைச்சாரணைவேரை ஆவின்பாலில் வேகவைத்து உலர்த்திச் சூரணித்துத் திரிகடிப்பிரமாணம் சாப்பிட்டு வரத் தீரும்.



### உடல் வீங்கினால்

நீலக்காக்கட்டான் வேரை ஒரு கொட்டைப் பாக்குப் பிரமாணம் அரைத்து ஆவின்மோரில் கொடுக்கத் தீரும். அவுரிச் சாற்றைத் தேகத்திற் பூசவும்.

### கைகால் வராவிட்டால்

அவுரிவேர் சங்கம்வேர் இவ்விரண்டையும் சூரணித்துத் திரிகடிப் பிரமாணம் சாப்பிட்டுவரத் தீரும்.

### உடலிற் சுழலை போலும் பலா வித்துப் போலும் தடித்தால்

வெல்லத்தில் ஏழு துளி வெள்ளெருக்கம்பால் விட்டு 7 நாள் கொடுக்கத் தீரும். எருமைச்சாணிப் பாலை மாகாணிப்படி வீதம் மூன்றுநாள் கொடுத்து அந்தச் சாணியை வறுத்து ஒத்தடம் செய்யவும். வெள்ளை ஆதளைக்கிழங்கை அரைத்துக் கொட்டைப்பாக்குப் பிரமாணம் வெந்நீரில் கொடுக்கத் தீரும்.

### முகத்தில் கருவங்கு போலும் தேகத்தில் குஷ்டம் போலும் தழுதணையைப் போலும் விழுந்தால்

ஆடுதின்னாப்பாலை வேர் சங்கம்வேர் இவ்விரண்டையும் சூரணித்துக் கால் மண்டலங் கொள்ளத் தீரும்.

### கைகால் உளைந்து, கண் சுருங்கி, உடம்பிற் சுழலைபோற் சுட்டித் தினவெடுத்தால், வெடித்துப் புண்ணானல்

சித்திரமூலம், சிவன்வேம்பு, குழப்பாலை, வெள்ளறுகு இந்நான்கையும் சூரணித்துத் திரிகடிப் பிரமாணம் சாப்பிட்டு வரத் தீரும்.

### உடல் குனிந்து நடுங்கிக் கடிவாய் வட்டமாயிருந்தால்

செஞ்சந்தனம் திப்பிலி இவ்விரண்டயும் பொடித்துத் திரிகடிப்பிரமாணம் தேனிற்கொள்ளத் தீரும்.

## கைகால் முடங்கலுக்கு

அமுக்குராக் கிழங்கைச் சூரணித்துத் திரிகடிப்பிர மாணமாகத் தேனில் ஒரு மண்டலங் கொள்ளத் தீரும். ஷை கிழங்கை அரைத்துப் பூசிவரத் தீரும். அவுரி சமூலம் இடித்துச் சாறுவாங்கி மாகாணிப்படி வீதம் உள்ளுக்குக் கொடுத்து அந்தச் சாற்றை உடம்பெங்கும் பூசி முறுக்கச் சகல எலிகளின் விஷமும் நீங்கும். வீழி வேரை அரைத்து ஒரு கொட்டைப்பாக்குப் பிரமாணம் வெந்நீரில் மூன்று நாள் கொடுக்கத் தீரும். பேய்ப் பீர்க்கிலைச் சாற்றை மாகாணிப்படி வீதம் 3 நாள் கொடுக்கச் சகல எலிகளின் விஷந் தீரும். இவைகளுக்குப் பத்தியம் உப்பு புளி தள்ளவும்.

## நாய் கடிக்கு

நாராக் கரந்தை, நன்னாரி, சென்னாயுருவி இந்த 3 இலைகளும் எள்ளும் புகையூறலும் சேர்த்தரைத்துக் கடிவாயிற் பூசவும். மேலுக்குக் கோவையிலையை அரைத்துப் பூசவும். சுண்டையிலையும் உப்பும் அரைத்துப் பூசினாலும் தீரும்.

## நாய், நரி, சிறுபுலி, குரங்கு கடிக்கு

அவுரி வேரை ஒரு கொட்டைப் பாக்குப் பிரமாணம் அரைத்து ஆவின்பாலிற் கலக்கி மூன்று நாள் கொடுத்து வேரை அரைத்துக் கடிவாயிற் பூசத் தீரும். கொல்லங் கோவைக்கிழங்கை ஒரு கொட்டைப் பாக்குப் பிரமாணம் அரைத்து வெந்நீரில் 3 நாள் கொடுத்து அதை அரைத்துக் கடிவாயிற் பூசவும்.

## மனிதர், பேய்நாய், பேய்நரி, பெருச்சாளி, எலி கடிகளின் விஷத்துக்கு

இறங்கழிஞ்சிப் பட்டையை ஒரு கொட்டைப்பாக்குப் பிரமாணம் வெந்நீரிற் கலக்கி 3-நாள் காலையில் கொடுக்கத் தீரும். மேற்படி மருந்தினால் வாந்தி பிராந்தி கண்டால் சுக்கு மிளகு வசம்புக்கரி இவை வகையொன்றுக்கு வராகனெடை 1, முருங்கையீர்க்கு ஒரு பிடி இவைகளைச் சிதைத்து அரைப்படி தண்ணீரிற் போட்டு அரைக்காற் படியாய் வற்றவைத்துக் கொடுக்க வாந்தி நிற்கும்.



## பேய்நாய் கடிக்கு

இது கடித்தால் அவ்விடத்தில் விரணம் பிறக்கும். இதனால் தாது நஷ்டம், வாய் நீர் ஊறல், கண்மயக்கம், காதுமந்தம், தேஜசு நீங்குதல், தாள்பிடிப்பு, சிரோபாரம், தூங்கும்போது இவ்விரணத்தில் நின்றும் கருத்த ரத்தம் வடிதல், மார்புநோய், சுரம், தேகம் மரத்தல், தாகம், மூர்ச்சை யென்னு மிக்குணங்கள் உண்டாகும். இதற்குக் கற்றாழை மடலும் லவணமும் சமமாக இடித்துக் கடிவாயில் 3-தினம் கட்டுவதுந்தவிர பேயத்திவேர், ஆலம் பட்டை, வேப்பிலை 3-ம், வகை 1-க்கு பலம் 10, ஆகக் கூட்டியிடித்து ஒருபடி கழுநீர்போட்டுக் கொதிப்பித்துக் குழம்பா யிறக்கி ஏழுநாள் மேலுக்குப் பூசி ஷை மருந்தால் விரோசனமும் செய்விக்கத் தீரும்.

## சகல மிருக ஜெந்துக்களின் விஷ நிதானம்

குதிரை, புலி, கரடி, காட்டுப்பன்றி கோனாய், நரி, பூனை, மாயப்பூனை, குரங்கு, கீரி, முதலை முதலிய செந்துக்கள் கடிக்கில் அந்தக்கோரைத் தந்தங்களில் இருக்கின்ற விஷத்தினால் தினவு, உருவபேதம், நோய், நித்திரையில் வியர்வையொழுகுதல், சுரம், பிரமை, தாகம், வீக்கம், கிரந்தி மயக்கம், கடிவாயில் மச்சமும் அதன்மேல் கொப்புளமும் எழும்பிப் படையும் அநேக ரோகமும் பிறத்தல் என்னு மிக்குணங்கள் உண்டாகும். இவைகட்கு உடனே ரசகந்தக பாஷாணவருக்கம் சேர்ந்த விஷமருந்துகளைக் கடிவாயில் வைத்துக்கட்டி அந்த விடத்தில் ரோமங்கள் ஒட்டாத விரணஞ் செய்வித்து அதைக் காலாதீதத்தில் ஆற்றுவதுந் தவிர அந்த அவுஷதங்களை உள்ளுக்குக் கொடுப்பிக்கில் ஷை விஷம் சாத்தியமாம். இவ்வளவு பெரிய சிகிச்சைகளைச் செய்வானேன் என்றால் அவ் விஷங்கள் அற்பமேனும் தேகத்தில் தங்கி ஊறுமாயின்

பின்பு சகல துற்குணங்களும் பிறக்கும். ஆதலால் செய்ய வேண்டும். இது தப்பிக் காலாதீதச் சிகிச்சை செய்யில் விஷமும் முதிர்ந்து அந்தந்த ஜெந்துக்களின் நடை குரல் பார்வை சேஷ்டை முதலிய குணங்களும் பிறக்கும். அப்போது அசாத்தியமாம்.

## தந்த நக விஷ நிதானம்

பசு முதலிய மாடுகளுக்கும் மனிதர்களுக்கும் பல் நகம் இவைகளில் விஷம் உண்டு. அவைகள் பட்டு விரணம் பிறந்தால் அதிக வீக்கத்துடன் ரத்தம் வடியும். இதனால் சுரம் உண்டாகும். இது அசாத்தியமாம்.

## சகல விஷ உபத்திரவ நிதானம்

சகல விஷங்களுக்கும் சுரம், இருமல், இரைப்பு, வாந்தி, விக்கல், மயக்கம், தாகம், சரீரத்தில் கடினத்துவம், வயுறுப்பிசம், அடிவயிறும் தலையும் நோதல், வீக்கம், துர்க்கந்த ரத்தம் வடிகின்ற விரணம், வாதாதிக்கம் என்னும் 14 துர்க்குணங்கள் பிறக்கும். இதுவே விஷ உபத்திரவமாம். இக்குணங்கள் உண்டாவதற்கு முன்னமே தகுந்த சிகிச்சைகளைச் செய்யின் சாத்தியமாம். நீடிக்கில் கஷ்ட சாத்தியமாம்.

## தூஷி விஷ நிதானம்

முற்கூறிய எவ்வகை விஷமானது தானே க்ஷீணகதியானாலும் விஷஹரமான சிகிச்சையால் அதமானாலும் வெய்யில் காட்டுத்தீ காற்று முதலியவைகளினால் சோஷித்தாலும் சுபாவமாகவே சோஷித்தாலும் அவ்விடத்துள் அழுகப்பட்டிருந்தாலும் அவ்விஷங்களுக்குத் தூஷி விஷம் எனப் பெயர். இவைகள் அற்பமாயிருந்தாலும் மனிதர் தேகத்தில் பாய்ந்தவுடனே சிகிச்சை செய்யவேண்டும். செய்யாவிடில் ஒரு வருஷ பரியந்தம் உடம்பினுள் அடங்கியிருந்து பின்பு கபத்தைப்பற்றி ஏறும். இதனால் பல நிறமான மலம், வாயினால் ரத்தம் வீழ்தல், தாகம், அரோசகம், வாந்தி, மயக்கம், ஈனத்தொனி, சோருதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். அதற்குப் பின்பு அது ரகசிய ஸ்தானத்தைப்பற்றி ஏறும். இதனால் சிலேஷ்ம வாத ரோகங்கள் பிறக்கும். அதற்குமுன் அது பக்குவாசய ஸ்தானத்தைப்பற்றிக் கலக்கும். அப்போது வாதரோக குணங்களெல்லாம் பிறப்பது மன்றித் தலைமயிர்கள் உதிரும். இதற்குப் பின் அது சப்த தாதுக்களையும் பற்றிப் பரவும். அப்போது அனந்த விகாரங்களுண்டாம். ஆதலால், அற்ப விஷத்திற்கும் மகாவிஷ சிகிச்சைகளைச் செய்யவேண்டும். தூஷி யென்பது அற்பமாம்.



## சில விஷ ஜந்துக்களின் உற்பத்தியும் சிகிச்சையும்

காட்டு ஓணன், தேள், நண்டுவாய்க்காலி, பூரான், சிலந்தி, புலிமுகப்பூச்சி, செய்யான், பொறிவண்டு இவைகள் விரியன் என்னும் பாம்பினது முதுகு வெடிக்க அதன் வழியாகப் பிறக்குமென்று சிலசாஸ்திரங்கள் கூறுகின்றன

## சீதமண்டலி

இது கடித்தால் குடல் குளிர்தலும் அரட்டலும் மிகுந்த வியர்வை பெருகி ஓடுதலும் உண்டாகும். இதற்கு ரசகந்த மாதி உண்டை ஆகும்.

## ரத்தமண்டலி

இது கடித்தால் மயிர்க்கால்கள்தோறும் ரத்தம் ஒழுகும். இதற்கு யானைவணங்கி இலையை மாத்திரம் பெரிய எலுமிச்சங் காய்ப் பிரமாணம் அரைத்து ஆழாக்கு நல்ல ஜலத்தில் கரைத்துக் கொடுக்கில் நலமாம்.

## அறுபுள்ளி வண்டு

இது கடித்தால் சர்வாங்கத்திலும் சிலநாட் சென்ற பின்பு வட்டம் வட்டமான தடிப்புகள் உண்டாகும்.

## செய்யான்

இது கடித்தால் அவ்விடத்தில் வீக்கமும் தேளைப் போல் மறுநாள் வரைக்கும் கடுப்பும் உண்டாகும். இதற்குத் தேள் விஷ சிகிச்சை உதவும்.

### செஞ்சேரா

இது கடித்தால் மேலில் சிவந்த புள்ளிகளான தடிப்புகள் உண்டாகும். இவ்விஷம் உத்தாமணியிலை ரசத்தில் சுண்ணம் குழைத்துப் பூசத் தீரும்.

### கருஞ்சேரா

இது கடித்தால் தேகத்தில் கருப்புக் கருப்பான தடிப்புகள் உண்டாகும். இதற்கும் மேற்கூறிய சிகிச்சைகள் ஆகும்.

### பூரான்

இது கடிக்கில் அது ஊறுவதுபோல் தினவும் அவ்வுருவத்தைப் போல் தடிப்பும் உண்டாகும். இதற்குக் குப்பைமேனிச் சாற்றை உள்ளுக்குக் கொடுத்துப் பத்தியமிருக்கவும்.

### சேவ்வட்டை

இது கடித்தால் அவ்விடத்தில் சிவந்து தடித்து மரத்திருக்கும்.

### அரணை

இது கடித்தால் சரீரமுழுதும் நடுக்கல், வாயால் நுரை வீழ்தல், நாவு தடித்தல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இதற்கு ஓணான் விஷத்திற்குச் சொல்லிய சிகிச்சைகள் உதவும்.

### சரகுண்ணி

இது கடித்தால் வீக்கம் எழும்பும். காட்டுண்ணிக்கு இக்குணத்துடன் கடுப்பும் உண்டாயிருக்கும். இதற்குக் குப்பைமேனி ரசம் ஆகும்.

### எலிபேதம்

கத்தரிமணியன், செம்மூக்கன், வரளி, குறட்டை, கருங்காலன், தலையன், விடவெலி, சொற்றலைமுட்டி, செவ்வெலி, வீங்கெலி, தூங்கெலி, உபையெலி, புடையெலி, இரைப்பெலி, செங்கண்ணன், புள்ளக்காடன், குறுகாளன், நச்செலி ஆக 18 வகையாம்.

## சகல விஷக் கடிகளுக்கும்

# அவுஷத வகுப்பு

### சர்வ விஷத்திற்கும் பரஞ்சோதிக் குழம்பு

| | |
|---|---|
| ஊமத்தன் பருப்பு | இரசம் |
| மகிழம் பருப்பு | கெந்தகம் |
| அழிஞ்சில் பருப்பு | வெங்காரம் |
| தில்லைப் பருப்பு | குக்கில் |
| வெண்குன்றிப் பருப்பு | நாவிக் கிழங்கு |
| வாளப் பருப்பு | நிருவிஷம் |
| மனோசிலை | பொன்மெழுகு |
| அரிதாரம் | பெருங்காயம் |
| கெவுரி | சுக்கு |
| வெள்ளைப் பாஷாணம் | மிளகு |
| இலிங்கம் | திப்பிலி |
| நவாச்சாரம் | வெள்ளைப்பூண்டு |
| சீனக்காரம் | வெந்தயம் |
| நீலத்துருசு | |

இவைகள் வகையொன்றுக்கு வராகனெடை 2-ஆகச் சுத்தி செய்து எலுமிச்சம் பழச்சாற்றில் ஐந்து நாள் வரையில் கைவிடாமல் அரைத்து மேதிக் கொம்புச் சிமிளிலடைத்துக் கொண்டு பணவெடை வெற்றிலையிற் றடவிக் கொடுக்க அஷ்ட நாகம், விரியன், மண்டலி, செய்யான், செவ்வட்டை, தேள், நட்டுவாய்க்காலி, எலி, மூஞ்சுறு, பூனை, அரணை, முதலை, யானை, பேய்நரி, பேய்நாய் இவைகளின் கடி விஷமும் மற்ற ஊர்வனவாகிய விஷஜெந்துக்களின் கடி விஷங்களும் தீரும். இதற்குப் பத்தியம் ஆவின் பால் அன்னம் சாப்பிடவும்.

## மகா சிந்தாமணிக் குழம்பு

| | |
|---|---|
| இரதம் | தாரம் |
| கெந்தி | நிருவிஷம் |
| வெள்ளைப் பாஷாணம் | சன்னியாகம் |
| நாவிக்கிழங்கு | சுக்கு |
| இலிங்கம் | மிளகு |
| துத்தம் | கடுக்காய் |
| துருசு | வாளப்பருப்பு |

இவைகள் வகை 1-க்கு வராகனெடை .1

| | |
|---|---|
| குப்பைமேனி | ஊமத்தை |
| தைவேளை | அவுரி |
| பேய்ப்பீர்க்கு | வேலிப் பருத்தி |

இவைகளின் இலைச்சாறு வகை 1-க்கு அரைக்கால் படி. பேய்க்கும்மட்டி பழச்சாறு படி அரைக்கால். காஞ்சிரம் பழச்சாறு படி ஒன்று. இவைகளை விட்டு ஷை சரக்குகளைத் தனித்தனியே அரைத்துச் சட்டியிற் போட்டுக் கொஞ்சம் வேப்பெண்ணெயை விட்டு மெழுகு பதமாய்க் கிண்டி சிமிளிலடைத்துக் கொண்டு அஷ்ட நாகம் முதலாயுள்ள சர்வ விஷத்திற்கும் ஒரு குன்றி யெடை அல்லது அரை குன்றி யெடை கொடுக்கத் தீரும். பத்தியம் பால் அன்னம்.

## சஞ்சீவிக் குழம்பு

| | |
|---|---|
| துருசு | அரிதாரம் |
| இரதம் | நாவிக்கிழங்கு |
| காயம் | வெள்ளைப்பாஷாணம் |
| ஜாதிலிங்கம் | கெந்தகம் |
| வெங்காயம் | வேப்பம் பருப்பு |
| வாளப்பருப்பு | |

இவைகளை வெள்ளெருக்கம் பாலில் ஒரு ஜாமமும் வேப்பெண்ணெயில் ஒரு ஜாமமும் அரைத்துச் சிமிளிலடைத்



துக்கொண்டு பயிரளவு வெற்றிலையிற் கொடுக்க சர்வ விஷமும் தீரும். விஷவேகத்தாற் பற்கிட்டியிருந்தால் பண, வெடை வெந்நீரில் கலக்கிப் புகட்ட நீங்கும். பத்தியம் பாலும் அன்னமும். முருங்கையிலையை உப்பில்லாமல் அவித்து மிளகுப்பொடி தூவிக் கொடுக்கவும்.

## சஞ்சீவகரணித் தைலம்

| | | |
|---|---|---|
| காஞ்சிரம்பழம் | 103 | அமுக்குராக்கிழங்கு |
| பேய்க்கும்மட்டிப் பழம் | 103 | கெருடன் கிழங்கு |
| வெண்குன்றிப் பருப்பு | படி 2 | நாவிக்கிழங்கு |
| நீர்க்கடம்புப் பருப்பு | படி 2 | முத்தின வேப்பம்பட்டை |
| நீர்வெட்டிமுத்து | படி 2 | மாவிலிங்கப்பட்டை |
| நேர்வாளக்கொட்டை | படி 3 | பெருமரத்துப்பட்டை |
| வேப்பங்கொட்டை | படி 3 | கருஞ்சூரைப்பட்டை |
| கொடிவேலிவேர் | பலம் 210 | வேலிப்பருத்திவேர் இவை |
| காஞ்சிரைவேர் | ,, | வகை 1-க்குப் பலம் 210 |

இவைகளையெல்லாம் இடித்து வில்லை வில்லையாய்த் தட்டிக் காயவைத்துப் பாண்டத்திலிட்டுப் பூப்புடத் தயிலம் வாங்கி அந்தத் தயிலத்துக்குச் சமன் வேப்பெண்ணெய் கலந்து அதில் இரதம் விராகனிடை 2, பச்சைப் பாம்பு 1, மூஞ்சூறு 1, இம்மூன்றையும் கூடப்போட்டுக் கலசவாயை மூடி ஒரு மண்டலம் எருக் குப்பையில் புதைத்தெடுத்து வெற்றிலையிலாவது வெந்நீரிலாவது இரண்டு துளி கொடுக்க அஷ்டநாகம், விரியன், வழலை முதலான சர்வ விஷங்களும் இறங்கும். உயிர் அடங்கியிருந்தால் உச்சியைக் கீறி அதில் தைலத்தைத் தேய்த்து நாசியில் விட்டு நாவிலுந் தேய்க்க உயிர் மீளும். பத்தியம் பால் அன்னம்.

## இராமாயணத் தைலம்

| | |
|---|---|
| பிறங்களிஞ்சிவித்து | கழஞ்சிவித்து |
| புங்குவித்து | கடுக்காய் |
| தான்றிவித்து | கார்கோலவித்து |
| புன்னைவித்து | வகை 1-க்குப் படி 1 |

வெள்ளாட்டு நீரிலும் சிறுபிள்ளைகள் நீரிலும் 21-நாள் வீத மூறவைத்து உலர்த்திக் குழித்தைலம் வடித்துப் பண வெடை வெற்றிலையிற் றடவிக்கொடுத்துக் கடிவாயிலும் பூச அஷ்ட நாகங்கள், எலி, விரியன், புடையன், தேள், நட்டுவாய்க்காலி, மூறுக்கரவு, அரணை முதலிய சில்லரை விஷங்கள், விஷக்கடியால் நேரிடும் குஷ்ட முதலிய ரோகங்கள் தீரும். பத்தியம் வெள்ளாட்டுப் பால் அன்னம்.

## சஞ்சீவி மை

திருகு கள்ளியின் மேல்பொருக்கு இரண்டு பங்கும் இலுப்பைப் பிண்ணாக்கு ஒரு பங்கும் ஒன்றாய்க் கலந்து ஒரு பாண்டத்தி லடைத்து வெள்ளாட்டு எருக்கொட்டிக் குழித்தைலம் வடித்துக் கொள்ளவும். புதிய காஞ்சுரை வித்தையும் அதுபோல் தைலம் வடித்துக் கொள்ளவும். இந்த இரண்டு வகைத் தைலத்தையும் ஒரு நிறையாய் ஒன்றாய்க் கலந்து ஒரு பழைய சட்டியில் விட்டுக் காஞ்சிரை வேர் தடியால் கைவிடாமல் மையாகும் வரையில் கடைந்து செப்புச் சிமிளிலடைத்துக்கொண்டு ஒரு குன்றுமணி யெடை வெற்றிலைச் சாற்றிலாவது வெந்நீரிலாவது கலந்து கொடுக்க அஷ்டநாகம் முதலாயுள்ள சகல விஷமும் தீரும். உயிர் அடக்கமா யிருந்தால் நீர்த்தாரை மூலமாய் மேற்படி மையைப் பிரயோகிக்கத் தூங்கினவன் போல் விழிப்பான்.

## பரஞ்சோதி மை

தாய் ஈசல்கள் இருபது கொண்டுவந்து பீங்கானிற் போட்டுக் கால்வராகனெடை வெங்காரத்தைப் பொரித்துப் பொடித்து வெயிலில் வைக்கத் தைலமாகும். அந்தத் தைலம் கழஞ்சி 3, சுக்கு, பெருங்காயம், கெந்தி, சூதம், இந்துப்பு, வேப்பம் பருப்பு இவைகள் வகை யொன்றுக்கு கழஞ்சி 1, இவைகளை யொன்றாய்ச் சேர்த்தரைத்து மைப்பதத்தில் சிமிளிலடைத்துக்கொண்டு பணவெடை வெற்றிலையிற் சேர்த்துக் கொடுக்க அஷ்டநாகங்கள் முதலாயுள்ள சர்வ விஷமுந் தீரும். விஷம் சிரசிலேறி



மயக்கமாகிவிட்டால் எள்ளுப் பிரமாணம் மேற்படி மையைக் கண்ணில் கலிக்கமும் நாசியில் நசியமுமிட மயக்கம் தெளிந்து விஷமிறங்கிப்போகும். வெறி நாய், எலிக் கடி விஷமுந் தீரும். மேற்படி வெற்றிலையில் பெண்களுக்குக் கொடுக்க மலடு நீங்கும். குஷ்டம் பதினெட்டு குன்மவலி வயிற்றுவலி நீங்கும்.

## சூரன் மை

கெந்தகம் வெள்ளைப்பஷாணம் சூதம் இவைகள் வகை யொன்றுக்கு வராகனெடை 2 பொடித்து மூஞ்சூறு வயிற்றில் வைத்துத் தைத்து ஒரு கலசத்திற்போட்டு அது முழுகும்படி வேப்பெண்ணெய் விட்டுக் கலசவாயை மூடிச் சீலைமண் செய்து எருமைத்தொழுவில் ஒரு மண்டலம் புதைத்தெடுத்துக் கல்வத்திலிட்டு மயனமாய் அரைத்து சிமிளி லடைத்துக்கொண்டு நல்லரவு விஷத்திற்கு ஒரு சுண்டைக்காய்ப் பிரமாணமும் விரியன் விஷத்துக்கு இரண்டு சுண்டைக்காய்ப் பிரமாணமும் மற்ற சில்லறை விஷத்திற்கு ஒரு மிளகுப் பிரமாணமும் வெற்றிலையில் தடவிக் கொடுக்கத் தீரும்.

## பரஞ்சோதி மாத்திரை

| | |
|---|---|
| திப்பிலி | காஞ்சிரைவேர் |
| இந்துப்பு | மிளகு |
| கொல்லங்கோவைக் கிழங்கு | பழுபாகற்கிழங்கு |
| பெருங்காயம் | நாவிக்கிழங்கு |
| ஆடுதீண்டாப்பாளை வேர் | கெந்தகம் |
| சூதம் | செண்பகவேர் |
| இலுப்பைப்பருப்பு | முருங்கைவேர் |
| இருவாட்சிவேர் | வாளப்பருப்பு |

இவைகள் வகை யொன்றுக்கு வராகனெடை 1. இவைகளை யெல்லாம் பொடித்து மூஞ்சூறு வயிற்றுள் வைத்துத் தைத்து ஒரு கலசத்திற் போட்டு அதன் வாயை மூடிப்

பூமியில் புதைத்து மண்டலஞ்சென் றெடுத்துப் பேய்பீர்க்கிலைச் சாற்றால் அரைத்துப் பணவெடை வீதம் மாத்திரை செய்து ஒரு மாத்திரை வெற்றிலையில் வைத்துக் கொடுக்க சர்வ விஷமும் தீரும். விஷம் தலைக்கொண்டிருந்தால் ஒரு மாத்திரையை வெற்றிலைச் சாற்றில் மத்தித்துக் கண்ணில் கலிக்கமும் நாசியில் நசியமும் செய்து நீர்த்தாரையில் நாளத்தின் மூலம் பிரயோகிக்க விஷ மிறங்கும்.

## சூடாமணி மாத்திரை

| | |
|---|---|
| தொட்டிப்பாஷாணம் | வெள்ளைப்பாஷாணம் |
| கௌரிபாஷாணம் | அரிதாரம் |
| சூதம் | சேங்கொட்டைப்பருப்பு |
| காக்கைகொல்லிவித்து | துருசு |
| பெருங்காயம் | விளாவரிசி |
| கருநாவிக்கிழங்கு | மூஞ்சூறின் சதை |
| வாலுளுவையரிசி | வாளப்பருப்பு |
| இந்துப்பு | கார்கோலரிசி |
| முசுறுட்டை | வெங்காரம் |
| நவச்சாரம் | கல்லுப்பு |
| வெடியுப்பு | பேய்க்காளான் |
| எட்டி வித்து | |

இவை வகை யொன்றுக்கு விராகனிடை 1. இவைகளை வெள்ளெருக்கம் பாலால் 3-நாள் வரையில் கைவிடாமல் அரைத்துக் குன்றிபோல் மாத்திரை செய்து ஒரு மாத்திரையை வெற்றிலைச்சாற்றில் கொடுக்க சகலவிஷமூந் தீரும். உயிர் அடங்கியிருந்தால் உச்சியிலும், தோளிலும், தொடையிலும் மேற்படி மாத்திரையைச் சிறுநீரி லிழைத்துச் சூடு பிறக்கத் தேய்த்துவிட உயிர் திரும்பும்.

## கடிவாயிற் கட்டு மாத்திரை

| | |
|---|---|
| இரதம் | வாளப் பருப்பு |
| கௌரிபாஷாணம் | நாவிக்கிழங்கு |
| நெய்க்கொண்டான் பழம் | |



இவைகளை யோர் நிறையாக எடுத்து எலுமிச்சம் பழச் சாற்றால் மயனமாயாட்டி மாத்திரை செய்து கொண்டு எந்தப் பாம்பு தீண்டினாலும் கடிவாயில் வைத்துக் கட்ட விஷத்தைக் கீழ்நோக்கி யிழுத்துக்கொள்ளும்; மேற்செல்ல விடாது.

வெங்காரம், இரதம், அரிதாரம், பச்சைப் பாம்பு கண்டம் இவைகளை வெற்றிலைச்சாற்றில் ஆட்டி மாத்திரை செய்துகொண்டு கடிவாயில் வைத்துக் கட்ட விஷம் கீழ் நோக்கும்.

## அடக்கம் எழுப்ப அஞ்சனம்

| | |
|---|---|
| சூதம் | வாளப்பருப்பு |
| துத்தம் | வெங்காரம் |
| அரிதாரம் | நீலரெங்கு |
| நீலத்துருசு | |

இவைகள் வகையொன்றுக்கு வராகனெடை 1. இவைகளை பேய்ப்பீர்க்கிலைச் சாற்றில் அரைத்து மாத்திரைகளாகச் செய்துகொண்டு பணவெடை வெற்றிலைச் சாற்றிலாவது பேய்ப்பீர்க்கிலைச் சாற்றிலாவது இழைத்து விழியில் தீட்ட அஷ்டநாகம் முதலாயுள்ள விஷஜெந்துக்களின் கடியால் அடங்கின உயிர் மீளும்.

## கெருட அஞ்சனம்

இந்துப்பு, இரதம், பெருங்காயம், அரிதாரம் இவைகளை யோர் நிறையா யெடுத்துப் பேய்பீர்க்கிலைச் சாற்றிலாட்டி மாத்திரை செய்து பணவெடை வெற்றிலைச் சாற்றில் மத்தித்துக் கண்ணிலிட அஷ்டநாக முதலாயுள்ள சர்வ விஷமுந் தீரும்.

## அடக்கம் எழுப்ப ஆக்கிராணம்

தம்பலப் பூச்சி, இரதம், துருசு வகை யொன்றுக்கு விராகனெடை 1. இவைகளை ஒன்றாய்ப் பொடித்துச் சுந்தரி எலிவயிற்றுக்குள் வைத்துத் தைத்துப் புகையடிக்கிறவிடத்

தில் கட்டிவைத்துக் காய்ந்தபின் பொடித்து அதை நாசியில் ஊதச் சகல அரவு விஷமு மிறங்கும்.

காற்பலம் இஞ்சியை மேற்றோலைப் போக்கி அது முழுகும்படி வெள்ளெருக்கம்பால் விட்டு நிழலில் உலர்த்தி துருசு, மஞ்சள் வகைக்குப் பலம் அரைக்கால் கூட்டிப் பொடித்துப் பேய்ச்சுரைக் குடுக்கையில் அடைத்துக் கொண்டு நாசியி லூதச் சகல விஷமும் அடக்கமுந் தீரும்.

## சகல விஷத்திற்கும் அகோரருத்திராஞ்சனம்

கேளிரத்தம் பேய்ப்பீர்க்கன் சாற்றில் தோய்த்துக்
கெடியான வாளமொடு துத்தந்தாரம்
நீளவே வெங்காரந் தன்னை வாங்கி
நேராக யிவையைந்தும் சமனாய்க்கூட்டி
மாளவே பேய்ப்பீர்க்கன் சாற்றாலாட்டி
வழித்துருட்டிக் காயவைத்து எடுத்துக்கொண்டு
பாழ்விடங்கள் தீண்டிமண்டை கொண்டால்கண்ணில்
பதித்துவிடு பொரிபட்ட பஞ்சாந்தானே.

பேய்ப்பீர்க்கன் சாற்றைக் கொதிக்க வைத்து அதில் இரசத்தைத் தோய்க்கவும். இப்படி மூன்று முறை மேற்படிச் சாற்றில் சுத்தியான இரசம், இத்துடன் வாளம், அரிதாரம், வெங்காரம் ஆக ஐந்து சரக்கும் சமனெடை யெடுத்துக் கலுவத்தி லிட்டுப் பேய்ப்பீர்க்கன் சாற்றால் அரைத்து மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு விஷந் தீண்டியவர்களுக்கு உமிழ்நீர் அல்லது முலைப்பால் அல்லது கையாந்தகரைச் சாற்றால் இழைத்துக் கண்ணில் தீட்டினால் விஷம் மீளும்.

## சகல விஷத்திற்கும் கண் கலிக்கம்

தானென்ற இந்துப்பு இரதங்காயம்
தகட்டு அரிதாரமிவை சமனாய்க்கூட்டி
ஏனென்று சொல்லாமல் பேய்ப்பீர்க்கன் சாற்றால்
இறுகவரைத் துண்டை செய்து எடுத்துக்கொண்டு



நானென்ற கண்ணிலிட்டு உமிழ் நீராலே
நாகமது நான்குபல் நாட்டினாலும்
வானென்ற அண்டமதில் பரிதிகண்ட
வாடையென்னும் பனிபோல வாங்கும் பாரே.

இந்துப்பு, இரசம், தகட்டு அரிதாரம், காயம் இவை நான்கு சரக்கும் சமனெடை யெடுத்து, பேய்ப்பீர்க்கன் சமூலச் சாற்றினால் இரண்டு நாள் அரைத்துக் கலுவத்துடன் காற்றூறிய பிறகு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு உமிழ் நீரால் இழைத்துக் கண்ணில் தீட்டினால் நாகத்தின் நான்கு பல்லும் பட்டபோதிலும் அவ்விஷமானது சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கிவிடும்.

## சகல விஷத்திற்கும் சித்தாந்த பீரிச மாத்திரை

பாரடா சித்தாந்த பீரிச உருண்டை
பாடுகிறேன் மகிழ்வித்து தேவதாளி
நேரடா பேய்ப்பீர்க்கு வித்தும் சூதம்
நேர்வாள மிவையைந்தும் சமனாய்க் கூட்டி
ஏரடா சம்பீரச் சாறு விட்டு
எட்டுநாள் ஊறவைத்து எட்டொன்றுநாள்
சீரடா பயறுபோ லரைத் துருட்டித்
திரமாக நிழலுலர்த்தி வைத்துக்கொள்ளே.

வைத்துக்கொள் விஷந்தீண்டி சீவன் போனால்
வாகான கையான்சார் எருக்கன் சாற்றால்
வெற்றியா யொருகுளிகை யுரைத்துக் காதில்
விட்டடைக்க மறுசெவியில் காந்தல் காணும்
மெத்தவே காணவிட்டால் அமுரிதன்னில்
விரைந்திழைத்து ஒரு குளிகை வாயிற்போட
முத்தியாய்ப் புதுசீலை நனைத்து மூடில்
மூன்றேகால் நாழிகையில் விழிப்பான்காணே.

மகிழவித்து — இரசம்
தேவதாளிவித்து — வாளம்
பேய்ப்பீர்க்கன் வித்து

இவை ஐந்து சரக்கும் சமனெடை யெடுத்து எலுமிச்சம் பழச்சாறு மிதக்கவிட்டு எட்டு நாள் ஊறவைக்க வேண்டும். சாறு சுவரிப்போனால் மறுபடியும் விடவும். ஒன்பதாம் நாள் எடுத்து மைபோல் அரைத்துச் சிறுபயறு போல் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும். விஷந்தீண்டின பேர்களுக்குக் கையாந்தகரைச் சாற்றில் அல்லது எருக்கன் சாற்றில் இழைத்துக் காதில் விட்டால் மற்றொரு காதில் அனல் வீசும். அப்படி அனல் எழும்பாவிட்டால் சிறு நீர் விட்டு ஒரு குளிகையை யிழைத்துக் கண்ணில் கலிக்கம் தீட்டினால் மூன்றேமுக்கால் நாழிகையில் விழித்தெழுந்திருப்பான்.

## சுடுகோடு மீட்டான் குளிகை

காணப்பா காலன்கடி யெங்கேபோச்சு
காசினியில் விஷந்தீண்டி சாவாரில்லை
வீணென்று எண்ணாதே வேகம்மெத்த
விருதுகட்டிக் காப்பேனென்று விருதுபோடு
ஊணப்பா இக்குளிகை சூட்சமாகும்
உறுதியிலே சுடுகாடு மீட்கலாகும்
நாணப்பா நாவிரசங் காயங்கோஷ்டம்
நல்வாளப் பருப்பழிஞ்சிப் பருப்பும்பேயே
பேய்ப்பீர்க்கன் வித்துகாஞ் சிரையின்வித்து
பேர்சமனாய்த் தேசிச்சார் மிதக்கவிட்டு
ஓயாமல் ஒருஜாமம் அரைத்துருட்டி
உண்டைசெய்து நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு
தீயானகாலவிஷந் தலைமேற்கொண்டால்
சிறுநீரில் உரைத்திடுவாய் கண்ணிலேதான்
ஓயாதவிஷமதுதா னுன்பேர்சொன்னால்
ஒழிந்தொடுங்கிப் போச்சுதடா உண்மைதானே.



நாபி — வாளம்
இரசம் — அழிஞ்சிவித்து
காயம் — பேய்ப்பீர்க்கன் வித்து
கோஷ்டம் — எட்டிவித்து

இவை 8 தினுசும் சமனெடை யெடுத்து எலுமிச்சம் பழச்சாறு மிதக்க விட்டு ஒரு ஜாமம் கைவிடாமல் அரைத்துப் பயறு பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் வைத்துக்கொண்டு விஷந்தீண்டின பேர்களுக்கு ஒரு மாத்திரை யெடுத்துச் சிறுநீரில் உரைத்துக் கண்ணில் தீட்டினால் விஷம் மீண்டு விழித்தெழுந்திருப்பார்.

## சகல விஷத்திற்கும் மகா பரஞ்சோதி மை

போச்சுதிந்தப் பரஞ்சோதி மையைக்கேளு
புகழான மகிழ்வித்து அழிஞ்சிவித்து
வாய்ச்சிந்த வெண்குன்றி பருப்புவாளம்
வகையுள்ளிக் குக்கிலுடன் கௌரிதாரம்
நீச்சிந்த நவச்சாரம் திரிகடுகுநாவி
நிருவிஷவெங்கார மனோசிலையும்லிங்கம்
ஆச்சிந்த பொன்மெழுகு தில்லைவித்து
அழகான சீனமுடன் துருசுவாங்கே.

வாங்கியே வகைவகைக்குக் கழஞ்சுவீதம்
வளமானகெந்திரசம் ஒவ்வொன்றுக்கும்
ஓங்கியே எலுமிச்சம் பழச்சார் தன்னை
உறுதியாய் விட்டரைப்பா யைந்துநாள்தான்
பாங்கான ரவியில்வைத் தெடுத்துக்கொண்டு
பண்பாக வாய்குவிந்த பீங்கான் தன்னில்
தாங்கியே வைத்தடைத்து நித்த நித்தந்
தயவாகப் பணவெடை வெற்றிலையிலீயே.

ஈந்திட்வே குஷ்டவகை பதினெட்டும்போம்
யெரிவிரியன்வகையாறு நாகமெட்டும்
காய்ந்திடுமண் டலிநாலுங் கடுவிடங்கள் பூரான்
கதறுமடா செவ்வட்டை முதலைமூஷி
ஆய்ந்தரணை விற்புருதி யாறுமோடும்
அப்பனே ஜன்னிபதின் மூன்றுமோடும்
சேர்ந்தபிணி தீயிலிட்ட மெழுகாய்ப்போகும்
திடமான பரஞ்சோதி திடமாங்காணே.

திடமான மையிதுதான் தேசமெல்லாம்
ஜெயஸ்தம்பம் நாட்டிவைக்கும் விருதுபோடு
விடமீட்க வல்லருனக் கெதிரியில்லை
வீணுக வுலகுதனில் மைதான்மெத்த
படியுண்டே இம்முறைபோ லெதுவுமில்லை
பார்ப்பதற்கு இதுசுலபம் பரிக்ஷைமெத்த
நொடிக்குமுன்னே நோய்விஷங்கள் ஓடிப்போகும்
நூற்றாண்டு காலமட்டும் கீர்த்தியாமே.

| | |
|---|---|
| மகிழம்வித்து | மிளகு |
| அழிஞ்சிவித்து | நாவி |
| வெண்குன்றிப்பருப்பு | நிருவிஷம் |
| வாளப்பருப்பு | வெங்காரம் |
| காயம் | மனோசிலை |
| கௌரிபாஷாணம் | மைசாட்சி |
| அரிதாரம் | சுக்கு |
| பொன்மெழுகு | திப்பிலி |
| கெந்தி | லிங்கம் |
| நவச்சாரம் | இரசம் |

இந்த 20 வகையும் சமனெடை யெடுத்து எலுமிச்சம் பழச்சாறு விட்டு இரண்டு நாள் ஊறவைத்து அதன் பிறகு ஐந்து நாள் வரையிலும் கைவிடாமல் அரைத்து ஒரு ஜாமம் சூரிய காந்தியில் வைத்து எடுத்துக்கொண்டு வாய்சிறுத்த பீங்கான் கோப்பையில் வைத்துப் பதனம் பண்ணிப் பிரதிதினமும் பணவெடை யெடுத்து வெற்றிலையில் மடித்துக் கொடுக்கக் குஷ்டம் 18 வகையும், ஆறுவகை விரியன் விஷமும், எட்டு வகை சர்ப்ப விஷமும், மண்டலி, பூரான், செவ்வட்டை, முதலை, அரணை, எலி முதலான விஷங்களும், விப்புருதி ஜன்னி பதின்மூன்று இவை யாவுந் தீரும். வியாதியும் விஷநிதானமும் பார்த்து 5-நாள் அல்லது 7-10 நாள் வீதம் கொடுக்கவும். பத்தியம் கால் புளிப்பு கூட்டவும்.



## நாள்பட்ட விஷத்திற்கு உருண்டை

கீர்த்தியாம் வெள்ளெருக்கன் சிறியாநங்கை
கொடிவெள்ளை காக்கணம்வே ரிவைகள் மூன்றும்
பார்த்திபனே வகைக்குப்பாக் களவரைத்து
பரிவாகத் தேசிக்கா யளவுவெல்லம்
நாற்றிசையும் மெய்த்திடவே மைந்தாகொள்ளு
நற்குருவை யரிசிச்சோ றுண்ணச்சொல்லு
மூர்த்திகட்கும் நாட்சென்ற விஷங்கள்போச்சு
மூன்றுநாள் ராப்பகல்பத் தியமதாமே.

வெள்ளெருக்கன்வேர், சிறியாநங்கைவேர், வெள்ளைக் காக்கணம்வேர் இம்மூன்றும் வகைக்குப் பாக்களவு எடுத்து அரைத்து எலுமிச்சங்காயளவு நல்லவெல்லத்துடன் மத்தித்து ஆறு பங்காக்கி, காலை மாலை இருவேளையும் 3 நாள் கொடுக்கவும். குருவையரிசிச் சாதம், புளியற்ற மிளகு நீர்கூட்டவும். 3-நாள் இராப்பகலும் இப்படியே பத்திய மிருக்கவும். நாட்பட்டு உடம்பில் ஊறிய விஷம் தீரும்.

## விரியன் கடித்த புண்ணுக்கு மருந்து

பத்தியமாம்பா வட்டயிலை வேகவைத்து
பண்பானவென்னீரால் கழுவிப்போட்டு
வெற்றியாம் அவ்விலையை வைத்துக்கட்ட
விரியனதுகடிவீங்கி வெடித்தபுண்கள்

சுத்தமாய்ஆறிவிடும் சொன்னேன் சொன்னேன்
சூராதி சூரனென்ற அவுஷதங்கேள்
நித்தியமும் ராச்சொல்லான் பலமேவாங்கி
நெடியபேய்ச் சுரைபருகில் நின்றுபாரே.

விரியன் கட்டு வீங்கி வெடித்த புண்ணுக்குப் பாவட்டை இலை போட்டுத் தண்ணீர் காய்ச்சி அந்த இரணத்தைக் கழுவிவிட்டு, ஈரமில்லாமற் துணியினால் ஒத்திடம் செய்து மேற்படி இலையை வதக்கி வைத்துக் கட்டவும். இப்படி 5-6 வேளைகள் கட்ட விரியன் கடித்த புண் ஆறிவிடும். குருவையரிசிச் சோறும் மிளகுநீரும் கூட்டவும்.

## சகல விஷத்திற்கும் சூராதி சூரன்

பாரேநீ கொடிகளொன்றும் அருமலைதான்
பருதிநாள் காய்குடைந்து ராச்சொல்லானை
பேரவே வைத்தடைத்துச் சதையால்மூடு
செடிசெத்து உலருமட்டும் போட்டுப்பாரு
வாரமதிலே யெடுத்து வைத்துக்கொண்டு
வசம்புள்ளி விரையளவு அரைத்து நீரில்
ஊறவே நாக்கிலிட்டு உள்ளுக்கீவாய்
ஓடுமே விஷமொழிந்து உடலை விட்டே.

இராச்சொல்லான் என்னும் கரியுப்பு ஒரு பலம் எடுத்துப் பேய்ப்பீர்க்கன் செடியினிடம் ஆதிவாரத்தில் சென்று அதன் காயை மேல் சதுரத்தில் வட்டமாகக் கீறி யெடுத்து உள்சதையை யெடுத்துவிட்டு மேற்படி உப்பைக் கொட்டி மேல் பில்லை மூடிக் கயிற்றால் கட்டிவைக்கவும். நாலு நாள் பொறுத்து அதே காயில் மறுபடியும் ஒரு பலம் உப்புப் போட்டு முன்படியே கட்டிவைக்கவும். அந்தச் செடியானது வேர்நசித்து உலருமட்டும் காயை அறுக்காமலிருந்து மேற்படி செடி செத்துப்போன பிறகு ஆதிவாரத்தில் அந்தக் காயை அறுத்து வசம்பும், உள்ளியும் கொஞ்சம் கூட்டி நீர்விட்டுஅரைத்துப் பீர்க்கன் விரையளவு நாக்கில்போட்டு ஊறியபின் மொச்சையளவு உள்ளுக்குக்



கொடுக்கவும். சகல விஷமும் தீரும். இப்படி விஷந் தீருமளவும் சிலநாள் கொடுக்கவும். முன்போலவே பத்தியமிருக்கவும்.

இது அரவு கடித்தவுடன் கொடுக்கப்பட்ட அவுஷதமன்று. நாட்பட்ட விஷங்களுக்குச் செய்யவேண்டிய சிகிச்சையாம்.

## சகல விஷத்திற்கும் நஞ்சிற்பாய்ந்தான் மாத்திரை

வரிசையிது சொல்லுகிறேன் நாவிசூதம்
வளமான துரிசிதுத்தம் வாளந்தாரம்
தரியாத சிலைகுன்றி பருப்புவெள்ளைச்
சாரணைவேர் மகிழ்வித்து பச்சைப்பாம்பின்
சிரங்கூட்டச் சரிசமனாய்ச் சம்பிரச்சார்
தெளிவாகவிட்டரைநீ கல்வத்திட்டு
உரித்தான வெங்காரங் கூடப்போட்டு
உகந்துதிரி நாளரைத்து உண்டைபண்ணே.

பண்ணியே நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு
பாரவிடந் தீண்டிமிக தலைமேற்கொண்டால்
திண்ணமாய் உச்சியிலும் நுதலிலேயும்
திடமான பிடரியிலுங் கன்னத்தேயும்
நண்ணாகக் கீரிவைத்துக் கட்டும்போது
நாகவிடம் முதற்கொண்டு நசித்துப்போகும்
புண்ணியமா மலைக்காத்தான் குளிகைகேளு
பதியதுத்தந் துரிசுசிலை காயந்தானே.

| | |
|---|---|
| நாவி | துரிசு |
| இரசம் | துத்தம் |
| வாளம் | சாரணைவேர் |
| அரிதாரம் | மகிழம்வித்து |
| மனோசிலை | வெங்காரம். |
| வெள்ளைக்குன்றிமணிப்பருப்பு | பச்சைப்பாம்பு தலை |

இவையாவும் சமனிடையாய் நிறுத்தெடுத்து 3 நாள் வரையிலும் அரைத்த பிறகு நிழலில் உலர்த்தி வைத்துக்

கொண்டு விஷந்தீண்டி தலைக்கேறிச் சுவாசமில்லாதவர்களுக்கு உச்சியிலும், நெற்றியிலும், பிடரியிலும், கன்னத்திலும் கத்தியாற் கீறி இம்மருந்தை வைத்துக் கட்டினால் உடனே விஷம் நசித்து உயிர் மீண்டு எழுந்திருப்பர்.

## மலைக்காத்தான் குளிகை

தானென்ற வாளமரி தாரங்கெந்தி
ஜாதிலிங்கம் நாவிவெள்ளை கெவுரிசூதம்
ஏனென்ற தொட்டியொடு எலிபாஷாணம்
எரிமிளகு குதிரைப்பல் பாஷாணந்தான்
வானென்ற திப்பிலியோ டிவைகளெல்லாம்
வளமாகச் சமன்கூட்டி மேனிச்சாறு
நீநினைவாய் விட்டரைத்து உண்டைபண்ணி
நிழலுலர்த்தி மிளகுபொடி தன்னில் சேரே.

| | |
|---|---|
| துத்தம் | கெந்தி |
| துருசு | ரசம் |
| காயம் | லிங்கம் |
| மனோசிலை | மிளகு |
| நாவி | குதிரைப்பல் பாஷாணம் |
| கௌரி பாஷாணம் | தொட்டிப் பாஷாணம் |
| வாளம் | எலிப் பாஷாணம் |
| அரிதாரம் | திப்பிலி |

இவை சமனெடை யெடுத்துப் பொடி செய்து குப்பைமேனிச் சாறுவிட் டரைத்து உருண்டை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு விஷந்தீண்டி வந்தவர்களுக்கு நஞ்சிற்பாய்ந்தான் மாத்திரைபோல் இதையும் உபயோகித்தால் விஷமொழிந்து உயிர்மீண் டெழுந்திருப்பார்.

## சகல விஷத்துக்கும் நசியம்

| | | |
|---|---|---|
| முருக்கிலை | பெருங்காயம் | உள்ளி |
| அவுரியிலை | வசம்பு | மிளகு |



இவைகளைத் தட்டி நாசியிலும் காதிலும் நசியமிடச் சகல விஷமும் நீங்கும்.

| | | |
|---|---|---|
| தும்பையிலை | வசம்பு | உள்ளி |
| அவுரியிலை | பெருங்காயம் | மிளகு |

இவைகளைச் சிறு பிள்ளைகளின் அமுரிவிட்டுத் தட்டிக் காதிலும் நாசியிலும் விட்டால் விஷம் கீழ் நோக்கும்.

| | |
|---|---|
| தைவேளையிலை | சுக்கு |
| வேலிப் பருத்தியிலை | மிளகு |
| வெற்றிலை | வசம்பு |
| கரியுப்பு | வெள்ளுள்ளி |

இவைகளை ஓர் நிறையா யெடுத்துச் சிறுநீர் விட்டுத் தட்டி நாசியில் நசியமிட அடங்கின உயிர் திரும்பும்.

## விரியன் பாம்புகளின் கடிக்குறியும், அவைகளுக்குச் சிகிச்சையும், குருவிரியன் கடிக்குறியும், சிகிச்சையும்

கூ விரியன் வகைகள் ஆறும். அவற்றில் குருவிரியன் கடித்தால் செந்நிறமாயும், பொன்னிறமாயும் நீர் வடியும்;. கடிவாயிற் றசை துள்ளி வீங்கும், கடுக்கும், உடல் வெதும்பும்.

நாள்பட்ட வரகரிசியும் பிராய்மரப் பட்டையும் இடித்து மாவு செய்து வெள்ளாட்டுப் பாலில் சமைத்து மூன்று நாள் தின்று மறுபத்தியம் மூன்று நாளிருக்கத் தீரும். உப்பு, புளி தள்ளவும்.

## செவ்விரியன் கடிக்குறியும் சிகிச்சையும்

செவ்விரியன், கருவிரியன், பசுமைநிற விரியன் இவை கடித்தால் கடிவாயில் உதிரம் வடியும்; வீக்கம், கடுப்பு, இரத்த வாந்தி யுண்டாகும்.

செவ்விரியன் கடித்தவுடன் ஒடுவைவேரை அரைத்துக் கொடுக்கத் தீரும். வன்னியிலையைத் தேசிக்காய்ப்

பிரமாணம் அரைத்து ஆவின் வெண்ணெயில் மத்தித்து உள்ளுக்குக் கொடுத்துக் கடிவாயிலும் பூசத் தீரும். வெள் வேலம் பட்டையை ஆவின் மோரில் அரைத்துக் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

## கருவிரியன் கடி சிகிச்சை

கருவிரியன் கடித்தாலும் பசுமைநிற விரியன் கடித்தாலும் அரைக்காற்படி மிதிபாகலிலைச் சாற்றில் காற்பலம் மிளகைப் பொடித்துப் போட்டுக் கொடுக்க மேற்படி விஷம் தீரும்.

## பெருவிரியன் கடி சிகிச்சை

பெருவிரியன் கடித்தால் பேய்க்குமட்டி வேர், அவுரி வேர், தலைச்சுருளி வேர், மிளகு சமனாயிடித்துப் பேய்ச் சுரைக் குடுக்கையில் அடைத்துக்கொண்டு திரிகடிப் பிரமாணம் சிறு பிள்ளைகளின் நீரில் கலக்கிக் கொடுத்துக் கடிவாயில் பூசத் தீரும். இம்பூரல், கீழ்க்காய் நெல்லி, கோழிக்கால், மிளகு, மஞ்சள் இவைகளை ஓர் நிறையாய்ச் சிதைத்து நல்லெண்ணெயிற் காய்ச்சிக் கடிவாய்ப் புண்ணிற் போட்டு ஆத்தியிலையை வெதுப்பிப் பொடித்துத் தூவிவரப் புண்கள் ஆறிவிடும்.

## கத்திரி விரியன் கடி

கத்திரி விரியன் கடித்தால் உதிரம் வடியும். அதில் வீக்கம், கடுப்பு, எரிச்சல், மயக்கம் காணும். உடல் வெதும்பும்.

## புல்விரியன் கடி

புல்விரியன் கடித்தால் கடிவாயில் விலச்சுண்டுவது போல் சுண்டி வலித்து வீங்கும்; உடற் கணுக்கள் வீங்கும்; தூக்கம்போல் மயக்கங் காணும்.

## சுழற்றுக்கோல் விரியன் கடி சிகிச்சை

சுழற்றுக்கோல் விரியன் கடித்தால் தலை சுழலும், உடலுளையும், காந்தும், நடுங்கும், செவி மந்திக்கும், கண் பஞ்



சடையும். மேற்சொல்லிய எவ்வகை விரியன் கடித்தாலும் உடனே ஒரு குன்றுமணிப் பிரமாணம் துருசைப் பத்து வெற்றிலையில் வைத்து மடித்துத் தின்னக் கொடுக்க மேற்படி விஷங்க ளிறங்கும். கடிவாய் வீங்காது. கடுப்பு எரிவு உடனே தீரும்.

அவுரிவேரை அரைத்து ஆவின்பாலில் கொடுக்கச் சகல விரியன்களின் விஷமும் தீரும்.

சன்னிநாயகம் சமூலம் இடித்துச் சாறு வாங்கி அரைக்காற் படி உள்ளுக்குக் கொடுத்து மேற்படி இலையை அரைத்து உடல் முழுதும் பூசிவிட, சகல விரியன்களின் விஷமும் தீரும். கிரந்தி நாயகத்தையும் இப்படியே செய்யத் தீரும்.

குட்டித்தக்காளி இலை பெருந்தக்காளி இலை இவ்விரண்டையும் இடித்து அரைக்காற்படிச் சாறு வாங்கி உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் துவாலையிட மேற்படி விஷங்கள் தீரும்.

## கடிவாயிற் பூசு மருந்து

தலைமயிரைக் கறுக்கி ஆவின் வெண்ணெயில் மத்தித்துக் கடிவாய் வீக்கத்திற் பூச வற்றும்.

பாவட்டை இலையை அவித்து அந்தத் தண்ணீரால் புண்ணைக் கழுவி வெற்றிலையை வைத்துக் கட்டிவரத் தீரும்.

அம்மான் பச்சரிசி இலையை அரைத்துப் பூசிவர வீக்கம் கடுப்பு எரிவு தீரும்.

தக்காளி வேர், நாயுருவி வேர் இவைகளைச் சிறுநீர் விட்டரைத்துக் கடிவாயிற் பூசிவர வீக்கம் வற்றும். உடம்பிற் பூசி முறுக்க மயக்கந் தீரும்.

கோழிச் சதையையாவது அதன் கொழுப்பையாவது மூன்று நாள் வைத்துக் கட்டி அப்பாற் காடியாற் கழுவி இதனடியிற் கண்டிருக்கிற எண்ணெயைத் தடவவும்.

## சகல விரியன் விஷக்கடிக்கும், வீக்கத்திற்கும், புண்ணுக்கும் தைலம்

| | | |
|---|---|---|
| இரண்டு கோழிக்கால் | கீழ்க்காய் நெல்லி | மிளகு |
| இம்பூரல் | மஞ்சள் | இந்துப்பு |

இவைகளைச் சிதைத்து நல்லெண்ணெயிற் காய்ச்சிப் புண்ணிற் போடத் தீரும்.

மூஞ்சுறு, வசம்பு, சுக்கு, உள்ளி இவைகளைச் சிதைத்து நல்லெண்ணெயில் காய்ச்சிப் புண்ணிற் போடச் சகல விரியன்களின் கடிவிஷமும் புண்ணும் ஆறும்.

## கருவழலை முதலிய மற்ற சில்லரைப்பாம்புகளின் கடிவிஷக் குறியும் அவைகட்குச் சிகிச்சையும்

### கருவழலைக் கடிக்கு

உடல் தீப்போற் காந்தும், வியர்க்கும், உள்ளங்கால் கை சிவக்கும், கண் மங்கும், நெஞ்சடைக்கும், கோழை கட்டும், பல் வலிக்கும்.

| | | |
|---|---|---|
| வேலிப்பருத்திவேர் | வெள்ளைச்சரணைவேர் | நீலி வேர் |
| அதன் இலை | அதன் இலை | பெருங்காயம் |

இவைகளை ஓர் நிறையாயரைத்துத் தேசிக்காய்ப் பிரமாணம் உள்ளுக்குக் கொடுத்துக் கடிவாயிலும் பூசத் தீரும்.

### மற்ற வழலைகள் கடிக்கு

நற்குழியிலை, வசம்பு, உள்ளி இவைகளை அரைத்துக் கடிவாயிற் பூசி உடம்பிற் றேய்த்து முறுக்கவும்.

சிற்றாமணக்கின்வேர், குன்றிமணிவேர், பழம்புளி, நிலப்பனைக்கிழங்கு இவைகளை ஓர் நிறையாய் அரைத்துச் சிறுநீரிற் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

உப்பிலிவேர், நிலைப்பனைக்கிழங்கு இவ்விரண்டையும் அரைத்து தேசிக்காய்ப்பிரமாணம் சிறு நீரிலாவது ஆவின் வெண்ணெயிலாவது கொடுக்கத் தீரும்.



மற்ற வகை வழலை கடித்தால் உடலில் பசுமை நரம்பு தோன்றும், வியர்க்கும், வாயில் நீர் வடியும், கடிவாயில் உதிரம் வடியும், வாய் வழுவழுக்கும்.

### மயக்கரவு கடிக்கு

மயக்கரவு கடித்தால் இருவிழியும் சுழலும், அடிக்கடி மயக்கங் காணும், முகங் கருக்கும், பரபரப்பாய் விஷமேறி மார்பை அடைக்கும், கைகால் நரம்புகள் விறைக்கும்.

கரிப்பாலையிலையை அரைத்து ஒரு கொட்டைப் பாக்குப் பிரமாணம் மூன்று நாள் கொடுத்து மிளகுப் புகையை நாசியிலும் முகத்திலும் காட்டத் தீரும்.

### முறுக்கரவு கடிக்கு

முறுக்கரவு கடித்தால் உடலைத் திருகி முறுக்கும், அங்கம் பதறும். இதற்குப் பெருங்காயம், சிறுசின்னியிலை, வசம்பு இவைகளை ஓர் நிறையா யரைத்துத் தேசிக்காய்ப் பிரமாணம் கொடுத்து அதையே உடம்பிற் பூசி முறுக்கி நாசியில் நசியமிடத் தீரும்.

அரைக்காற்படி மிதிபாகற் சாற்றில் காற்பல மிளகைப் பொடித்துப்போட்டுக் கொடுத்தாலும் ஒரு தேசிக்காய்ப் பிரமாணம் நிலைப்பனைக் கிழங்கை அரைத்து வெந்நீரிற் கொடுத்தாலுந் தீரும்.

### கூழைப்பாம்பு கடிக்கு

கூழைப்பாம்பு கடித்தால் சிலகாலத்துக்குப் பின் குஷ்டம் போல் தேகத்திலுண்டாகிக் கால் கை விரல்கள் குறையும். இது கருமையும் வெண்மையும் கலந்த புள்ளியுள்ளதாயிருக்கும்.

உசிலம்பட்டையை ஆவின்பால்விட் டிடித்துப் பிழிந்து அரைக்காற்படி வீதம் ஏழு நாள் கொடுத்து உப்பு, புளி தள்ளிப் பத்தியமாயிருக்க மேற்படி விஷந் தீரும்.

## நெஞ்சோர்வுக் கடிக்கு

நெஞ்சோர்வு கடித்தால் உடலெங்கும் புள்ளிபோற் றடித்துச் சிவந்த நிறமாயிருக்கும்.

இதற்கு எருக்கம்பால் ஏழு சொட்டு பனைவெல்லத்தில் கொடுக்கவும். இந்தப்படி மூன்று தடவை ஒன்று விட்டொரு நாள் கொடுக்கத் தீரும்.

## கருஞ்சோர்வுக் கடிக்கு

கருஞ்சோர்வு கடித்தால் தேகமுழுதும் கருத்துத் தடித்துத் திமிராயிருக்கும்.

இதற்கு நன்னாரி வேர், சிறியாநங்கை வேர் இவ்விரண்டையும் சமனாய் ஒரு தேசிக்காய்ப் பிரமாணம் அரைத்து ஆவின்பாலில் கொடுக்கத்தீரும்.

## புடையன் கடிக்கு

புடையன் பாம்பானது அதன் வாலின் முனையால் மனிதர் முதலிய ஜீவஜெந்துக்களைக் குத்தும். அந்த விஷம் தேகத்திற் சிலநாள் தங்கியிருந்து அப்பால் தேகமெங்கும் படைகளுண்டாகிப் பொத்துச் சீழ் வடியும்.

அதற்கு ஒரு பிடி புத்தான் சோற்றைக் காற்படி நல்லெண்ணெயிற் போட்டுக் காய்ச்சிக் கொஞ்சம் உள்ளுக்குக் கொடுத்துக் கடிவாயிலும் பூசத் தீரும்.

பிராயம்பட்டையும் நாள்பட்ட வரகரிசியும் இடித்து மாவு செய்து களி கிண்டி 3 நாள் சாப்பிட்டு மறுபத்தியம் 3 நாளிருக்கத் தீரும்.

## நெடுங்கழுத்துப் புடையன் கடிக்கு

நெடுங்கழுத்துப் புடையன் விஷத்துக்குக் கொல்லன் கோவைக் கிழங்கைப் பாலில் அரைத்துக் கொடுக்கத் தீரும்.

புகையூரல், அவுரியிலை, இலுப்பையரைப்பு இவைகளைக் கொடிக்கள்ளிப்பால் விட்டரைத்துப் பூசப் புடையன் குத்தும் வீக்கமும் தீரும்.



## தட்டைப் புடையன் கடிக்கு

தட்டைப்புடையன் விஷத்துக்குப் பத்து வெள்ளெருக்கம் பூவை வெற்றிலையிற் சுருட்டித் தின்னக் கொடுத்து வசம்பை நெருப்பிலிட்டு அந்தப் புகையை நாசியிலேற்றத் தீரும்.

## வரிப்புடையன் கடிக்கு

வரிப்புடையன் விஷத்துக்குப் புத்தான்சோறும் வசம்பும் எருக்கம்பால் விட்டுத்தட்டி நாசியில் நசியமிடத் தீரும்.

## ஊதுப்புடையன் கடிக்கு

ஊதுப்புடையன் விஷத்தால் கடிவாய் வீங்கி விஷமேறும், கைகால் உளையும், உடல் வீங்கும், கண்ணில் நீர் வடியும், மயக்கமுண்டாகும். விழிப்பூவை ஒரு தேசிக்காய்ப் பிரமாணம் அரைத்துக் கொடுக்கச் சகல புடையன் விஷயங்களும் தீரும்.

காட்டுக்கருணைக் கிழங்கு கொட்டாங்கரந்தை புகையூரல் இலுப்பைப் பிண்ணாக்கு இவைகளைச் சிறுநீர் விட்டரைத்துப் புடையன் குத்தும் வீக்கத்திற் பூசத் தீரும்.

## இரத்தமண்டலி கடிக்கு

இரத்தமண்டலி கடித்தால் கடிவாயிலும் மயிர்க்காலிலும் இரத்தம் தாரை தாரையாய் வடியும்.

அதற்குச் சிறு செறுப்படையையாவது கொல்லங்கோவை யிலையையாவது இடித்துச் சாறுவாங்கி அரைக்கால்படி 3-நாள் காலையில் கொடுத்து உடம்பிலும் அந்தச் சாற்றைப் பூசத் தீரும்.

வெள்வேலம் பட்டையைக் காடியாவது ஆவின் மோராவது விட்டிடித்து அரைக்கால்படி கொடுக்கத்தீரும்.

ஆனை நெருஞ்சி யிலையைச் சிறுநீர் விட்டிடித்துப் பிழிந்து அரைக்கால்படி சாறு உள்ளுக்குக் கொடுத்து உடலிலும் பூசத் தீரும்.

## சீதமண்டலி கடிக்கு

சீதமண்டலி கடித்தால் உடல் குளிரும், நடுக்கும், வியர்வை மிகவு முண்டாகும்.

முத்தெருக்கஞ்செவி அல்லது வேப்பம்பட்டையைக் காடி விட்டுச் சிதைத்து அரைக்கால்படி உள்ளுக்குக் கொடுத்து அதை வேகவைத்துக் கடிவாயில் ஆவிபிடிக்கத் தீரும்.

## திமிர்மண்டலி கடிக்கு

பொன்முசுட்டைவேர் ஒரு கொட்டைப்பாக்குப் பிரமாணம் அரைத்துக் கொடுத்துக் கடிவாயில் பூசத் தீரும்.

## சகல விஷத்திற்கும் சஞ்சீவி யுருண்டை

பாரடா உயிர்தருஞ் சஞ்சீவியுண்டை
பகருகிறேன் துரிசிதுத்தம் மிளகுசேர்த்து
நேரடா வாளமிந்த எடைக்குப் போட்டு
நினைவாக எலுமிச்சம் பழத்தின்சாற்றை
வாரடா மூன்றுநா ளூறவைத்து
வடித்தெடுத்து நாலாநா ளச்சாற்றாலே
தேரடா வரைத்துருண்டை செய்துகண்ணில்
தேய்த்துவிட எவ்விஷமும் தீர்ந்துபோமே.

துருசு, துத்தம், மிளகு சமனெடையும் இந்த 3-க்கும் சரி எடை வாளமும் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றை மிதக்கவிட்டு 3-நாள் ஊறவைத்து நாலாநாள் எடுத்து மேற்படிச் சாறு விட்டு அரைத்துப் பயரளவு யெடுத்துக் கண்ணில் தீட்டினல் சகல விஷமும் தீரும்.

## சகல விஷத்திற்கும் நசியம்

குப்பைமேனியிலை, வெற்றிலை, நவாச்சாரம் இவைகளைச் சிறுநீர் விட்டுத் தட்டித் துணியிற் கட்டி நாசியில் நசியமிடச் சகல விஷமும் தீரும்.



## சோரிமண்டலி கடிக்கு

நன்னாரி வேரை ஒரு தேசிக்காய்ப் பிரமாணம் அரைத்து ஆவின் பாலில் கொடுத்தாலும் வெள்வேலம் பட்டையைக் காடி விட்டிடித்து அரைக்காற்படி சாறு கொடுத்தாலும் நீங்கும்.

## இரத்த விரியன், இரத்தமண்டலி, இரத்தப்புடையன் முதலிய விஷங்களுக்கு

அமுக்குரா, சூரை, புங்கு, இண்டு, தக்காளி, இலுப்பை, இவைகளைச் சிறுநீர் விட்டு அரைத்துப் பூசக் கடிவாய் வீக்கந் தீரும்.

வெள்வேலம் பட்டையை ஆவின் மோர்விட்டு இடித்துப் பிழிந்து அரைக்காற்படி சாறு உள்ளுக்குக் கொடுத்தாலும் அல்லது கஞ்சாங்கோரைச் சாற்றை அரைக்காற்படி வீதம் கொடுத்தாலும், கொடிவேலி வேரை அரைத்துக் கொட்டைப்பாக்குப் பிரமாணம் ஆவின் பாலில் கொடுத்தாலும் மேற்படி விஷங்கள் தீரும்.

ஆடுதீண்டாப்பாளைவேர், கவுதும்பைவேர், வெள்ளெருக்குவேர், மருக்காரைவேர் இவைகளை ஓர் நிறையாய் அரைத்து உடம்பிற் பூசி முறுக்க மேற்படி விஷங்கள் தீரும்.

## சுருட்டைப்பாம்பு கடிக்கும் குழிப்பாம்பு கடிக்கும்

| | | |
|---|---|---|
| கொல்லங்கோவை | முப்புரண்டி | அவுரி |
| தலைசுருளி | கொடிவேலி | ஆடு தீண்டாப்பாளை |
| அமுக்குரா | பேய்க்குமட்டி | வெள்ளெருக்கு |

இவைகளின் சமூலம் ஓர் நிறையாய்ச் சூரணஞ் செய்து பேய்ச்சுரைக் குடுக்கையில் வைத்துக்கொண்டு திரிகடிப் பிரமாணம் வெந்நீரிற் கொடுக்கத் தீரும். மேற்படி விஷக்கடியா லுண்டாகும் புண்கள் ஆறும்.

## செவிப்பாம்பு என்ற செய்யான் கடிக்கு

வெண்மை செம்மை நிறமாய் சீகம்புற்போல் நீண்டதாயிருக்கும். இது கடித்தால் தேகமெங்கும் சிறு தடிப்பும் நமைச்சலும் உண்டாகும். இது செவியில் நுழைந்தால் பிராணபய முண்டாகும்.

கோவை இலை, வெற்றிலை, கொழுஞ்சி, வேலிப்பருத்தி, முடக்கொத்தான், இவைகளின் இலைகளை இடித்துச் சாறு வாங்கிக் கொதிக்க வைத்துக் கடிவாயில் பூசக் கடுப்பு தீரும்.

பேய்ப்பீர்க்கம் வேர், மிளகு இவை சமன் பொடித்து ஆவின் வெண்ணெயில் மத்தித்து உள்ளுக்குக் கொடுக்கத் தீரும்.

தூதுளைவேர், நல்வேளைவேர் இவ்விரண்டையும் அரைத்துக் கடிவாயிற் பூசத் தீரும்.

## பூரான் கடிக்கு

அரைக்காற்படி வன்னியிலைச் சாற்றில் கால்பலம் நாகதாளி வேரை அரைத்துக் கலக்கி ஆறு நாள் அந்தி சந்திகொடுக்கவும். உப்பு புளி தள்ளிப் பத்தியமா யிருக்கப் பூரான், செய்யான் விஷந் தீரும். மேலும் அவுரிச் சாற்றில் மிளகுத்தூள் சேர்த்து முன்போற் கொள்ள ஷை விஷங்கள் தீரும்.

## செவ்வரணை நக்கினால்

சுக்கும், வசம்பும், கரியும், ஓர் நிறையாய்ப் பொடித்துத் திரிகடிப் பிரமாணம் உள்ளுக்குக் கொடுத்து வெண் சாரணை வேரை அரைத்து உடம்பிற் பூசி முறுக்கத் தீரும். மேலும் கக்சந்திராய் வேரும் உள்ளிப்பூடும் அரைத்துக் கொடுக்கத் தீரும்.

## பெரிய அரணை நக்கினால்

மூக்கரைச்சாரணை வேரை அரைத்து ஒரு கொட்டைப் பாக்குப் பிரமாணம் ஆவின் பாலிற் கொடுக்கத் தீரும்.



## சிலந்திப்பூச்சி கடிக்கு

ஆடு தீண்டாப் பாளைவேர், மருள் கிழங்கு, இலவங்கப்பட்டை, ஏலம் இவைகளில் ஒன்றைக் கொட்டைப் பாக்களவு அரைத்து உள்ளுக்குக் கொடுத்துக் கடிவாயிலும் பூசத் தீரும்.

## பதினெட்டுவகை வண்டு கடிக்கு

வண்டுகொல்லிப் பட்டையை அரைத்துக் கொட்டைப் பாக்களவு எட்டு நாள் கொடுத்து உடம்பிலும் பூசத் தீரும்.

ஆடு தீண்டாப்பாளை வேரையாவது பிராயம் வேரையாவது சூரணஞ் செய்து சாப்பிட்டுவரத் தீரும்.

வெள்ளருகு, சிறியாநங்கை, வெள்ளைக் காக்கட்டான் இவைகள் மூன்றின் சமூலம் சூரணஞ் செய்து சாப்பிட்டு வரச் சர்வ வண்டுகடி விஷங்களுந் தீரும்.

## செவ்வட்டைக் கடிக்கு

எட்டிக் கொடியை ஆவின் நெய்யில் வேகவைத்து ஒரு காசெடை வீதம் சாப்பிட்டுவரத் தீரும்.

புனல் முருங்கை வேர், நத்தைச்சூரி வேர் இவ்விரண்டும் சூரணித்து அதில் வேப்பம் பட்டைத் தைலம் காசெடை வைத்து உண்ண ஷை அட்டைவிஷமும் காட்டு அட்டை விஷமும் தீரும்.

## புழுதி உண்ணி, காட்டுண்ணி, சாகுண்ணி கடிக்கு

குப்பைமேனி இலையும், உப்புங் கசக்கித் தடவத் தீரும்.

காணாக் கடிக்குக் கருஞ்சிவதை வேரை ஒரு கொட்டைப்பாக்குப் பிரமாணம் உள்ளுக்குக்கொடுத்துப் பெருஞ்சின்னி யிலையை அரைத்து உடம்பிற் பூசி முறுக்கத் தீரும்.

## செஞ்சாரை, கருஞ்சாரை, வெண்சாரை, மஞ்சட்சாரை இவற்றின் கடிக்கு

அவுரிவேரும், மிளகும் அரைத்து உள்ளுக்குக் கொடுத்து அந்த இலேச்சாற்றை உடம்பிற் பூசி முறுக்கத் தீரும்.

## தேள் நட்டுவாய்க்காலி கொட்டினல்

காஞ்சிரை வேர், அவுரி வேர், நாய்க்கொட்டான் வேர், பொன்முசுட்டை வேர் இந்நான்கையும் ஓர் நிறையா யிடித்துச் சூரணஞ் செய்து திரிகடிப் பிரமாணம் இள வெந்நீரில் கொடுக்கத் தேள் நட்டுவாய்க்காலி விஷம் தீரும்.

பொன்முசுட்டை, முப்புரண்டி, நாகதாளி, ஆடு தீண்டாப்பாளே, வேலிப் பருத்தி, நிலவேம்பு இவைகளின் வேரை ஓர் நிறையா யிடித்துச் சூரணஞ் செய்து திரிகடிப் பிரமாணம் வெந்நீரில் கொடுக்க ஷை விஷங்கள் தீரும்.

கொல்லங் கோவைக் கிழங்கு, ஆடு தீண்டாப்பாளே வேர், மாவிலிங்க வடவேர் இந்த மூன்றில் எதையாவது ஒன்றை ஆதிவாரத்தில் வெட்டிவந்து கொஞ்சம் வெற்றிலேயில் வைத்துத் தின்னக் கொடுத்துக் கடிவாயிலும் பூசத் தீரும்.

எட்டி விரையை மூலேப்பாலி லிழைத்துக் கொஞ்சம் உள்ளுக்குக் கொடுத்துக் கடிவாயிலும் பூசத் தீரும்.

முத்தின செவ்வலரிவேர்ப் பட்டையை வெள்ளெருக் கம் பாலில் 3-நாள் ஊறப்போட்டு நிழலிலுலர்த்தி வைத் துக் கொண்டு கொஞ்சம் வெற்றிலேயில் வைத்துத் தின்னக் கொடுத்து அதை எருக்கம்பாலில் உரைத்துக் கடிவாயிற் பூசத் தீரும்.

மனிதருடைய தேகத்தைச் சீவித் துணியிற் சுருட் டித் தீயிற் கொளுத்தி அந்தப் புகையை நாசியிற் பிடிக்க மேற்படி விஷம் இறங்கும்.



## சகல சர்ப்ப விஷத்திற்கும் பரணி மருந்து

இந்தப் பரணி மருந்தானது முன்னோர்களால் தலே முறைகளாகக் கையாடி வரப்பட்டது. மிகவும் அனு போகமானது. இந்த ஔஷதத்தை யாவரும் செய்து வைத்துக்கொண்டிருந்தால் விஷமென்பதற்கு எள்ளளவும் பயப்படவேண்டியதில்லே.

| | |
|---|---|
| வெள்ளேப்பாஷாணம் | நெல்லிக்காய்க் கெந்தம் |
| மனேசிலே | பெருங்காயம் |
| இரசம் | வேப்பம்பருப்பு |
| துரிசி | |

இவை 7-ல் வகைக்கு ஒரு வராகனெடையும், சுத்தி செய்த நேர்வாளப் பருப்பு விராகனெடை 14-உம் ஆக மொத்தம் 21-வராகனெடையும் கலுவத்தில் போட்டு வெள்ளெருக்கம்பால் ஆழாக்குப் பிடித்துவந்து கொஞ்சங் கொஞ்சமாய் விட்டு அரைக்கவும். ஷை ஆழாக்குப் பாலும் விட்டு இரண்டு ஜாமம் அரைத்த பிறகு வேப்பெண்ணெய் அரையாழாக்கு விட்டு ஒரு ஜாமம் அரைக்கவும். மெழுகு பதமாய் அரைத்து, வறுத்து எருமைக்கொம்பு டப்பியில் வைத்துக் கொள்ளவும். விஷந்தீண்டி வந்தவர்களுக்கு உளுந்து பிரமாணம் எடுத்து வெற்றிலேயில் வைத்து உள்ளுக்குக் கொடுக்கவும். இதற்குப் பத்தியம் மோர் சாதம் அல்லது சுட்ட புளி வறுத்த உப்பு கூடிய மிளகு நீர் சாதம் கொடுக்கவும். அன்றிரவு நித்திரை செய்யக் கூடாது.

விஷம் தலேக்கேறிப் பற்கிட்டியிருந்தால் உச்சியில் கீறி அந்தக் கீறலுக்குள் இந்த மருந்தில் உளுந்தளவு வைத்து அழுத்தித் திரும்பவும் கொஞ்சம் மருந்து வைத்து அழுத் தித் தேய்த்து வட்டமாக ஒட்டுப் பில்லே நறுக்கி உச்சியில் அழுத்தமாக வைத்துக் கட்டி, வெந்நீரில் உளுந்தளவு மருந் திழைத்துப் பல்லே நீக்கி உள்ளுக்குச் செலுத்தவேண்டி

யது. மூன்றே முக்கால் நாழிகையில் மூர்ச்சையானவன் போல் எழுந்திருப்பான். பத்தியம் முன்போலவே செய்ய வேண்டும்.

ஆடு மாடு முதலிய மிருகங்களுக்குக் குன்றிமணி யளவு வெற்றிலைச் சாற்றிலாவது, வெந்நீரிலாவது இழை த்து மூங்கிற் குழையினுல் உள்ளுக்குச் செலுத்தவேண்டி யது. குருவை யரிசிக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவேண்டும்.

## பத்திய விபரம்

முன் கூறியபடி மனிதருக்கு மருந்து கொடுத்த பிறகு 24 மணிநேரம் வரையில் ஆகாரம், தாகம், நித்திரை இவை ஆகா. அதன் பிறகு குருவை யரிசிச் சாதம் மிளகு நீர் இவை கொடுக்கலாம். ஆடு மாடு முதலிய மிருகங்கட் குக் கூட 24-மணி நேரம் வரையில் ஆகாரம் வைக்கோல் தண்ணீர் இவை காட்டக்கூடாது. அதன்பிறகு கருப்பு நெல் அல்லது மணக்கத்தை அல்லது குருவை யரிசி எடுத் துக் கஞ்சி காய்ச்சி 2-படி கஞ்சிக்கு அதிகப்படாமல் கொடுக்கவும். அதற்குப் பிறகு வழக்கம்போல் கொடுக்கிற தீனி கொடுக்கலாம்.

## மருந்து செய்யும் காலம்

இம்மருந்து செய்யவேண்டியவர்கள் ஆதிவாரத்தில் சகல மருந்தும் தயார் செய்துகொண்டு நடுவாசலைச் சுத்தி செய்து கலுவமும் மருந்துகளும் வைத்துச் சூரிய பகவா னுக்குத் தேங்காயுடைத்துத் தூபதீபங் கொடுத்து நமஸ் கரித்து ஆகாயத்தைப் பார்த்துக் கெருட பகவானை நினைத்து நமஸ்காரம் செய்து அரைக்க வேண்டியது. அரைக்கும்போது புளிப்பு மோரும் கூழும் கரைத்துத் திருப்தியாகச் சாப்பிட்டுவிட்டு அரைக்கவேண்டியது. மேற்கூறிய கணக்குப்படி 3-ஜாமம் அரைத்த பிறகு விளக் கெண்ணெய் தேய்த்துத் தலை முழுகவும்.



## நல்லபாம்பு விஷத்திற்கு

நேரும் வாளப்பருப்பெடுத்து
  நேர்ந்தசுன்னம் வைத்தரைத்துக்
காரும்வெற்றிலை பாக்கிலிட்டுக்
  கரையமென்று முழுங்கிவர
மாரும் வாந்திபேதியுமாய்
  மண்டையிலேறும் விஷந்தீரும்
பாரும் பத்தியம் பாசிபயர்
  பச்சரிசியும் பால்கூட்டே.

வெள்ளருகு இலையை உள்ளுக்குக் கொடுத்தாலும், எருக்கிலையும் புகையிலையும் கசக்கிக் கண் காது நாசியில் நசி யம் விடுவதாலும், தும்பை, துளசி, மிளகு, உப்பு, வெற் றிலை கசக்கி விடுவதாலும் விஷம் நீங்கும். தும்பை ரசத்தில் மிளகுத் தூளிட்டுக் கொடுக்கவும்.

## தேள் கடி விஷத்திற்கு

50-எட்டிப் பழச்சுளையுடன் வெள்ளைப் பாஷாணம் பலம் 1 சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு சட்டியிலிட்டு ஆட் டுக் கோமயமும் வெள்ளெருக்கன் பாலும் இரண்டு பலம் வீதம் விட்டு மூடி 40 நாள் புதைத்து எடுத்து ஷை பாஷா ணத்தை மாத்திரம் எருக்கன் பாலி லரைத்து மாத்திரை செய்து ஜலத்திலிழைத்துக் கடிவாயில் தடவி அனல் காட்ட விஷம் நீங்கும்.

## சகல எலி கடிக்கும்

ஆடுதின்னுப்பாளை வேர், விளாம்பட்டை, மஞ்சள் வகைக்குப் பலம் ¼. சித்திரமூல வேர், உத்தாமணி வேர், மிளகரணை வேர் வகைக்குப் பலம் 1. பசும்பாலி லரைத்துப் படி எள்ளெண்ணெயில் கலக்கிக் காய்ச்சி வடித்து 3-கா செடையாக 5 நாள் கொடுத்து உப்பு புளி நீக்கவும்.

## மூலிகை மர்மம் என்னும் நூலின்

# அனுபந்தம்

மூலிகை மர்மம் என்னும் நூலின் முதற் பாகத்தில் முழுமையும் பச்சிலைப் பிரயோகமே யானபடியால் அதில் சேரவேண்டிய கடைச்சரக்கு ரச கெந்தக பாஷாணாதி முறைகளை விஷ வைத்திய சிந்தாமணியில் பார்த்துக் கொள்ளலாமென்று மேற்படி நூலில் ஆங்காங்குக் கண்டிருக்கிறபடி முறைகள் கீழே குறிக்கப்பட்டுள்ளன

### மூலிகை மர்மம் முதல் பாகத்தில்

### பிராண சஞ்சீவி மாத்திரை

| | |
|---|---|
| சுக்கு | பூண்டு |
| காயம் | மிளகு |
| திப்பிலி | நெல்லிக்காய்க் கெந்தகம் |

இவைகள் சமனெடை யெடுத்து ஒன்றிரண்டாயிடித்துக் கலுவத்தில் போட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு இரண்டு நாள் ஊறிய பிறகு திரும்பவும் பழச்சாறு விட்டு அரைத்து உளுந்துபோல் உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு மூலிகை மர்மம் என்னும் நூலில் வயிற்றுக் கடுப்புக்குச் சொல்லியுள்ள அனுபானத்துடன் கொடுத்தாலும் அல்லது இந்தப் பிராண சஞ்சீவி மாத்திரையைத் தனியாக வெந்நீரிலாவது கொதித் தண்ணீரிலாவது சர்க்கரையிலாவது கொடுத்தாலும் வயிற்றுக் கடுப்பு நிவர்த்தியாகும். பத்தியமில்லை.



### மூலிகை மர்மம் முதற்பாகத்தில் சொல்லிய

### கெர்ப்பமுண்டாக எண்ணெய்

| | |
|---|---|
| மிளகு | ஜாதிக்காய் |
| ஓமம் | வெள்ளைவெண்காயம் |
| திப்பிலி | கருவண்டு |
| இந்துப்பு | கருங்கம்பளி |
| வசம்பு | வகைக்கு 3-விராகனெடை |
| கஸ்தூரி மஞ்சள் | |

இடித்துக் கலுவத்திலிட்டுக் கொஞ்சம் விளக்கெண்ணெய் விட்டு மைபோல் ஆகுமளவும் அரைத்து 25 பலம் விளக்கெண்ணெயில் கரைத்து அடுப்பிலேற்றி மெழுகு பதமாய்க் காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு கெர்ப்பம் இல்லாத பெண்களுக்கு ருது ஸ்நாநம் வந்தபிறகு தலைமுழுகின மறுதினம் முதல் பிரதிதினமும் காலையில் ஒரு உச்சிக்கரண்டி வீதம் 15-நாள் கொடுக்கவும். இரண்டாவது தலைமுழுக்கு வந்த பிறகு முன்போலவே 13-நாள் கொடுக்கவும். எண்ணெய் சாப்பிடும்போது பத்தியம் சுட்ட புளி வறுத்த உப்பு சேர்க்கவேண்டியது. கைப்பு புளிப்பு இல்லாதிருந்தால் மிகவும் உத்தமம். மறுமாதம் கெர்ப்பந் தரிக்கும்.

## தாது புஷ்டிக்கு

### மதன சிந்தாமணி லேகியம்

| | |
|---|---|
| சுக்கு | இலவம் பிசின் |
| திப்பிலி | இலவம் விரை |
| மிளகு | ஆலம் விரை |
| ஏலம் | அரசம் விரை |
| கிராம்பு | அத்தி விரை |
| உளுந்து | ஆவாரம் விரை |
| எள்ளு | ஆளி விரை |
| கோஷ்டம் | செங்கழுநீர்ப் பூ |

| | |
|---|---|
| நெருஞ்சிவிரை | லவங்கம்பட்டை |
| நீர்முள்ளி விரை | ஜாதிக்காய் |
| பழுபாகல் விரை | ஜாபத்திரி |
| கொத்தமல்லி விரை | சீரகம் |
| இந்துப்பு | கருஞ்சீரகம் |
| வசம்பு | தண்ணீர்விட்டான் கிழங்கு |
| கடுக்காய்ப்பூ | நிலப்பனைக்கிழக்கு |
| மதனகாமப்பூ | அமுக்குருக்கிழங்கு |
| சோம்பு | வாழைக்கிழங்கு |
| இலுப்பைப்பூ | சத்திச்சாட்டரணை |
| தென்னம்பூ | சிறுகாஞ்சொரி |
| பனம்பூ | கொடிமுந்திரி |
| நெல்லிக்காய் வற்றல் | சீந்தில் |
| தான்றிக்காய் வற்றல் | சிறுதேக்கு |
| கடுக்காய்த் தோல் | குரோசானி ஓமம் |
| வெந்தயம் | |

இவைகள் வகைக்கு 1 பலம் எடுத்து உலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்து வாய் அகன்ற பெருஞ்சட்டியில் 2 படி பால் 2 படி ஜலம் விட்டு அடுப்பேற்றி வாய்ப்புறத்துக்கு மெல்லிய துணியினால் ஏடு கட்டி மேற்படி சூரணங்களைக் கொட்டிப் பரவவைத்து மேல் சட்டி கவிழ்த்து மூடி புட்டவியல் செய்யவும். இரண்டு படி ஜலமும் தீயெரித்துச் சட்டியை இறக்கிச் சூரணத்தை யெடுத்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு முக்கால்படி பசுப்பாலை அடுப்பிலிட்டு 15 பலம் சீனி சக்கரை இட்டுக் கலந்து பாகு பதமாய்ச் செய்து இறக்கிக்கொண்டு மேற்படி சூரணத்தைச் சிறுகத் தூவிக் கிளரிக்கொண்டே யிருக்கவும். சூரணங்கள் யாவும் ஆன பிறகு கால்படி தேனில் கால் பலம் அபினியை இழைத்து அந்தத் தேனை விட்டுக் கிளரவும். அல்லது கையினால் நன்றாய்ப் பிசைந்து பீங்கான் கோப்பையில் வைத்துக்கொண்டு ஒரு வேளைக்குக் கொட்டைப் பாக்குப் பிரமாணம் சாப்பிடவும். இப்படிக் காலை மாலை இருவேளையும் 40-நாள் தின்னவேண்டியது.



பகற்காலத்தில் புளிப்பு சேர்ந்த குழம்பு ரசம் பதார்த்தம் முதலியவை ஆகும். இராத்திரியில் மட்டும் பால் சாதம் சாப்பிடவேண்டியது. லாகிரி வஸ்துக்கள் கூடாது. ஸ்திரீ சஞ்சாரம் இல்லாதிருந்தால் உத்தமம். தேகம் பலக்கும்; தாது புஷ்டி யுண்டாகும்.

## மதனகாமேசுர லேகியம்

| | |
|---|---|
| சுக்கு | ஏலம் |
| திப்பிலி | முள்ளிலவம்பிசின் |
| மிளகு | சுத்திசெய்த கஞ்சா |
| அதிமதுரம் | அமுக்குருக்கிழங்கு |
| நீர்முள்ளிவித்து | தண்ணீர்விட்டான் கிழங்கு |
| நெருஞ்சிவித்து | மருட்கிழங்கு |
| மல்லி | ஆனைத்திப்பிலி |
| கோஷ்டம் | சிறுநாகப்பூ |
| ஜாதிக்காய் | வெந்தயம் |
| உளுந்து | கொடிவேலிவேர் |
| எள்ளு | நெல்லிக்காய் |
| கொடிமுந்திரிப்பழம் | மாசிக்காய் |
| பேரீச்சங்காய் | தான்றிக்காய் |
| அதிவிடையம் | அபினி |
| கஸ்தூரி மஞ்சள் | சண்பகப்பூ |
| கதலிக்கிழங்கு | பெருஞ்சீரகம் |

இவைகள் வகைக்குப் பலம் கால் எடுத்து உலர்த்தியிடித்து வஸ்திரகாயம் செய்து இதற்குச் சரியெடை பூனைக்காலி வித்தின் பருப்புச் சூரணம் சேர்த்து வைத்துக்கொண்டு இரண்டு படி பசுப்பாலை அடுப்பிலேற்றி 20-பலம் சீனி போட்டுக் கலந்து பாகுபதத்தில் இறக்கி மேற்படி சூரணத்தை கொஞ்சங் கொஞ்சமாய்த் தூவிக் கிளரிக்கொண்டிருக்கவும். யாவும் ஆனபிறகு ஆற வைத்து வேண்டியமட்டும் தேன் விட்டுப் பிசைந்து வைத்துக் கொள்ள வேண்டியது. மேற்படி சூரணம் தூவிக் கிள

ரும்போது அபிரேக்கு சிந்தூரம் கால்பலம் கூடக் கலந்து தூவ வேண்டியது. இந்த லேகியத்தை ஒரு வேளைக்குத் தேத்தான் கொட்டைப் பிரமானம் இருவேளையும் சாப்பிட வீரிய விருத்தி யுண்டாகும்; இந்திரியம் கட்டும்; அதிசாரம், கிராணி, பித்தசிலேத்துமம், வாய்வு இவையாவுந் தீரும்.

புளி, நல்லெண்ணெய், கடுகு இவை நீக்கி நெய் பால் முருங்கைப்பிஞ்சு இவை கூட்டவும். அபிரேக்கு சிந்தூரம் செய்முறை பின்வரும். சிந்தூரம் பற்பத்துடன் சொல்லி யிருக்கிறது.

## மதனகாம ரசக் குளிகை

| | |
|---|---|
| பூமிசர்க்கரை கிழங்கு | பூனைக்காலிவித்து |
| நிலப்பனைக் கிழங்கு | முருங்கைவித்து |
| சமுத்திரசோகி விரை | முத்தக்காசி |
| சாரப்பருப்பு | கிராம்பு |
| ஜாதிக்காய் | வெங்காரம் |
| ஜாபத்திரி | லிங்கம் |
| அபினி | வாலைரசம் |
| கஞ்சா | |

இவைகள் வகைக்குப்பலம் அரை. இவைகள் யாவும் பொடித்துக்கொண்டு ஒரு முத்தின தேங்காய் கொண்டு வந்து குடுமி முதலிய போக்கித் தேங்காயின் கண்கள் மூன்றையும் துவாரம் செய்து அதனுள் செலுத்தி மேலே ஒரு அங்குல கனம் சாணி தடவி யுலர்ந்த பிறகு முழப் புடமிடவும். சிரட்டை கருகினவுடன் எடுத்து மேல் சிரட்டையை நீக்கிவிட்டு மற்றவை கல்வத்திலிட்டு மெழுகு போல் அரைத்துக்கொண்டு தேற்றான்விரைப் பிரமாணம் உருட்டிச் சர்க்கரையில் பொதிந்து சாப்பிடவும். இப்படிக் காலை மாலை இருவேளையும் தின்னவும். இக்காலத்தில் புளி சேர்ந்த பதார்த்தங்கள், புளிப்புப் பழங்கள், புளிப்பு மோர் முதலியனவும் ஆகா. பால் அன்னம் புசிக்கவேண்டியது.



பகலில் சுட்டபுளி வறுத்த உப்பு கூட்டிக்கொள்ளவும். தாதுபுஷ்டி யுண்டாகும். விந்து உடையாது இதற்கு மாற்று எலுமிச்சம் பழம்.

## ஜெகபலக் குளிகை

| | |
|---|---|
| சிறுபூனைக்காலி | சிவன்வேம்பு |
| நத்தைச்சூரி | செந்நாயுருவி |
| நீர்முள்ளி | கருவேல் |
| முருங்கை | வன்னி |
| அமுக்குரு | மருது |
| செம்முள்ளி | மாங்கொட்டை |
| நெருஞ்சி | அமுக்குராக்கிழங்கு |
| ஊமத்து | நிலப்பனைக்கிழங்கு |
| ஓரிலைத்தாமரை | நன்னாரிவேர் |
| கஞ்சா | சமுத்திராப்பழம் |
| ஆவாரை | வாகை |
| முள்ளி | சாதிக்காய் |
| சங்கு | சாபத்திரி |
| கண்டை | குரோசானி ஓமம் |
| திரிபலை | சர்க்கரை |
| முசிமுசுக்கை | பாற்கொரண்டி |
| அகத்தி | கொன்றை |
| தேற்றான் | எள்ளு |
| அழிஞ்சி | கொத்துமல்லி |
| வில்வம் | முருங்கை |
| நெல்லி | விளா |
| அத்தி | வேலா |
| ஆத்தி | வேம்பு |
| அரசு | இலவு |
| ஆல் | சீனிகற்கண்டு |
| அவுரி | வெள்ளைக்குங்கிலியம் |
| புரசு | மதனப்பூ |
| முசுட்டை | அப்ரேக் செந்தூரம் |

இவைகள் யாவையும் வகை யொன்றுக்குப் பலம் அரைக்கால் உலர்த்தி யிடித்து வஸ்திரகாயஞ் செய்து இந்தச் சூரணத்துடன் அப்ரேக்செந்தூரம் சேர்த்துக் கொண்டு கொடி முந்திரிப்பழம் சாற்றில் மூன்று நாளரைத்துக் கடலைப் பிரமாணம் உருட்டி வேளை யொன்றுக்கு ஒரு குளிகை வீதம் ஆவின்பாலில் ஒரு மண்டலம் கைப்பு, புளிப்பு நீக்கி உட்கொள்ள யானை பலம் உண்டாகும்; தாதுவிருத்தி விசேஷமுண்டாகும்; சுக்கிலங் கட்டும்.

## மதன சஞ்சீவி

ஒரு படி ஆவின்பாலில் நாலுபங்கு கோதுமை மாவும் இருபங்கு சீனியும் போட்டுக் கிண்டிக்காய்ச்சிப் பாகு பதத்தில் நீர்முள்ளிவிரை, நிலப்பனங்கிழங்கு, லவங்கப் பட்டை, பனைவேர் வகைக்குப்பலம் 4. கருவேலன்பிசின், கஞ்சா வகைக்குப் பலம் 2. சந்தனம், சாதிக்காய், கிராம்பு, வெருஞ்சீரகம் வகைக்கு விராகனெடை 2. திப்பிலி பலம் அரை. இவைகளை இடித்துச் சூரணித்துத் தூவி நெய் படி அரை விட்டுக் கிண்டி மெழுகு பதத்தில் இறக்கி ஆற்றிப் பேரீச்சம்பழம் பலம் 4, தேன் பலம் 10 சேர்த்துப் பிசைந்து வேளையொன்றுக்குக் கொட்டைப்பாக்குப் பிரமாணம் சாப்பிட்டு வர விந்து ஊறும் போகம் மிகும்.

## சொர்ன பற்பக் குளிகை

| | |
|---|---|
| அபினி | சாம்பிராணிப்பூ |
| மதனகாமப்பூ | முருங்கை வித்து |
| கிராம்பு | ஆலம் வித்து |
| ஜாதிக்காய் | அரசம் வித்து |
| மராட்டிமொக்கு | அத்தி வித்து |
| அதிமதுரம் | தங்கபற்பம் |

இவைகளை ஓர் நிறையா யெடுத்து முருங்கைப்பூவின் சாற்றில் அரைக்கவும். மிகவும் நுண்ணிய மைபோல் ஆட்டிச் சிறு சுண்டையளவு மாத்திரை செய்து வைத்துக்



கொண்டு முருங்கைப்பூ போட்டுக் காய்ச்சியகால்படி பசும்பாலில் ஒரு உருண்டை இழைத்துச் சாப்பிடவும். இப்படி இரவில் ஒரே வேளையாக ஒரு மண்டலம் சாப்பிடவேண்டியது. உப்பு புளி நீக்கிப் பாலும் அன்னமும் தின்னவேண்டியது. பெண்மயக்கம், லாகிரி, புகையிலை இவை நீக்கியிருந்தால் தேகம் தங்கமயமாயிருக்கும்; தேகம் வலுக்கும்; தாதுகட்டும். மேற்படி ஒரு மண்டலம் ஆன பிறகு மனம்போல் நடக்கலாம்.

மேற்கூறிய தங்கபற்பம் பின்வரும் சிந்தூரம் பற்பம் முதலிய வகுப்புக்களுடன் சொல்லப்படும்.

## பூரணமதன வல்லாதி

| | |
|---|---|
| நாயுருவி வித்து | அரசம் வித்து |
| நத்தைச்சூரி வித்து | ஆலம் வித்து |
| பாற்சுண்டி வித்து | அத்தி வித்து |
| கஞ்சா வித்து | முருங்கை வித்து |
| துளசி வித்து | நீர்முள்ளி வித்து |
| திருநீற்றுப்பச்சை வித்து | பூனைக்காலி வித்து |
| கருவேலன் வித்து | ஆவாரை வித்து |
| சிறுகீரை வித்து | பொன்னுவாரை வித்து |
| புரசை வித்து | தேற்றான் வித்து |

இவைகள் வகைக்குக் கழஞ்சு 2

| | |
|---|---|
| சுக்கு | ஓமம் |
| திப்பிலி | வாலுழுவையரிசி |
| மிளகு | கோஷ்டம் |
| ஜாதிக்காய் | சாரப்பருப்பு |
| ஜாபத்தரி | வால்மிளகு |
| கிராம்பு | மதனகாமப்பூ |
| சோம்பு | சிறுநாகப்பூ |
| கருவாப்பட்டை | சர்க்கரை |
| ஏலம் | அபினி |

இவைகள் 18 தினுசும் வகைக்குக் கழஞ்சி 3.

| | | |
|---|---|---|
| எள்ளு | பலம் | 2 |
| பூமிச்சர்க்கரைக் கிழங்கு | ,, | 2 |
| சுத்திசெய்த சேங்கொட்டை | ,, | 1 |
| அமுக்கனுங்கிழங்கு | ,, | 1 |
| கொடிமுந்திரிப்பழம் | ,, | 1 |
| பேரீச்சம்பழம் | ,, | 1 |
| சுத்திசெய்து வறுத்த கெஞ்சா | ,, | 4 |

இவைகள் யாவும் கல்லுரலில் போட்டு நாலு ஜாமம் இடித்து மெல்லிய தூளாக யாவும் கலந்த பிறகு சீனி 5 பலம் கற்கண்டு 25 பலம் சேர்த்து மெழுகுபோல் இடித்து வைத்துக்கொண்டு வேளை யொன்றுக்கு அரை விராகனெடை வீதம் பசும்பாலில் சாப்பிட விந்து கட்டும். சற்று மயங்கினால் எலுமிச்சம் பழச்சாறும் ஈருள்ளிச்சாறும் கொஞ்சம் அருந்தினால் மாறும்.

### மதனப்பால்

சந்தனம், தேற்றான் விரை, முருங்கைவேர்ப் பட்டை இவைகள் சமனெடை யெடுத்துத் தேங்காய்ப்பாலில் அரைத்து வேளைக்குப் புன்னைக்காய் வீதம் உட்கொண்டு வர விந்து கட்டும் வலிவுண்டாகும். புளி நீக்கிப் பாலன்ன முண்ணவும்.

முருங்கைப்பூ நெருஞ்சிப்பூ, இளந்தென்னம்பாளை யுள்ளிருக்கும் அரிசி இவை சமன் கொண்டு பால்விட்டரைத்துப் பாலில் காய்ச்சி யுண்டுவரத் தாது விருத்தி யுண்டாகும்.

மூலிகை மர்மம் முதல் பாகத்தில் சொல்லியிருக்கும்

### சஞ்சீவி மூலிகை யென்னும்
### அழுகண்ணிச் செடியின் விவரம்

இந்துஸ்தானி பாஷையில் (றாதந்தியிலை) என்னும் அழுகண்ணியிலையானது கடலையிலைபோல் சிறியதாயும் வழுவழுப்புள்ளதாயும் முற்புறம் பூமியை நோக்கியும் பிற்



புறம் ஆகாயத்தை நோக்கியு மிருக்கும். அதினின்று ஜலமொழுகுவதைப்போல் தோற்றும். அது நல்ல ருசியையுடையதாகவும் கொஞ்சம் உப்புக்கரித்து மிருக்கும். இந்தச் செடியிருக்கும் பூமி கசிவாய்க் கருத்திருக்கும். எறும் புகளெப்போதும் மொய்த்துக் கொண்டிருக்கும். உவர் நிலத்தில் முளைக்கும். இதிலிரண்டு ஜாதியுண்டு. ஒன்று ஒரு முழ உயரம். மற்றொன்று ஒரு சாணுயரம்.

மூலிகை மர்மம் முதல் பாகத்தில் சொல்லிய

### சர்வ சுரக் குளிகை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கெந்தகம் | விராகனெடை | 1 | சுக்கு | விராகனெடை | 4 |
| இரசம் | ,, | 1 | திப்பிலி | ,, | 4 |
| நாபி | ,, | 1 | மிளகு | ,, | 4 |
| ஊமத்தன் விரை | ,, | 3 | | | |

இவைகள் கலுவத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு 3-ஜாம மட்டும் அரைத்து மிளகளவு மாத்திரை செய்து வைத்துக்கொண்டு பித்த சுரத்திற்கு இஞ்சிச் சாற்றிலும் வாத சுரத்திற்கு முருங்கப்பட்டைச் சாற்றிலும் கொடுக்கவும். குளிர்சுரத்திற்கு இஞ்சி பூண்டு முருங்கப் பட்டை இம்மூன்றும் இடித்துச் சாறுவாங்கிச் சுரசம் செய்து முறித்த தேன் முலைப்பாலில் கொஞ்சம் விட்டு இரண்டு மாத்திரைகள் இழைத்துக் கொடுக்கவும்.

### இதற்குக் கியாழம்

பேய்ப்புடல், கோரைக் கிழங்கு, பற்பாடகம், சீந்தில், சுக்கு இவை சமன்கொண்டு இடித்து எட்டொன்றாகக் கியாழம் வைத்துக் கொடுக்கவும். காலை மாலை மாத்திரை கொடுத்த பிறகு இந்தக் கியாழம் கொடுக்க வேண்டியது.

### பத்தியம்

அசாத்திய சுரமானால் கோதுமை நொய்யை வறுத்து ஜலம் விட்டுக் கஞ்சி காய்ச்சி வறுத்த உப்பு போட்டுக்

கொடுக்கவும். புளிப்பு கூடாது. சற்று வலிவான சுரமானல் சுட்ட புளி, வருத்த உப்பு, கத்திரி, முருங்கை, அவரை இவைகளின் பிஞ்சு கூட்டவும். சுரம் விட்ட பிறகு 8-நாள் பார்த்துக் காய்ச்சிய எண்ணெயினல் தலைக்கு வார்க்கவும்.

தலைவலி, உடம்பு அனல், கைகால் அசதி யுள்ளவர்கள் இரண்டு மாத்திரையையெடுத்து ஒரு வெற்றிலையில் வைத்து மடித்துத் தின்னவும். இப்படி இரு வேளையும் தின்னவும். பத்தியமில்லை. மிளகு நீர் சாதம், கச்சைக் கருவாடு, காரைப் பொடி, சுறு, இவைகள் குழம்பு சாப்பிடலாம்.

ஜன்னி சீதளம் முதலியவற்றிற்கு

## ஆனந்தவயிரவ மாத்திரை

| | |
|---|---|
| நாவிக்கிழங்கு | கெந்தகம் |
| லிங்கம் | இரசம் |
| மனேசிலை | வெங்காரம் |

இந்த ஆறு தினுசுகளும் சமனெடை யெடுத்துக் கலுவத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாற்றில் 4 ஜாம மரைத்துச் சிறு பயறளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திச் சீசாவில் போட்டு வைத்துக்கொள்ளவும்.

ஜன்னிக்கு முலைப்பாலில் முருங்கைப் பட்டை சுரசம் இவைகளில் இரண்டு மூன்று வேளை கொடுக்கவும். சுரத்திற்கு இஞ்சி, பூண்டு இவைகளில் மூன்று வேளை கொடுக்கவும். குளிர் சுரத்திற்கு இஞ்சி, பூண்டு இவைகள் நசுக்கிச் சாறு வாங்கிச் சுரசம் செய்து அதில் இரண்டு மாத்திரையிழைத்து முறித்த தேன், முலைப்பால் இவைகள் கொஞ்சம் விட்டுக் கொடுக்கவும். இப்படி 2, 3-வேளை கொடுக்க நிவர்த்தியாகும். இச்சாபத்தியம். கோதுமைக்கஞ்சி, காப்பி, பிஸ்கோத்து இவைகளும் கொடுக்கலாம்.



## நேத்திர ரோகம் 96-க்குத் தைலம்

| | | | |
|---|---|---|---|
| தாழம் விழுதுச் சாறு | கால்படி | பசும்பால் | கால்படி |
| நெல்லிக்காய்ச் சாறு | ,, | இளநீர் | ,, |
| கரிசலாங்கண்ணிச் சாறு | ,, | சீந்தில் சாந்து | ,, |
| பொன்னாங்காணிச் சாறு | ,, | நல்லெண்ணெய் | ,, |

இவைகள் யாவும் ஒன்றாய்க் கலந்து அடுப்பிலேற்றி,

| | |
|---|---|
| இலுப்பைப்பூ | நாகேசுவரம் |
| சந்தனம் | கோரைக் கிழங்கு |
| அதிமதுரம் | ஜாதிக்காய் |
| ஏலம் | விலாமிச்சம் வேர் |
| லவங்கப்பத்திரி | ஆலம்விழுது |
| தாமரைக் கிழங்கு | செங்கழுநீர்க் கிழங்கு, |
| வெட்டிவேர் | கீழாநெல்லி வேர் |
| வில்வப்பழஞ் சதை | |

வகைக்குப் பலம் கால் பசும்பால் விட்டரைத்துக் கலக்கிக் காய்ச்ச வேண்டியது. மெழுகு பதமாய்க் காய்ச்சி வடித்து வாரத்திற் கிருமுறை தலை முழுகிக்கொண்டு வந்தால் நேத்திர ரோகம் யாவும் தீரும். அன்று பகல் நித்திரையும் வெய்யலில் திரிதலும் கூடாது. பத்தியம் இல்லை.

## வேறுவித குளிர்ச்சித் தைலம்

| | | |
|---|---|---|
| வில்வப் பழச்சதை | பலம் | 2 |
| வெந்தயம் | ,, | 2 |
| கார்கோலரிசி | ,, | 2 |

இவைகளைப் பசும்பால் விட்டு மைபோல் அரைத்து 40-பலம் நல்லெண்ணெயில் போட்டுக் கரைத்துப் பதமாய்க் காய்ச்சி முழுகி வந்தால் உடம்பும் கண்களும் குளிர்ச்சி யடையும்; சகலமான சூடும் தணியும்.

மேற்படி நேத்திர ரோகத்தைப் பற்றிய தைல முறைகளில் இவ்விடத்தில் இரண்டு பாகங்கள் சொல்லப்பட்டிருக்

கின்றன. ஆகையால் இந்தநேத்திரரோகத்திற்குரிய பாகங்கள் ஆதியோடந்தமாக 96 வியாதியின் குணமும் அடையாளமும், அவைகளுக்குப் பலவித சிகிச்சைகள் முழுமையும் விபரமாய்ப் பார்க்க வேண்டியவர்கள் 'திருநேத்திர சிந்தாமணி' என்னும் சாஸ்திரத்தில் பார்வையிடலாம்.

மூலிகை மர்மம் 17-வது பக்கத்தில் சகல மாந்தத்திற்கும்

## பாலசஞ்சீவிக் குளிகை

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த வாளம் | விராகனிடை | 8 |
| சுக்கு | ,, | 7 |
| மிளகு | ,, | 8 |
| நெல்லிக்காய்க் கெந்தி | ,, | 2 |
| வெங்காரம் | ,, | 2 |
| இரசம் | ,, | 2 |
| கடுகுருணி | ,, | 2 |

இவைகளை மேற்கூறிய நிறைப்படி நிறுத்துக் கல்வத்திட்டு இலைக்கள்ளிச் சாற்றால் மெழுகுபோலரைத்து மிளகளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும். இந்த மாத்திரையைச் சகல மாந்தத்திற்கு முபயோகிக்கலாம். நொச்சி, ஆடாதோடை, துளசி, கரிசலாங்கண்ணி, கம்மாறு வெற்றிலை இவைகளை வகைக்குக் கொஞ்ச மெடுத்துச் சட்டியிலிட்டு வதக்கிச் சாறு பிழிந்து அந்தச் சாற்றில் 1-அல்லது 2-மாத்திரைகளிழைத்து வார்க்கவும். காலையில் வதக்கிப் பிழிந்துகொண்ட மூலிகைத் திப்பியை வைத்திருந்து மாலையில் சட்டியிலிட்டுச் சாம்பலாகுமளவும் தீயெரித்துப் பஸ்பமான பிறகு அத்துடன் கருஞ்சீரகம் போட்டு நன்றாய்ப் பொரிந்து அடங்கிய பிறகு கொஞ்சம் மிளகு சுக்கும் நறுக்கிப் போட்டு ஜலம் விட்டு நாலுக்கொன்றாய்க் கியாழமிட்டு 2-சங்களவு வார்க்கவும். இப்படி 2-3 நாள் வார்க்க சகல மாந்தமும் தீரும்.



மாந்த வியாதியினால் மிகவும் இளைத்துச் சக்தியற்ற குழந்தைகளுக்குக் காலையில் இரண்டு மாத்திரை யெடுத்துப் பொடித்து ஒரு சங்கு நல்ல ஜலத்தில் கலந்து வார்த்து விடவும். 1-அல்லது 2-விசை மலப்பிரவர்த்தியாகும். சுரம், அள்ளு, வயிறுப்பிசம் முதலானவைகளைக் கண்டிக்கும். மாலையில் கருஞ்சீரகமும் ஓமமும் சாம்பலாக்கி மிளகு கொஞ்சம் போட்டுக் கடலையிட்டுக் கொண்டு அவற்றோடு கொஞ்சம் சுக்கு நறுக்கிப்போட்டு தண்ணீர் விட்டு நாலுக்கொன்றாய்க் கியாழம் வைத்து 2-சங்கு வார்க்கவும். இதற்குத் தாயார் பத்தியமிருக்க வேண்டியது. அதாவது வாய்வான பதார்த்தம் தள்ளி மற்றதெல்லாம் சேர்க்கலாம்.

## பிள்ளைகள் குறுகுறுப்புக்கு மாத்திரை

| | |
|---|---|
| பார்ப்பார முன்ளிப்பூவின் இதழ் | கால் தோலா |
| ஓமப்பூ | அரைக்கால் ,, |
| கோரோஜனம் | அரைக்கால் ,, |
| கஸ்தூரி | ஒரு குன்றிமணி |
| மூசாம்பரம் | கால் ,, |
| குங்குமப்பூ | 5-குன்றிமணி |

இவைகளை நல்ல தண்ணீர் விட்டரைத்து, கம்பு அல்லது பயறு பிரமாணம் உருட்டி நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு பிள்ளைகள் நெஞ்சில் கபங்கட்டிக்கொண்டு குறுகுறுப் புண்டானால் இந்த மாத்திரை கொடுக்கவும்.

இரவில் படுக்கும்போது குழந்தைகள் திடமறிந்து 1-அல்லது 2 மாத்திரை யெடுத்து முலைப்பாலி விழைத்துக் கொடுக்கவும். இப்படி 2-நாள் கொடுத்தால் குறுகுறுப்பு, வயிறு சுரப்பு, இருமல் இவை தீரும். இரவில் கொடுத்தால் பத்திய மிருக்கவேண்டிய அவசியமில்லை.

பிள்ளைகளுக்கு இதே பிரகாரம் முலைப்பாலி விழைத்துக் காலையில் கொடுத்தால் பத்தியமிருக்க வேண்டியது. மீன், கருவாடு, கறி இவைகள் ஆகா. இச்சாபத்திய மிருக்க வேண்டும்.

பெரியவர்கள் மார்புச்சளி, ஜலுப்பு, சீதளம் இவைகளுண்டானால் இரண்டு மாத்திரையெடுத்து வெற்றிலையில் வைத்து மடித்து 2, 3-வேளை தின்னவும். இச்சாபத்தியம்.

## பிள்ளைகள் அள்ளுமாந்தத்திற்கு மாத்திரை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முலைப்பாலில் ஒரு நாள் ஊறிய மாசிக்காய் | | | | தோலா | அரை |
| ரசசெந்தூரம் | தோலா | 1 | சுத்திசெய்த வாளம் | ,, | அரை |
| சயிந்தலவணம் | ,, | 1 | கோரோஜனம் | ,, | அரை |
| திப்பிலி | ,, | 1 | குங்குமப்பூ | ,, | அரை |
| சுக்கு | ,, | 1 | கஸ்தூரி | 3-குன்றிமணியிடை | |

இவைகள் யாவும் மேற்படி நிறைப்படி நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டுக் குப்பைமேனிச் சாறு விட்டு இரண்டு நாள் அரைத்துப் பயறு பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

பிரண்டைச் சாற்றிலாவது, துளசிச் சாற்றிலாவது, குப்பைமேனிச் சாற்றிலாவது கொடுக்கலாம். 1 அல்லது 2 மாத்திரைகளிழைத்துக்கொடுக்கவும். வயறுப்பிசம், மேல்சுவாசம், அள்ளுமாந்தம், முக்கல் முதலிய வியாதிகள் தீரும். இதற்குப் பத்தியம் வருத்த உப்பு, சுட்ட புளி கூட்டவேண்டியது. அவரவர்கள் குழந்தையின் திடம் அறிந்து வழக்கம்போல் பத்தியமிருக்க வேண்டியது தாய்மார்களின் கடமையாகும்.

மூலிகை மர்மம் முதல் பாகத்திற் கூறிய

## சிவநாதத் தைலம்

| | |
|---|---|
| இரசம் | சேங்கோட்டை |
| மிளகு | வெள்ளுள்ளி |
| கெந்தகம் | |

வகைக்குக் கால் பலம் கல்வத்திலிட்டுப் பசும் வெண்ணெய் போட்டரைத்துத் துணியில் ஊட்டி வர்த்திபோல் திரித்து இரும்பு கம்பியில் கோத்துத் தீயிற் கொளுத்திச் சாய்த்துப் பிடிக்கத் தைலமிறங்கும். அந்தத் தைலத்தைப் பீங்கானில் விழும்படி பிடித்துக்கொண்டு அதை யெடுத்துச் சீசாவில் பதனம் பண்ணி வைத்துக்கொள்ளவும். புறவிசிவு அல்லது புறங்கழுத்து வலிப்பு, நரம் பிழுப்பு இவைகளுக்கு ஒரு காசெடைத் தைலத்தை வெற்றிலையில் விட்டு உள்ளுக்குக் கொடுத்துவிட்டு மேலுக்கும் பூசித் தேய்க்க நிவர்த்தியாகும். பத்தியம் கிடையாது.



## புறவிசுவுக்கு வேறு

இஞ்சிச்சாறு, முலைப்பால், தேன் இவைகளைச் சமமாய்க் கலந்து மேற்படி வியாதி கண்டவுடன் உள்ளுக்குக் கொடுக்கவும். மிஞ்சினால் வேப்பெண்ணெயாவது முன் சொல்லிய தைலமாவது கொஞ்சம் விட்டுக் கொடுக்கத் தீரும்.

அல்லது மேற்படி சேங்கொட்டை சேர்ந்த சுடர்த் தைலத்தை ஒருகாசெடை உள்ளுக்குக் கொடுத்தவுடன் எருக்கன் இலையைக் கொண்டுவந்து வேப்பெண்ணெய் தடவிப் படை நெருப்பிலிட்டு வதக்கிப் புறங்கழுத்தின் மேலிட்டுச் சூடுறைக்கும்படி அழுத்தமாய் ஒற்றடம் செய்யத் தீரும்.

## ஜன்னியைச் சேர்ந்த தீராத தலைவலிக்குப் புகை

பெருங்காயம், ஓமம், சுக்கு, சாம்பிராணி, மிளகு, சிற்றரத்தை, கழற்சிப்பருப்பு, சீரகம், லிங்கம் இவைகள் சமனெடை யெடுத்து எருக்கம்பால் விட்டு மைபோலரைத்துச் சீலையில் தடவித் திரியாகத் திரித்து உலர்த்தி யெடுத்து ஒரு முனையைத் தீயிற் காட்டிப் புகை பிடிக்கவும். இந்தப் புகையை இரவில் போஜனம் செய்து படுக்கும்போது தேக திடமறிந்து 1-அல்லது 2, 3-நிமிஷம் வரையில் நாசியில் பிடித்துப் பிறகு நித்திரை செய்ய வேண்டியது. இப்படி இரண்டு மூன்று நாள் பிடித்தால் தீராத தலைபாரம் புறவலி இவைகள் தீரும். சீதள பதார்த்தம் சம்போகம் ஆகா. வேறு பத்தியமில்லை.

## சர்வ சூட்டிற்கும் கூஷ்மாண்ட லேக்கியம்

இரண்டு படி பசுவின்பாலில் இருபது பலம் சீனி போட்டுக் கரைத்துப் பாகுசெய்து அதில் பெரும்பூசணிக் காயை மேற்றோல் சீவி நறுக்கி உலர்த்தி யிடித்து வடிகட்டின பொடி படி 1, கோஷ்டம், இலவங்கம், கஸ்தூரி மஞ்சள், இந்துப்பு, திரிபலை, மதுரம், ஜாதிபத்திரி, கடுகு வகைக்குப் பலம் அரைக்கால் சூரணித்து யாவுங் கலந்து தூவி அரைப்படி நெய் விட்டுக் கிண்டி மெழுகு பதத்தி லிறக்கி வேளை யொன்றுக்குக் கொட்டைப் பாக்குப் பிரமாணம் சாப்பிடவும். வறட்சி, எலும்புருக்கி, சிரங்கு, நீர் கடுப்பு, கல்லடைப்பு, வெட்டை தீரும். தேகம் குளிர்ச்சியடையும். கைகண்டது.

## சர்வசூடு, தேகவூரல், நமை முதலியவற்றிற்கு சாமிநாத எண்ணெய்

சிற்றாமணக்கெண்ணெய் சேர் 1, எலும்மிச்சம்பழச் சாறு சேர் 1, பூந்திப்பட்டை பலம் 1, கழற்சிப்பருப்பு 3, இவைகளை அரைத்து எண்ணெயிற் கலந்து மெழுகு பதமாய்க் காய்ச்சி யிறக்கிக் கொண்டு இந்த எண்ணெயில் பேதிக்குச் சாப்பிட்டு விட்டு மறுநாள் முதல் கொஞ்சங் கொஞ்சமாய் 10-நாள் சாப்பிட்டுக்கொண்டு வந்தால் ஊரல் நமை சூடு சொஸ்தமாகும். இச்சாபத்தியம். இராஜ வைத்திய சிந்தாமணி முறை.

## சகல வாயுக்களையுங் கண்டித்துக் குளிர்ச்சி யுண்டாக்க அமிர்தாதி சூரணம்

| | |
|---|---|
| ஏலம் | ஜடாமாஞ்சி |
| நற்சீரகம் | திப்பிலிமூலம் |
| குரோசாணி ஓமம் | வலிவாகி |
| வாய்விளங்கம் | நிலவாகை |
| கடுகுரோணி | அதிமதுரம் |
| கிராம்பு | மகரப்பூ |
| சித்திரமூலம் | திப்பிலி |
| குங்குமப்பூ | மஞ்சிட்டி |
| இலவங்கம் | ஜாதிக்காய் |
| கருஞ்சீரகம் | சிற்றரத்தை |
| வால்மிளகு | நிலவேம்பு |



இவைகள் வகைக்குச் சமனெடை யெடுத்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து இதற்குச் சரியெடை சீனி கூட்டி வேளைக்குத் திரிகடிப் பிரமாணம் சாப்பிட்டுக் கொஞ்சம் வெந்நீர் குடிக்கவும். இப்படி மண்டலக் கணக்காய்த் தின்று வந்தால் கை கால் உளைச்சல், உள்ளுருக்கி, எலும்புருக்கி, பிரமியம், கரப்பான், மூலம், வாதம், பித்தம், உஷ்ணவாயு முதலிய சகல வாயுவுந் தீர்ந்து நல்ல பசித் தீபன முண்டாகும். தேகத்தில் குளிர்ச்சி யுண்டாகும். இச்சாபத்தியம்.

## புழுவெட்டினால் மயிர் உதிர்வதற்கு மருந்து

பொரித்த வெங்காரம் ஒரு வராகனெடையை வெங்கலத்தட்டில் வைத்து அதன் பேரில் கரசலாங்கண்ணிச் சாறு விட்டு இரும்பினால் 3-நாழிகை யிழைத்துப் பிறகு வெண்ணெய் சேர்த்துச் சங்கினால் 3-நாழிகை யரைத்து வழித்து டப்பியில் வைத்துக்கொள்ளவும். புழுவெட்டினால் மயிர் உதிருமிடத்தில் இந்த மையை 5-நாள் தடவினால் மறுபடியும் மயிர் முளைக்கும்.

## விரை வீக்கத்திற்கு மெழுகு

கெச்சைக்காய்ப் பருப்பு, வெள்ளைக் குன்றிமணி, முடக்கொத்தான், எருக்கம் விரை, நாட்டுக்கொள்ளு இவை சமனெடை சேர்த்துக் கல்லுரலிற் போட்டிடித்துப் பிறகு கல்வத்தில் போட்டுக்கொண்டு ஆமணக்கெண்ணெய் விட்டு மெழுகுபோ லரைத்துக் கொட்டைப்பாக்குப் பிரமாணம் ஒரு வேளைக்குச் சாப்பிடவும். விரை வீக்கம் அண்டவாய்வு

தீரும். பத்தியம் உப்பு தள்ளுபடி. வீக்கம் அதிகமாயிருந்தால் ஓட்டைலத்தி கெச்சைக்காயிலை யிரண்டையும் வறுத்திடித்து விரைக்கு ஒத்திடம் கொடுத்தால் அநுகூலமாகும்.

## வாந்திபேதிக்கு மாத்திரை

மிளகு பெருங்காயம் அபினி காலே வீசம் பலம். இவைகளைச் சேர்த்து மைபோலரைத்து 12 மாத்திரைகளாகச் செய்துகொண்டு அரைமணிக் கொருதரம் வாந்திபேதி நிற்கிறவரையில் கொடுக்கவேண்டியது. 7-முதல் 14-வரை வயதுள்ளவர்களுக்குப் பாதி மாத்திரையாகக் கொடுக்க வேண்டியது. இந்த மாத்திரை வங்காள தேசத்தில் மிகவும் அநுபோகமானதாக டிரஸர் ஜெகந்நாத நாயகரால் சொல்லப்பட்டது.

## இரத்த அதிசாரத்திற்கு

பெருமரப்பட்டை பலம் 1. மாதுளைச்சாறு, வாழைப்பூச்சாறு, தென்னம்பூச்சாறு வகைக்கு வீசம்படி. இந்தச் சாறுகளால் ஷை மருந்தை அரைத்து ஒன்றாய்க் கலக்கி 5-நாள் உட்கொண்டால் இரத்த அதிசாரப் பேதி தீரும்.

## சேதுபண்டித தாம்பிராதி மாத்திரை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சங்கு | வராகனெடை | 6 | துத்தம் | வராகனெடை | 5 |
| சுக்கு | ,, | 1 | கடுகுரோகணி | ,, | 6 |
| திப்பிலி | ,, | 10 | கோஷ்டம் | ,, | 5 |
| அதிமதுரம் | ,, | 12 | இந்துப்பு | ,, | 5 |
| தாம்பர அரப்பொடி | | 12 | | | |

இவைகளை யிடித்து வஸ்திரகாரஞ் செய்து பழச்சாறு விட்டரைத்து அந்த மருந்தைச் செப்புப் பாத்திரத்தில் தடவி வைத்து மறுநாள் வழித்தெடுத்து முன்போலரைத்து மேற்படி பாத்திரத்தில் தடவிவைத்து மறுபடியும் வழித்தரைத்துத் தடவி வைக்கவும். இப்படி 21-நாள் செய்து பிறகு மிளகுபோல் மாத்திரை செய்து வைத்துக்கொண்டு தண்



ணீரிலிழைத்துக் கண்ணில் தடவினால் தூர்மாமிச வளர்ச்சி, நீர் முட்டல், காசம், படலம், அமரம், திமிரம் இவை சொஸ்தமாகும்.

# பஸ்ப சிந்தூர வகுப்பு

முன் சொல்லிய லேகியங்களுடன் சேர்க்கவேண்டிய செந்தூரங்களும் அவற்றுடன் சில பஸ்பங்களும் கூறப்படுகின்றன.

## தங்க பஸ்பம்

தங்க ரேக்கு ஒரு வராகனெடை கொண்டுவந்து சிறு பொடியாகக் கத்தரித்துக் கல்வத்திலிட்டுச் சிற்றண்டத்தோல் இரண்டு வராகனெடை பொடித்துப் போட்டு முள்ளுக்கீரை சாற்றால் ஒரு ஜாமம் அரைத்து மூசையிலிட்டு மேலோடு மூடிச் சீலை செய்து காய்ந்த பிறகு உலையிலிட்டு மூசை பழுக்கும்படி மூன்று விசை ஊதி அப்படியே உலையுடன் விட்டு மறுநாள் வரையிலும் ஆறிய பிறகு எடுத்துச் சீசாவில் போட்டு வைத்துக்கொள்ளவும். பூரணாதி முதலிய லேகியங்களில் சம்பந்தப்படுத்தி அருந்தி வந்தால் தேகம் தங்க நிறமாயிருக்கும். இச்சாபத்தியம். நல்ல பசியும் தாதுபுஷ்டியு முண்டாகும்.

## வெள்ளி பஸ்பம்

மேற்படி தங்கபஸ்பம் செய்யும் பாகத்தைப் போலவே வெள்ளியையும் செய்து எடுத்துப் பார்க்கவும். கம்மலாயிருந்தால் அண்டத்து வெள்ளைக்கருவாலாட்டிப் பில்லை தட்டி 50-வரட்டியில் புடம் போட்டு மறுதின மெடுத்துக் கொள்ளவும். திரிகடுகு திரிபலாதி சமன் கொண்டு சூரணித்து ஒரு வராகனெடை சூரணத்திற்கு இரண்டு அரிசியெடை பஸ்பஞ் சேர்த்து அரைத்தேனோ நெய்விட்டிழைத்துச் சாப்பிடவும். சகலவாய்வுங் கண்டிக்கும். தேக மிறுகும். நல்ல பல முண்டாகும். இந்த பஸ்பத்தை உயர்ந்த லேகியங்களுடனுஞ் சேர்த்துச் சாப்பிடலாம்.

## பவழச் சுன்னம்

பவழத்தைப் பழச்சாற்றில் ஒரு நாள் ஊரவைத்து மறுநாள் கழுவி உலர்த்திக் கலசத்திலிட்டு எருக்கம்பால் மிதக்கவிட்டு ரவியில் வைக்க மெழுகாகும். உடனே எடுத்து ஒரு ஓட்டில் எருக்கம் பழுப்பு பரப்பி ஓடு மூடிச் சீலே செய்து முழுப்புடம் போடக் கடுங்காரச் சுன்னமாகும். வெற்றிலேயில் தடவிப் போட்டுக் கொள்ளலாம். க்ஷய ரோகிகள் தாம்பூலத்தில் தடவிப் போட்டுவர நிவர்த்தியாகும்.

## அபிரேக்கு செந்தூரம்

கிருஷ்ண அபிரேக்கு பலம் 1, அன்னபேதி பலம் 1, வெடியுப்பு பலம் 1, இவற்றை எலுமிச்சம் பழச்சாறு விட்டு 3-நாள் அரைத்துப் பில்லே தட்டிப் புடமிடவும். சகல வியாதிக்கும் ஆகும். முன்கூறிய லேகியத்திற்குச் சேர வேண்டிய கணக்குப்படி கலந்து சாப்பிடவும்.

## அயச் செந்தூரம்

அயம் ராவின பொடி 3-நாள் பழச்சாற்றில் ஊற வைத்து நாலாம் நாள் ஜலத்தில் அலம்பிவிட்டுக் குப்பை மேனி ரசம் விட்டரைத்துப் பில்லே தட்டிக் காயவைத்து 25 வரட்டியில் புடம் போடவும். மறுபடியும் பழச்சாற்றில் ஒரு புடம், கரிசலாங்கண்ணிச் சாற்றில் ஒரு புடம், குப்பைமேனிச் சாற்றில் ஒரு புடம், மறுபடியுங் குப்பை மேனிச் சாற்றில் ஒரு புடம் ஆக ஐந்து புடமும் போட்டு எடுத்து வைத்துக்கொள்ளவும். இளேத்த தேகங்களுக்குச் சில லேகியங்களில் கலந்து கொடுக்கலாம். "இளேத்த வன் இரும்பைத் தின்னவேண்டும்" என்ற பழமொழியுமுண்டு.

## அன்னபேதி செந்தூரம்

2 பலம் அன்னபேதியைக் கல்வத்திலிட்டுப் பழச்சாற்றை மிதக்க விட்டு மேலோடு மூடிச் சீலே செய்து முழுப்புடத்திலிட்டு ஆறிய பிறகு கல்வத்திலிட்டுச் சீசாவில் வைத்துக்கொள்ளவும். சகல சுரத்திற்கும் தேன் முலேப்பாலில் கொடுக்கலாம். இச்சாபத்தியம்.



## வெள்வங்க பஸ்பம்

ஒரு பலம் வெள்வெங்கத்தை யுருக்கி விளக்கெண்ணெயில் சாய்க்க, சுத்தியாம். அதன் பிறகு அதை ஈச விறகுபோல் தகடடித்துப் பொடியாகக் கத்தரித்துப் பூவரசம் வேர் கனமாகக் கொண்டுவந்து அந்த வேரை ஒரு பக்கம் தொளேத்து மேற்படி பொடியைப் போட்டுத் தொளே தெரியாமல் அதே வேரினல் தமர்போட்டு 2, 3 மண்சீலே செய்து கெஜபுடம் போட்டு மூன்றாவது நாளெடுத்துச் சீலேயைத் தட்டி உடைத்துப் பார்க்கப் பஸ்பமாயிருக்கும். அதை யெடுத்துச் சீசாவிற் போட்டு வைத்துக் கொள்ளவும்.

சுக்கு, திப்பிலி, மிளகு, தான்றிக்காய், மாசிக்காய், நெல்லிக்காய் இவை ஆறும் சமனெடை கொண்டிடித்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து ஒரு வராகனெடை சூரணத்திற்கு இரண்டு குன்றிமணி யெடை மேற்படி பஸ்பம் வைத்து அரை ரூபா யெடை பசும் நெய் விட்டுக் குழைத்துச் சாப்பிடவும். இப்படி 7 நாள் அல்லது 10 நாள் சாப்பிடவும். சூடு வெள்ளே பிரமேகம் வாயு இவைகள் தீரும். இச்சா பத்தியம்.

## கருமேகத்திற்கு

கருமேகத்திற்கு மேற்படி பஸ்பத்தை இரண்டு குன்றிமணி யெடுத்து அரை ரூபாயெடை பசும் வெண்ணெயிற் குழைத்துச் சாப்பிடவும். இப்படி இருபது நாள் சாப்பிட்டுச் சரியான பத்தியமிருக்கில் கருமேகந் தீரும்.

## கருமேகத்திற்குக் கந்தக பஸ்பம்

ஒரு பலம் நெல்லிக்காய்க் கெந்தகமும் மருதம் பட்டை வேண்டியதும் கொண்டுவந்து கொளுத்திச்

சாம்பலாக்கி ஒரு படி ஜலம் பிடிக்கும் மண் கலயத்தில் அரைக்குடுவை மேற்படி சாம்பல் கொண்டு நன்றாய் அழுத்திக் கெந்தகத்தை நடுவில் வைத்து மேலுக்கும் சாம்பல் போட்டு அழுத்தமாக அழுத்தி உதடு மட்டும் சாம்பலழுத்தி வாய்ப் புறத்திற்கு ஓடு மூடி அடுப்பேற்றித் தீயெரிக்கவும். கலயத்தின் உதட்டைத் தொட்டால், சூடானது கைதாங்காத சமயமட்டில் வைத்து எடுத்திறக்கி அப்படியே ஆறின பிறகு சாம்பலை நீக்கிக் கந்தகத்தையெடுத்துக் குப்பைமேனி யிலையை அரைத்துத்தேங்காய்ப் பிரமாணம் மொத்தைக்குள் கெந்தியை வைத்து 3 சீலை செய்து முக்கால் கெஜப் புடமிட்டு அப்படியே ஆறிய பிறகு எடுக்கப் பஸ்பமாகும். நெய்யில் தேனில் வெண்ணெயில் எதிலாவது அரிசி யெடை பஸ்பம் வைத்துக் கொடுக்கவும். இப்படி அரைமண்டலம் கொடுக்கக் கருமேகம் தேக ஊரல் இவை தீரும். இச்சாபத்தியம்.

முன் சொல்லியபடி அரை மண்டலம் மருந்து சாப்பிட்டு இச்சாப்பத்திய மிருந்த பிறகு ஸ்நானஞ் செய்துவிட்டு அகத்திக்கீரை வேர் இடித்துத் தூளாக்கி ஒரு படியெடுத்துப் படி ஜலத்தில் போட்டுக் கால்படி கியாழமாகக் காய்ச்சி யிறக்கி இருவேளையாகப் பாகித்துச் சாப்பிடவும். இப்படி 20 நாள் சாப்பிட்டால் மேகவூரல் கருமேகம் தீரும். இந்த இருபது நாட்களுக்குள் தலை முழுகக்கூடாது. உடம்பு மட்டில் குளிக்கலாம். இச்சாபத்தியம்.

## பவழ பஸ்பம்

ஒரு பலம் பவழத்தை ஒருநாள் தண்ணீரில் ஊறவைத்துக் கழுவிப்போட்டுத் தேள் கொடுக் கிலையை யரைத்து அதற்குள் மேற்படி பவழத்தை வைத்து மூடி ஏழு சீலை செய்து காயவைத்து நூறெருவில் புடம்போட் டெடுத்துப் பீங்கானிலிட்டு அதில் ஆவின்பால் விட்டு ரவியிற் காய வைத்து அப்பாலதை ஆல் பழுப்பிற் கட்டி நெற்குழியில் 3-நாள் புதைத்தெடுத்து அநுபானங்களிலிட க்ஷயம், ஈளை,



மந்தாரகாசம், சிரங்கு, சொறி முதலான மேற்காட்டிய ரோகங்கள் தீரும்.

## கல்நார் பஸ்பம்

கல்நாரைச் சிறுதுண்டாய்ப் பிளந்து ஓட்டிலிட்டு அதற்குக் கீழுமேலும் கோங்கிலவம்பட்டையை இடித்துப் போட்டு அப்பால் மேற்படி பட்டைக்கியாழம் விட்டரைத்து 3-புடம் போடத் தவளம்போல நீற்றுப்போகும். தேனிலாவது தூதுளை லேகியத்திலாவது கொள்ளச் சிலேத்தும நோய்கள் யாவும் நீங்கும்; மேக காங்கை தீரும். ஷை பஸ்பத்தால் பல் விளக்கத் தந்தம் இறுகும்.

கல்நாரைச் சிறுதுண்டுகளாக வெட்டி ஓட்டில் வைத்து அதற்குக் கீழுமேலும் எருக்கம்வேரை யிடித்துத் தூளைப்போட்டு மூடிக் கெஜபுடம் போட்டு மேற்படி பாலிலரைத்து 9-புடம் போட்டு அனுபானத்திலிட மேற்படி வியாதிகள் தீரும். தந்தம் இறுகும்.

## சிங்கி பஸ்பம்

சிங்கி யென்னும் மான் கொம்பு 5 பலமெடுத்துச் சிறு துண்டுகளாய் நறுக்கிக் குப்பைமேனிச் சாற்றில் ஊற வைத்து மேற்படி யிலையை அரைத்துக் கவசஞ் செய்து காயவைத்து ஓட்டில் பரப்பிவைத்து மேலோடு மூடிச் சந்துவாய் சீலைமண் செய்து ஐம்பதெருவிற் புடம்போட் டெடுத்து ஆவின்பால் விட்டரைத்துப் பில்லை தட்டிக் காய வைத்து முன்போற் புடம்போடப் பஸ்பமாகும். அனுபானங்களில் மேற்படி பஸ்பத்துடன் பவழ பஸ்மம் சேர்த்துக்கொடுக்க நீரடைப்பு, கல்லடைப்பு, சதையடைப்பு, நீரெரிவு, க்ஷயம், ஈளை, இருமல், உஷ்ணம், மேககாங்கை தீரும்.

## சிலாசித்து பஸ்பம்

கரடில்லாத கற்பூர சிலாசித்து 5-பலமெடுத்துச் சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு நாள் முழுதும் நல்ல ஜலத்தில்

ஊறவைத்து மறுநாட் காலையிலெடுத்து அலம்பி இந்தப் படி ஐந்துநாள் அலம்பி யெடுத்துக்கொண்டு சிறுசெருப் படை சாற்றுலாட்டிப் பில்லை தட்டிக் காயவைத்து ஓட்டில் வைத்து மேலோடு மூடிச் சீலைமண் செய்து 50-எருவில் புடம்போட்டு ஆரியபின் எடுத்து மேற்படிச் சாற்றுலாட்டி லேசாக பில்லை தட்டிப் புடம்போடவும். இப்படி 3-விசை புடம்போட்டெடுத்துச் சீசாவில் வைத்துக்கொண்டு பித்த எரிவு, பித்தவெட்டை, நீர்க்கடுப்பு இவைகட்குப் பசும் வெண்ணெயில் கொடுக்கவும். இச்சாபத்தியம்.

## வெங்கார பஸ்பம்

ஒரு குடுவையில் மேற்படி சிலாசித்து பஸ்பம் கால் பங்கிட்டு அதன்மேல் சுத்திசெய்த வெங்காரமிட்டு அதற்குமேலும் சிலாசித்து இட்டு ஓடு மூடிச் சீலைமண் செய்து உலர்த்தி 10 எருவில் புடம்போடவும். நீர் கட்டு, சுறுக்கு அனல் இவைகட்கு வெண்ணெயில் பணவெடை கொடுக்கவும். தீராவிட்டால் முள்ளங்கிச் சாற்றில் இரண்டு பண வெடை கொடுக்க உடனே நீர்க்கட்டு உடையும். இச்சா பத்தியம்.

மேற்கூறியபடி அந்தந்தப் பஸ்பத்தைத் தனித்தனியே உபயோகப்படுத்திக்கொள்ளலாம். அல்லது சிலாசித்து பஸ்பம், வெங்காரபஸ்பம், பவழ பஸ்மம் இவை யாவும் சமனெடை கூட்டிச் சீசாவில் வைத்துக்கொண்டு ஒரு வேளைக்குப் பணவெடை யெடுத்துப் பசுவெண்ணெயி லிழைத்துச் சாப்பிடவும். இப்படி இருவேளையும் 3-நாள் தின்றால் சகல உஷ்ணமும் தீரும். நீர்க்கட்டு, நீர்க்கிரிச் சரம், வாய்வு, உடம்பெரிவு யாவுந்தீரும். தேக நிதானத் திற்குத் தக்கபடி 3-நாள் 7-நாள் சாப்பிடவும். இச்சா பத்தியம்.



## கஸ்தூரி மெழுகு

| | | |
|---|---|---|
| கஸ்தூரி | வராகனெடை | க |
| பச்சைக் கற்பூரம் | ,, | உ |
| கோரோசனை | ,, | ரு |
| குங்குமப்பூ | ,, | ச |
| புனுகு | ,, | வ |
| சவ்வாது | ,, | வ |
| பூ நீக்கிய லவங்கம் | ,, | ச |
| வால்மிளகு | ,, | ச |
| ஏலக்காய் அரிசி | ,, | அ |
| சிறு லவங்கப்பட்டை | ,, | அ |

இதில் சூரணம் செய்பவைகளைச் சூரணித்து யாவுங் கூட்டிக் கல்வத்திலிட்டுக் கம்மாறு வெற்றிலைச் சாற்றில் ஒரு ஜாமம், கற்பூரவல்லிச் சாற்றில் ஒரு ஜாமம், தூதுவே ளைச்சாற்றில் ஒரு ஜாமம், இஞ்சிச்சாற்றில் ஒரு ஜாமம், மிளகுக் கியாழத்தில் ஒரு ஜாமம், மஞ்சள் கரிசலாங்கண் ணிச்சாற்றில் ஒரு ஜாமம் இப்படித் தனித்தனியே ஒவ்வொரு ஜாமம் அரைத்துக் கலுவத்துடன் நிழலில் உலர்ந்த பிறகு சுயத்தேனினால் மெழுகு பதமாய் அரைத்து வழித்துக்கொண்டு ஒரு பயறு பிரமாணம் எடுத்துத் தேனில் துவட்டிக் கொடுக்கவும். இப்படி இருவேளையும் 3-நாள் 5-நாள் கொடுக்கவும். ஜன்னி, சீதளம், சுரம், கபரோகம், உப்பிஷம், மாந்தம், முகவாத ஜன்னி, சூதக ஜன்னி, இருமல், மாரடைப்பு, நடுக்குவாதம் இவை தீரும். தேக திடமறிந்து நாள் அதிகரித்தும் குறைத்தும் கொடுக்க வேண்டியது. இச்சாபத்தியம் இருக்கவேண்டும்.

அகஸ்தியர் அருளிய

# சண்டமாருதச் செந்தூரம்

[நொண்டிச்சிந்து]

பரிதிமதியுதித்த—திருப்
பாற்கடல் சூழுமிப்புவிதனிலே
பெருமைமிகப்பெருகும்—மானிடர்க்கு
பொக்குவியாதியின் கக்குவிஷத்தை
அறிந்தேகுருமுனிவர்—மனது
அன்புடன்மானிடர் தென்படவே
திருந்தியதோரவிழ்தப்—சண்ட
மாருதமென்றொருசெந்தூரம்
சொன்னார்வெகுசுருக்கு—பெருந்
தொல்லைகளாகிய அல்லலில்லை
முன்னால்மூலிகைச்சார்—நல்ல
முத்திடும்பட்டைகியாழமது
தன்னாலரையாமல்—ரவியில்
தாக்கிடுட்வெயிலில்வையாமல்
தானாஓட்டிலிட்டு—மூடி
சந்துவாய்சீலைகள் செய்யாமல்
புடம்போட்டுமாயாமல்—கள்ளன்
பொக்கிஷக்காலடிகண்டதுபோல்
திடம்பெற்றசெந்தூரம்—அதி
சீக்கிரம்செய்திடும்தொழில்முறைகேள்
பூரந்திசையெடையாம்—அதில்
பூட்டிடுலிங்கந்திக்கெடையாம்
வீரம்வினையெடையாம்—இன்னம்
வேட்டியகெந்தியும் வீரனெடை
செந்தூரம்ஒரெடையாம்—இதில்
சேர்ந்தசரக்கெல்லாம் சுத்திசெய்து
சந்தோஷமாகவேதான்—அம்மி



தன்னிலிருஜாமம் தானரைத்தால்
வர்னம்பவழநிறம்—அதில்
வந்திடுமுந்தன்மனங்குளிர
சொர்னமிதற்கீடோ—அதி
சொக்கிதுசொக்கிது சொல்கிறேன்கேள்
திரமாகும்குப்பிதனில்—யாவும்
திரட்டியறுகோணந்தன்னில்வைத்து
ஏகத்தியானம்செய்து—புட்டினில்
யேற்றும்பணவெடைசெந்தூரம்
நடுவினில் வைத்துருட்டி—புட்டினில்
நாவில்படாமல் விழுங்கிடவே
படுபாவிவியாதியெல்லாம்—நினைத்தால்
பறக்குமிதன்பேர்சொல்லிடவே
ஜன்னிபதின்மூன்றும்—காமம்
தாக்கிடும்குஷ்டம்எட்டுவகை
பின்னெழுதோஷமும்போம்—சொன்ன
பீலிகையெட்டுமகோதரம்போம்
வாதங்களொன்பதுவும்—கிட்டி
வந்திடும்பட்சம்தனுர்வாதம்
ஓதும்விரைவாதம்—வலியும்
உத்தமுடக்குநடுக்கலுடன்
அசதியும்கணுவாதம்—புண்ணு
அணைகிரந்திசூலையுடன்
கண்டத்தின்மாலையுடன்—உள்ளங்
கைதனில்ஊரல்கருமேகம்
வண்டுகடிகளும்போம்—கொடிய
வல்லபல்விஷத்தொல்லையும்போம்
சயித்திபந்தானேழும்—கொடி
தாகியயோனிபுத்துவிடும்
வைத்தியஞ்செய்கிறவன்—வலு
வாகியவியாதிக்கனுபானம்
தெரியாமல்செய்தாக்கால்—அவனை
தொடரும்வியாதியுமேசொல்வேன்

குறையறவனுபானம்—திரமாம்
கூர்ந்திடில்சந்தோஷமாய்விடுமே. (தந்தினத்)

## இதற்கு விபரம்

| | | |
|---|---|---|
| பூரம் | விராகனெடை | 4 |
| லிங்கள் | ,, | 8 |
| வீரம் | ,, | 2 |
| நெல்லிக்காய்க்கெந்தி | ,, | 2 |
| ரசச்செந்தூரம் | ,, | 1 |

இவைகளை இங்ஙனம் கூறிய எடைபோல் கூட்டி யரைத்தால் மாத்திரம் வாய் பிடிக்காது. குழந்தைகள் முதல் சகலருக்கும் கொடுக்கலாம். மேற்படி எடை போல் போட்டு 2-ஜாமம் அரைத்துச் சீசாவில் வைத்துக் கொள்ளவும். சகல வியாதிக்கும் உபயோகப்படுத்தலாம். கைகண்டது. இச்சாபத்தியம்.

## அகஸ்தியர் மூலிகை வண்ணம்

சம்புடனே வேர்விரையை உண்பவர்தம் கிராணிமூலம்
தெம்புடனே தீருமென்று கும்பமுனி தானுரைத்தார்
சித்திரபுரத்துமூலம் மெத்த ஆவலாய்க் கொணர்ந்து
சத்தாகிலும் கியாழம் வைத்தாகிலும் குடிக்கில்
பித்தமொடுசித்தமும் பெருத்ததொரு மேல்வயிறும்
அத்திசாரதாகமுடன் இத்தனைநோ யேகிவிடும்
நிலவாகைவேருரைக்கில் மலைபோலேஊதுவய
றலையாகுலையுமது நிலையாதுஏகும் நிஜம்
தும்பையதுதான் குடிக்கில் அம்பலத்துவேர்
பம்பரம்போலேகுழைத்துத் தின்பவர் வயிற்றுளைபோம்
கரிசலாங்கண்ணிமதம் பிரியாவசியமது
கரியாமிளங்கொடுண்ண தரியாதுபாண்டிருமல்
அவர் பிரமேகமே யறுமே.



சங்கங்குலைவேர்ப்பொடியை யுண்கவதில் மேகமெல்லாம்
இங்கிதமாயேகுமென்று மங்கைபாகர் தானுரைத்தார்
தழுதாழைவேர்சமூலம் வழுவாமலேகொணர்ந்து
நழுவாமலேயரைத்து விழுதோடவேயுணர்வை
சித்திமதில் வாதமெல்லாம் மெத்தவதில் சூலைகளும்
சத்தில்லாதோடுமித் தைத்தவிஷச் சூனியமும்
கொத்தானும் வேர்சமூலம் மெத்தாகவே யெடுத்து
விஸ்தாரமா யரைத்து மெத்த ஆவலாயுணர்வை
கட்டுகள் வலத்துசீதம் விட்டுவிடுமே யிடுப்பில்
குட்டுவலித் தானுமது திட்டமுடன் செய்யகலும்
முக்கான ஞழன்வேளை சுக்காகவே யுலர்த்தி
திக்காமலே யிடித்து விக்காமலே யருந்த
வயிறாதும் பேதிகளும் சுயரூபமாஞ் சுரமும்
தயவாகவே யடங்கும் நயமாகுங் காயசித்தி
ஆதண்டைத் தலைவலி யகற்றுமே.

கொல்லன் கோவைக் கிழங்கை நல்ல ஆவின்பாலிலுண்ண்
மெள்ளவே விஷங்களது வில்லடை வில்லாமலோடு
முத்தமெனும் மூலமதில் மெத்தவயிற்சேட னிற்குஞ்
சத்தமொடு தாகமுடன் நிற்குமுன்னில்லாது
[சொன்னேன்
இம்பூறல்வேர்சமூலம் தென்பதாகவே கொணர்ந்து
தம்பிரானையேனினைந்து தென்பதாகவேயுணர்வை
கூத்திருமல்கோழைஜலம் நாற்றமொடுசீ யகலும்
ஆத்திவிடுமேசுவாசம் பார்த்துபதமா யுணர்வை
சிவனார்தன்வேம்புதன்னை நவநாதர்பேர்வழுத்தி
உவமாகவேயுணர்வை தவமாகும்காயசித்தி
பங்கயஞ்செய்நீளுலகில் சங்கமற்றமூலிகைநூல்
மங்கைபாகர்சொன்னபடி சிங்காரமாயானுரைத்த
வாடாதோடை தோஷமகற்றுமே.

கொல்லன் பகவாளிவேரை மெல்லக்கொல்லியே
[கொணர்ந்து
நல்லக்குருவையரிசி மெள்ளவிடித்தேயடுப்பில்
பிட்டாகவேயவித்து மட்டாகவேயருந்த
கெட்டோம்கெட்டோமென்று விட்டோடும்
[மேல்வலிப்பு
பண்ணுரும்பூவுலகில் நன்னாரிவேர்தனை
மின்னாரவேகொணர்ந்து தின்னார்வேயகல்நோய்
சோகைக்காமாலைபித்தம் தாகமுடனே யசதி
வேகமானவெம்புதோஷம் போகபிரமியம்தீரும்
கூளாத்திநெற்கள்ளியிலை மீளாதகெர்ப்பவலி
தாளாமலோடு மென்று காளாஸ்திரி நாதருரை
குப்பையெனும் மேனிதன்னில் உப்பிஷங்கள்
[போக்கிவிடும்
அப்பையதில் கோழைசலம் துப்புறவாய்
[தானிருத்தும்
செப்பிய மகத்துவத்தைப் பாருமே.

பூவரசில் வேரநேகம் யேகிவிடுமே கரப்பான்
கூவிளையில் வெப்பெரிப்பு தீவினைக ளோடிவிடும்
கொடிவேலி யானதொரு கெடியான மூலிகையில்
துடியான அஷ்டகுன்மம் பொடியாகுமே கிரந்தி
செங்குன்றி நாமமதை முக்கியமுட னுரைக்க
கக்கிஷத் தலையின்நோவு மக்கணத்தி லோடிவிடும்
தூதுவேளை யானகற்பம் வேதமொழி யாளேபித்தம்
வாதமொடு பீளைசத்தி தாகமொடு தாதுபுஷ்டி
சம்பிரமுட னேகவும் தும்பையெனு மூலியது
வம்புபடு ரத்தமூலம் தம்பனம தாகுஞ்சொன்னேன்
உள்ளபடி யேயறுகு வெள்ளையதின் வேர்கொணர்ந்து
மெள்ளதினமே யருந்தச் சள்ளைபிர மியந்தீரும்
ஆடுதின்னாப் பாளைபுழுவாற்றும்.



வெள்ளையெனுஞ்சாரணியில் கள்ளிவிளிநோயகலும்
முள்ளியின் கருக்குரைக்கு பல்லின்வலிதானகலும்
கற்பூரவள்ளியிலை வைப்பாகவுண்பதற்கு
வெப்பாரிக்குத்தகலும் இப்பாரில்பாண்டுவுக்கு
சூரியன்றன்காந்திதனிற் சேரும்வெப்புச்சாந்தியதாம்
மீருமரிகாந்தினில் மேருகுளிர்ப்பேர்ந்துவிடும்
கொட்டையெனுமக்கரந்தை தட்டமுடனேயுத்த
மெட்டினில்வடித்தருந்த வெட்டையதகலுஞ்சொன்
ஆகாசக்கெருடன் விஷமாற்றுமே. [னேன்

கொம்பரக்குவேரநேகம் வம்புசுரம் போயகலும்
தென்பதுறும்காயசித்தி இன்பமுடனேயருந்த
பாசிதனில் நீர்கிரிச்சல் தோஷமொடுசூலையறும்
ஆசைகுத்துப் பாலைதனில் மாச்சுவிடும்மே பரவை
வன்னியிலூறுதுவயிறுண்ணத் தீருமென்றுமிக
சின்னியிலைச் சிறுசெறு தன்னில்வாரணமகலும்
கோளியாவரைதனில் நீள்களிகணைகளொடு
ஈளைவயிறாதல் வெப்பு கோளைமந்தகாசமறும்
சுண்டையதின்வேர்பொடியின் மண்டையதின் நீரகற்றும்
என்சொல்லியகடிகள் வண்டு கொல்லியாலோடும்
பாதிரிவேரநேகம் சாதுரிகமானதொளிர்
நாதருள் காணவென்று ஓதுமுனிவர்சொல்
ஆற்றலரி அஷ்டகுன்ம மாற்றுமே

விச்சுவெனு மூலிகையில் பச்சைநல்பால் கரந்து
கொச்சை யுள்ளமாதருக்கு சச்சகதவாசையிண்டு
பூராயமானதொரு தோராதசூனியங்கள்
ஆராவாரமதனால் மீராதகலுங்கண்டீர்
மல்லாரையென்றும்மிக சொல்லாத நற்கணைகள்
வெல்லாதவாதமென்னும் பொல்லாதநோயகலும்

எட்டியுடனே ரவையில் குஷ்டம்பதி னெட்டுமோடும்
திட்டமுடனே வீசும் அஷ்டகுன்மமே யகலும்

நீலியுற்ற வேரில்வளக் கோலியுற்ற நஞ்சகலும்
வேலியிற்றமேபருத்தி யாலேயுற்றவா தமறும்

நிலவேம்பினால் சுரங்கள் மலைவேம்பிலோடும் ஜன்னி
இலைவேம்பில் கட்டுவயர் தலைநோவல்பினுண்டனேகம்

குண்டுமணியின் கொடியால் உண்டநேகமேல்வினோதம்
செண்டுகலைமாதர்வந்து கண்டுகொள்ளுவார்கள் நிதம்
அத்திவேர்வயிற்றுக் கடுப்பை யாற்றுமே.

குண்ணிதன்வேர்வுணவை ஜன்னியுடன்வேர்மெத்த
நண்ணியசுரோணிதமும் விண்ணில்கண்டோடும்சிறு

பிள்ளைநீரகட்டலும் வெள்ளைவாதங்களோடும்
தள்ளைதோடாமூலியிலை மூளைநோய்கள்தானகலும்

வட்டமெனும்பிரமி தட்டதட்டச் சுரம்போகும்
குட்டியவிளாவுங் குமட்டிவரும் வாந்திசத்தி

பேய்ப்பீர்க்கினாலரத்தை வாய்பார்க்கவே யுணர்வை
போய்ப்பாயும் நஞ்சுவிஷம் சாய்ப்பாக வோடிவிடும்

பங்கதனில் மூலிகையின் மங்குசொரித் தேமல்களும்
பொங்கியண்ட வாதசன்னி இங்கிதமா யேகிவிடும்

மூலிகைப் பிரயோகமே சகலருக்கும்
ஈசன் துணையாகுமே.

## விஷவைத்திய சிந்தாமணி
## முற்றிற்று.

The Progressive Printers, Madras.

உலக ரகசியம் என்னும்

# பிரபஞ்ச உற்பத்தி ரூபா 4

பண்டிதர்களும் பத்திராதிபர்களும் புகழும் அரிய பெரிய நூல்

1. உலக காண்டம்
2. தேவ காண்டம்
3. மக்கள் காண்டம்
4. சமய காண்டம்

இதில் பூமி முதல் பதினான்கு லோகங்களின் அமைப்புக்கள், அந்தந்த லோகங்களில் வாழும் ஜீவர்களின் தன்மைகள், நமது பூலோகத்தில் பலவித கண்டங்களின் பிரிவுகள், அந்தந்த கண்டங்களில் வாழும் ஆண் பெண்களின் குணாகுண இரகசியங்கள், ஆண் பெண் ஒருவரை யொருவர் காதல் அடைதலும் கருத்தொருமித்தலும் ஆகிய இயற்கையின் ரகசியங்கள், கடிமணம் புரிந்து குறைவற்ற இன்பமடைவற்குறிய ஒழுக்க ரகசியங்கள், பெண்ணுக்கேற்ற ஆணும் ஆணுக்கேற்ற பெண்ணும் ஆராய்ந்தறியும் நுட்பங்கள், பெண்கள் ஆடவர்களின் சுபலட்சணங்கள், ருதுசாந்தி முகூர்த்தத்தின் தத்துவம், விவாக விதி, விவாகப் பொருத்தங்கள், விவாக ஒழுங்குகளின் கருத்துக்கள், புணர்ச்சி விதி ஆகிய உண்மை ரகசியங்கள், பிரப்பு முதல் இறப்பு வரையும் அடைதற்கான இன்ப முறைகளும் இல்லற ஒழுக்கநெறிகளும் நன்மை தீமை விதி விலக்குக்கள் ஆராய்ந்தறிதலும்ஆகிய இரகசியங்கள், ஆயுளை நீடிக்கச் செய்யும் பிராணாயாம முதலிய யோக முறைகள், பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய திருமூர்த்திகள் முதல் சிறுதேவதைகள் வரை எல்லா தெய்வங்களினுடைய மதத்துவேஷமற்ற உண்மை வரலாறுகள், சிவபெருமான் சக்தி விஷ்ணு முதலியவர்களின் அநந்த லீலா வைபவங்களையும் தசாவதாரத் தத்துவங்களையும், எல்லாக் கடவுளர்களுடைய படை கொடி விருது தேர் வாகனம் முதலிய சின்னங்களையும் பற்றிய உண்மைகள், வழிபடு முறைகள், இந்தியா, சீனா, ஜப்பான், ஜர்மனி, ருஷியா, ஐரோப்பா முதலிய எல்லாத்தேச மக்களினுடைய மதபேதங்கள் அவரவர் வணங்கும் தெய்வம் வழிபாடுகள் முதலிய இரகசியங்கள், சைவம், வைஷ்ணவம் இவற்றின் உட்பிரிவுகளும் அவற்றின் கொள்கைகளாதிய உண்மைகள் ஆகிய எண்ணற்ற விஷயங்கள் அடங்கியிருக்கின்றன மிகவும் சிறந்த நூல். கிளேஸ் பதிப்பு. தபாற் கூலி அணா 8

# கண்கட்டு வித்தைகள்

## 4 பாகங்கள் விலை ரூபா 2

கண்கட்டு வித்தையால் கற்பம் வசியமும், கொள்ளை சொக்குத் தூள் குறிசொல்லு மூலிகை, புருஷவசியம் புகல் ஸ்திரீவசியமும், வரிசை வழங்குதல், வாத்தியஜாலம், மூலிகைஜாலம், மோகன ஜாலம், தெய்வஜாலம், தீவர்த்திஜாலம், மயேந்திரஜாலம் மாம்பழ ஜாலம், சமுத்திரஜாலம் சங்கிலிஜாலம், அமேத்தியஜாலம் அக்கினி ஜாலம், வாத்தியஜாலம், மாடன் மந்திரம், எக்காளைஜாலம், எலு மிச்சை வித்தை, கோகர்ணஜாலம், கவில்ஜல ஸ்தம்பனம், பத்திர காளி வசியம் செப்பிடுவித்தை, பாதாள அஞ்சனம் பார்வைமை குறி சொலல், இத்தனை ஜாலவித்தைகள் கற்கலாம்.

## சில வித்தைளின் தலைப்பெயர்கள்

பலகோடிதீபவித்தை
கையில்நெருப்பெடுக்கும்வித்
தண்ணீரைப்பாலாக்கும்வித்
பாலைத்தண்ணீராக்கும்வித்தை
தண்ணீரில்விளக்கெரியும்வித்
தண்ணீரைநெய்யாக்கும்வித்
பிசாசுகாட்டும்வித்தை
மாம்பழம்முளைக்கும்வித்தை
வயிற்றில்கத்திகுத்தும்வித்தை
மீனைஅழைக்கும்வித்தை
திருட்டுபிடிக்கும்வித்தை
மூட்டுபூச்சியொழிக்கும்வித்
விளைவுகளைகெடுக்கும்வித்தை
பிரம்புஉச்சாடனவித்தை
சேலைஉச்சாடனவித்தை
பச்சைமரம்உதிரும்வித்தை
உலர்ந்தமரம்துளிர்க்கும்வித்
வாயில்நூலிழுக்கும்வித்தை
கண்ணைப்பிடுங்கிக்காட்டும்வித்
ரூபாயைஅழைக்கும்வித்தை
பொம்மைத்தலைபேசும்வித்தை
தலையில்தேங்காயுடைக்கும்வித்

கோழித்தலைகூவும்வித்தை
கண்ணில்சுப்பலேற்றும்வித்
தேவாலயம்காட்டும்வித்தை
பலவாத்தியம்கேட்கும்வித்தை
புட்டியில்பழமிறக்கும்வித்தை
தீபத்தைதலைகீழாய்காட்ம்வித
கண்ணில்நூலிழுக்கும்வித்தை
தேஸ்ம்பனவித்தை
அந்தரத்திற்குந்தும்வித்தை
அந்தரத்தில்நிற்கும்வித்தைகள்
சொம்புமேல்நடக்கும்வித்தை
நீர்மேல்நடக்கும்வித்தை
நீரமேல்உட்காரும்வித்தை
நீர்மேல்படுக்கும்வித்தை
முட்டைவிளையாடும்வித்தை
எட்சணிவித்தைகள்
மோகினிவித்தைகள்
சைனாதேசவித்தைகள்
பிரான்சிதேசவித்தைகள்
இங்கிலீஷ் வித்தைகள்
கார்ட்டுவித்தைகள்
சிக்கவித்தை

தென்னிந்திய புஸ்தகசாலை,
2-17, பவழக்காரத் தெரு, சென்னை.

THE PROGRESSIVE PRINTERS, MADRAS.